Registered as a Newspaper
பக்கங்கள் 12+XVI விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 01

திங்கட்கிழமை
27 நவம்பர் 2023

கார்த்திகை 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



சுடரேத்தி
கும்பிடுறதுக்கும்
போராட
வேண்டிக்கிடக்கு...

# பொலிஸ்மா அதிபர் நியமனம் இன்று விசேட கூட்டம்

கொழும்பு. நவ. 27
புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பது தொடர்பில் விசேட கூட்டமொன்று ஜனாதிபதி ரணில் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது என அறியமுடிகின்றது. (அ-ஒ-44)




# மாவீரர் நாள் இன்று!

யாழ்ப்பாணம், நவம்பர் 27
தமிழீழ தனியரசு அமைப்பதற்காக - தனிநாட்டுக்காக இறுதி மூச்சுவரை போராடி - களமாடி வீரச்சாவைத் தழுவிய வீரமறவர்களை - மாவீரர்களை - தவப்புதல்வர்களை - தமிழீழ மண்ணின் காவிய நாயகர்களை - தேசத்தின் காவல் தெய்வங்களை, தமிழர்கள் உணர்வுடன் பூசிக்கும் மாவீரர் நாள், தாயக தேசத்தில் இன்று உணர்வெழுச்சியுடன் நினைவு கூரப்படவுள்ளது. தமிழர் தாயகத்தில் 31 இடங்களில் மாவீரர் இல்லங்கள் பொது இடங்கள் மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள் அந்தந்த ஏற்பாட்டுக் குழுக்களால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

11



# மிகப்பெரிய அநியாயம்!

## சரவணபவன் காட்டம்

யாழ்ப்பாணம், நவ. 27
உயிரிழந்தவர்களை நினைவுகூரும் உரிமை தமிழர்களுக்கு இல்லையா? இந்த உரிமையைத் தட்டிப்பறிப்பதைப்போன்ற அநியாயம் இந்த உலகத்தில் வேறில்லை. இவ்வாறு சாடியுள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன்.
காரைநகரில் மாவீரர் நாளை இன்று முன்னெடுக்கவிருந்த பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்

11

# மாவீரர் நாளை கண்காணிக்கக்கூடாது

## ஜஸ்மின் சூக்கா வலியுறுத்தல்

ஜொகனஸ்பேர்க், நவ. 27
உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நம்பகரமானதாகச் செயற்பட்டு, வெற்றியடையவேண்டுமாக இருந்தால், அரச ஆதரவுடன் நடைபெறும் வன்முறைகள் நிறுத்தப்படுவதுடன், நவம்பர் 27ஆம் திகதி நடைபெறும் நிகழ்வுகளைப் பாதுகாப்புப்

11

## உதயனில் குருதிக்கொடை இன்று

யாழ்ப்பாணம், நவ. 27
உதயன் பத்திரிகையின் 38ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை உதயன் பணிமனையில் குருதிக்கொடை நடைபெறவுள்ளது. குருதிக் கொடை வழங்க ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம். (அ-ஒ-5)



# பிரபாவின் பிறந்தநாள் பெரும் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 27
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 69ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறையில் உள்ள அவரின் இல்ல வளாகத்துக்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாண நகரம் உட்பட பல்வேறு பகுதிகளிலும் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு இனிப்புகள் வழங்கப்பட்டது.


11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் உரிமைக்காக உயிர் நீத்த எம் மறவர்களுக்கு அஞ்சலி





இன்று உதயன் 39ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கிறான். தமது இன்னுயிரையும் ஆகுதியாக்கி உதயனின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உரமளித்த பணியாளர்களை இந்தத் தருணத்தில் உள்ளத்தில் கனலும் உணர்வுகளுடன் நினைவில் கொள்கிறோம். அவர்களின் அர்ப்பணிப்பு, தியாகம் என்பவற்றின் பெறுமதியுணர்ந்து அவர்கள் நடந்த பாதையின் தடம் மாறாது தொடர்வோம் என்ற உறுதியுடன் அவர்களை எமது இதயங்களில் அஞ்சலிக்கின்றோம்.



# மஹிந்தவுக்கு 'ஆப்பு'

## போட்டுக் கொடுக்கிறார் நீதி அமைச்சர் விஜயதாஸ

**கொழும்பு, நவ.27**

**அரசமைப்பின் அடிப்படை உரிமை மீறியமைக்காக பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக குடியுரிமையை நீக்குவதற்கு சட்ட ஏற்பாடுகள் உள்ளன என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அதற்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப் படவேண்டும்.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் அதற்கு எதிராக நீதிமன்றம் வழங்கவேண்டிய தீர்ப்பையே உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது. அதுவொரு பெறுமதியான தீர்ப்பாகும். அதை யாராலும் சவாலுக்குட்படுத்த முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

குடியுரிமையை இரத்துச் செய்வதற்கான யோசனையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அமைச்சரவை அனுமதியுடன் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றமுடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# கிரிக்கெட்டால் சூடாகும் நாடாளுமன்றம்

கொழும்பு, நவ. 27

கிரிக்கெட் தொடர்பில் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உப குழு தற்போது கிரிக்கெட் தொடர்பில் நிலவும் நெருக்கடிகளுக்கு விளையாட்டுத்துறை அமைச்சரின் அதிகாரங்களை இல்லாதொழிப்பதற்கு அல்லது என சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் தொடர்பில் எழுந்த நெருக்கடிகளை நிவர்த்தி செய்யும் வகையிலேயே அமைச்சரவை உபகுழு அமைக்கப்பட்டது.

அமைச்சரவைக்கு அமைச்சரவை உபகுழு அமைக்க அதிகாரம் உண்டு என்றும் அவர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார். (எ-இ)

# எதிர்க்கட்சிகள் மீது பழிபோடும் ரணில்!

கொழும்பு, நவ. 27

எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் நாட்டைக் குறுகிய காலத்தில் நெருக்கடியில் இருந்து மீட்டிருக்க முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்றுமுன்தினம் நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதால் பெற்றுக்கொள்ளும் அனுபவம் மூலம் எதிர்க்கட்சிகள் அடுத்த தேர்தல் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார். (எ-இ)

# சபைகளை கலைப்பதே ஊழல்களைத் தடுக்கும்

## அமைச்சர் ரொஷான்

கொழும்பு, நவ. 27

ஊழல்வாதிகள் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதை தடுக்கும்வகையில் தற்போதுள்ள கிரிக்கெட் சம்மேளனங்களின் உத்தியோகபூர்வ சபைகளை கலைத்துவிட்டு புதிய உத்தியோகபூர்வ சபையை நியமிக்க வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மஹாநாஹிமி மல்வத்து தேரரிடம் நேற்றுமுன்தினம் ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (எ-இ)



# டுபாய் பறக்கிறது ரணில் பட்டாளம்?

கொழும்பு, நவ. 27

ஐக்கிய நாடுகளின் காலநிலை தொடர்பான மாநாட்டுக்கு ஜனாதிபதி ரணில் தலைமையிலான 80 அதிகாரிகள் அடுத்தவாரம் டுபாய் செல்லவுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சர்களான அலி சப்ரி, கஞ்சன விஜயசேகர, கெஹலிய ரம்புக்வெல, ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜயவர்த்தன உள்ளிட்ட குழுவினரே ஜனாதிபதியுடன் பயணிக்கவுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டச்சு வீதிக்கு வடிகால்

மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி நவ. 27

சாவகச்சேரி டச்சு வீதியில் வடிகால் அமைக்கப்படவேண்டும் என்று பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் பொதுமக்கள் மாவட்டச் செயலருக்கு முறையிட்டபோதும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பொதுமக்களின் கோரிக்கையை அடுத்து வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அங்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர். (எ-ரி-9)

# தேவை - 214 இருப்பது -128

யாழ்ப்பாணம், நவ.27

வடக்கு மாகாணத்துக்கு அதிபர் தரம் I ஐச் சேர்ந்த 214 பேர் தேவையாகவுள்ள நிலையில், தற்போது 129 பேரே உள்ளனர்.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் கோரப்பட்ட தகவல்களுக்கு, வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு வழங்கிய பதிலில் இந்தத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் 95 1 ஏபி பாடசாலைகளும், 124 1 சி பாடசாலைகளும் உள்ளன. அவற்றில் 128 பாடசாலைகளில் மட்டுமே அதிபர் தரம் I ஐச் சேர்ந்த அதிபர்கள் உள்ளனர். அதேநேரம் அதிபர் தரம் I ஐச் சேர்ந்த 21 பேர் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவி இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II மற்றும் III க்கு நிரற்படுத்தப்பட்ட பதவி என்பது இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவிநிலை தொடர்பில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. (எ-214)



# காய்ச்சல் இருந்தால் வீட்டில் நிறுத்துங்கள்

பெற்றோருக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, நவ.27

குழந்தைகளுக்குக் காய்ச்சல், இருமல் மற்றும் சளி காணப்பட்டால் அவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்க்கவேண்டும் என்று பெற்றோருக்கு அறிவுறுத்தியுள்ளது சுகாதார அமைச்சு. தற்போது பரவலாகக் காணப்படும் காய்ச்சலுடன்கூடிய சுவாசநோய் கொரோனா வைரஸ் மற்றும் இன்புளுவன்ஸா போன்றவற்றின் தாக்கங்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் சந்திம ஜீவந்திர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

# ஓடியவர் ஜங்கரநேசன் சீறுகின்றார் சிவாஜி!

*மனிதச் சங்கிலியால் அக்கப்போர்*

யாழ்ப்பாணம், நவ.27

2020 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் முன்னெடுக்கப்பட்டிருந்த தியாக தீபம் திலீபன் நினைவு உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்காது பொலிஸ் கைதுக்குப் பயந்து ஓடியவர் ஜங்கரநேசன். அவர் இனிமேலாவது விசமத்தனமான பரப்புரைகளை மேற்கொள்ளாதிருக்க வேண்டும்-இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயம் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அகிம்சை ரீதியான போராட்டங்களில் மிகவும் வலுவான போராட்டமான மனிதச் சங்கிலிப் போராட்டத்தின் அர்த்தத்தை சில அரசியல்வாதிகள் கொச்சைப்படுத்திவிட்டார்கள் என பொ.ஜங்கரநேசன் அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலடியாகவே எம்.கே. சிவாஜிலிங்கம் இவ்வாறு கூறியுள்ளார்.

மனிதச்சங்கிலிப் போராட்டம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை என்று நாங்கள் ஆரம்பத்திலேயே கூறியிருந்தோம் என்றும் சிவாஜிலிங்கம் கூறியுள்ளார்.

(எ-100)

# தேங்கும் வெள்ளம் பெருகும் நுளம்பு!

சாவகச்சேரி, நவ.27

தென்மராட்சியின் பல இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளதால், டெங்குத் தொற்றுப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குடியிருப்பாளர்கள் தங்கள் குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் கோரியுள்ளனர்.

நீரேந்துப் பொருள்களைச் சேகரித்துக் கழிவுகளை உரப்பைகளில் கட்டி வைத்து உள்ளூராட்சி சபைகளின் கழிவுகள் அகற்றும் வாகனத்தில் ஒப்படைக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, 3 தினங்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் அருகிலுள்ள மருத்துவமனையில் குருதிப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. (எ-9)

# 2,000 பேரை கொல்லும் நுண்ணுயிர் எதிர்ப்பி!

கொழும்பு, நவ.27

நாட்டில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பயன்பாட்டால் வருடம் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 800 பேர்வரையில் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. உலகளாவிய ரீதியில் வருடம் ஒன்றுக்கு நுண்ணுயிர் எதிர்ப்பின் பயன்பாட்டால் 7 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## ப தினம் தெரியுமோ?

இண்டைக்கு மாவீரர் நாள். எல்லாத் துயிலுமில்லத்திலையும் சனம் சும்மா அள்ளும். எள்ளுப் போடக்கூட இடமிருக்காது. எங்க பார்த்தாலும், மஞ்சள் - சிவப்புக் கொடியளும், தீபமும், பூவும், கண்ணீருமா அந்தத் துயிலுமில்லங்கள் உணர்ச்சி பூர்வமா, ஒரு கோயில் மாதிரி இருக்கும். ஆனால் நாளைக்கு? ஒரு நாலைஞ்சு பேர் கட்டின கொடியளையும், தீபக் கம்பியளையும் கழற்றி அடுக்கி வைப்பினம். அதுக்குப் பிறகு ஒருத்தருக்கும் அந்தத் துயிலுமில்லங்களைப் பற்றி நினைப்பிருக்காது. எல்லாரும் அவரவர் வேலையைப் பாக்க வெளிக்கிட்டிடுவம்.

இந்த மாரிமழைக்கு எல்லா இடத்திலையும் புல்லு மண்டிப்போய், பத்தைக்காடாகி, குப்பைமேடாகி இலையான்கூட அங்க மொய்க்காத இடமா பதினொரு மாசமும் துயிலுமில்லம் இருக்கும். அடுத்த கார்த்திகை பிறக்கத்தான் எங்களுக்கு திரும்பவும் மாவீரர் நாளைப் பற்றியும், மாவீரர் துயிலுமில்லங்களைப் பற்றியும் நினைப்பு வரும். அதுக்குப் பிறகுதான் மண்வெட்டி, பிக்கானோட சிரமதானம் எண்டு ஒரு குரூப் இறங்கும். இன்னொரு குரூப் வெளிநாட்டில காசு சேர்த்து துயிலுமில்லத்துக்கு கல்லறை, வளைவு கட்டப் போறமெண்டு வருவினம். ஆனால் சிக்கல் என்னெண்டால் எங்களைவிட மாவீரர்நாளை ஞாபகம் வைச்சிருக்கிறது ஆமிக்காரரும், அவையின்ர புலனாய்வுப்பிரிவும் தான். அதால எங்களுக்கு முதலே கார்த்திகை பிறந்தவுடன எல்லா மாவீரர் துயிலுமில்லங்களிலையும் அவையின்ர கண்காணிப்பு இருக்கும். அதால அங்க ஒரு புல்லுப் பிடுங்கினாக் கூட அவைக்குத் தெரிய வந்து, அதுக்கு அவை தடை போட்டு, கோர்ட்ஸூக்குப் போய் பெரிய பிரகண்டமாகிடும். ஒவ்வொரு வருசமும் இந்தக் கூத்துத்தானே நடக்குது.

உண்மையில நாங்கள் மாவீரரையும், அவையின்ர தியாகத்தையும் மதிக்கிறம் எண்டால் இண்டைக்கு துயிலுமில்லம் போய், தீபமேத்துரதோட எல்லாம் சரி எண்டு இருக்கக் கூடாது. அந்தத் துயிலுமில்லங்களை எப்பவும் புனிதமான ஒரு கோயில் மாதிரி வைச்சிருக்கப் பழகவேணும். ஒவ்வொரு துயிலுமில்லத்துக்கும் ஒரு பணிக்குழுவை உருவாக்கி, அவை மூலமா காசு சேர்த்து, துயிலுமில்லங்களை ஒவ்வொரு நாளும் சுத்தமா வைச்சிருக்கிறதுக்கு ஒரு ஏற்பாட்டைப் பண்ணலாம். அதை விட உந்தக் கல்லறை, வளைவு எல்லாத்தையும் கார்த்திகையில தான் கட்டவேணும் எண்டிருக்காமல், முதலே மெல்ல மெல்ல ஒவ்வொண்டா கட்டினா அது பெரிசாத் தோற்றாது. எப்பவாவது இருந்திட்டு ஒண்டைச் செய்தாத்தான் ஆமி, பொலிஸூக்கு அது கண்ணை உறுத்தும். எப்பவுமே துயிலுமில்லத்தில வேலை நடந்து கொண்டிருந்தால் அவைக்கும் அது பழகிப்போய், பிரச்சினையளும் குறைஞ்சிடும்.

இண்டைக்கு தீபமேத்தேக்க, இனிமேல் துயிலுமில்லங்களையும் வடிவாப் பேணுவம் எண்டு மனசுக்க உறுதி எடுத்தமெண்டால் நல்லது.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்கள்

## பெண் கைது

யாழ்ப்பாணம், நவ. 27
கோப்பாய் மத்தி கூழையப்பர் கோயில் பகுதியில் கசிப்பு வழத்த சந்தேகத்தில் 62 வயதுப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். ஒன்றரை லீற்றர் கசிப்பு, மூன்று லீற்றர் கோடா மற்றும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.
உரும்பிராய் செல்வபுரத்திலும் ஒன்றரை லீற்றர் கசிப்புடன் 30 வயதுடைய நபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-23)

## இளைஞன் கைது

வவுனியா, நவ.27
வவுனியா, தோணிக்கல் பகுதியில் வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்டு இருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே 6 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தலைமறைவாக இருந்த வவுனியா, 4ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். (எ-110)

## 40 பேர் கைது

கொழும்பு, நவ.27
வெல்லம்பிட்டிய சிங்கபுரவில் நான்கு பெண்கள் உட்பட 40 பேர் சட்டவிரோதமான பொருள்கள் மற்றும் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் இராணுவத்தினரால் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன. (எ-இ)

## துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு, நவ.27
உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்களையும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு, கைத்துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
தங்காலை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

## கஞ்சா மீட்பு

முல்லைத்தீவு, நவ.27
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தில் வீட்டில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 37 வயதுடைய ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். வீட்டில் இருந்து 1.5 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-19)

## கமரா உடைப்பு

கொழும்பு, நவ.27
பூஸா சிறைச்சாலையில் பொருத்தப்பட்டிருந்த 23 பாதுகாப்புக் கமராக்கள் கைதி ஒருவரால் உடைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனிய இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். அவசரப்பட்டு அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடவேண்டாம்.

**இடபம்:** தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள்.

**மிதுனம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களைத்ள தீட்டுவீர்கள்.

**கடகம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்:** எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களிடம் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பூர்வீக சொத்துப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**துலாம்:** கணவன்–மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும்.


**விருச்சிகம்:** ஒரேநாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்கவேண்டி வரும். எதிர்பாராத அலைச்சலும் மனக்குழப்பமும் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** ஆன்மீகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காகச் சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

**கும்பம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. நெடுநாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார்.

**மீனம்:** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் நெளிவுசுளிவுகளை கற்றுக்கொள்வீர்கள்.



தற்போது பெய்துவரும் மழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. சமனலவெவ நீர்த்தேக்கத்தின் வான்கதவு 17 ஆண்டுகளின் பின்னர் தற்போது திறக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நட்டஈடு கோரும் ஷானி



கொழும்பு, நவ.27
குற்றப்புலனாய்வுத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஷானி அபயசேகர ஒரு பில்லியன் ரூபா நட்ட ஈடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.
தவறான குற்றச்சாட்டின் அடிப்படையில், நீதி அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கப்பட்டுள்ளது என்று அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.
முன்னாள் மாவட்ட பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன மீது சோடிக்கப்பட்ட வழக்கில் ஷானி அபயசேகர கைது செய்யப்பட்டு பத்து மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.
2013ம் ஆண்டு பிரபல வர்த்தகர் ஷியாம் கொலை வழக்கில் முன்னாள் மாவட்ட பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன மீது பொய்க் குற்றம் சாட்டப்பட்டிருந்தது என்றும் அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். (எ-6)

## மாவீரர் அஞ்சலி தேவையற்றதாம்

கொழும்பு, நவ.27
சிறீதரன் போன்றவர்கள் இனவாதத்தைப் பரப்பி வடக்கில் சுடுகாடுகளையே உருவாக்கினார்கள். தற்போது செய்ய வேண்டியது மாவீரர் தின நிகழ்வு அல்ல. நாட்டை முன்னேற்றுவதற்காக அனைவரும் இணைந்து பாதீட்டில் உள்ள வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் அனுபா பஸ்குவால் தெரிவித்தார். வடக்கு என்பது ஒரு தரப்புக்குச் சொந்தமானது அல்ல. அது எம் அனைவருக்கும் சொந்தமானது. அதேபோல்தான் கிழக்கு, தெற்கு, மேற்கு என எல்லா பகுதிகளும் எம் அனைவருக்கும் சொந்தமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நெருப்பாற்றில் நீச்சல்!


இன்று கார்த்திகை 27. தமிழர்களின் வேணவாக்களை வலியுறுத்தி வித்தாகிப்போன மாவீரர்களின் கல்லறைகள் கண்ணீரால் கழுவப்படும் நாள் இன்று. இந்த நாளிலேயே தமிழர் உரிமைக்காக பேனா தூக்கிய உதயனும் வந்துதித்தான். உங்கள் உதயனுக்கு இன்று வயது 39.

'அரசியல், பொருளாதார சுதந்திரம் மலரவேண்டும். சமூக சமத்துவமும் சகோதரத்துவமும் பூத்துக் குலுங்கவேண்டும். ஈழம் வாழ் தமிழ் மக்கள் உலகின் ஏனைய பகுதி மக்களுக்கு இணையாக உயரவேண்டும். அதற்கேற்ற அபிவிருத்தியும் உழைப்பும் இந்தப் பூமியில் செறிந்து பரவவேண்டும். எங்களிடம் உள்ள கல்வி, மனிதசக்தி முதலான பல்துறை ஆற்றல்களையும் ஒருமுகப்படுத்தவேண்டும். சொந்த மண்ணின் வளங்களைக் கண்டறிந்து அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தவேண்டும். எமது வருங்காலச் சந்ததிச் செல்வங்கள் வேலைவாய்ப்புக்கும் ஜீவனத்துக்கும் கொழும்பையும் பிறநாட்டுத் தலைநகரங்களையும் நாடாதிருக்கச் செய்ய வேண்டும். தமிழர் தமது பிறந்த மண்ணில் சகல உரிமைகளுடனும் வசதிகளுடனும் முதலாந்தர பிரஜைகளாக வாழவேண்டும். தம்மைத்தாமே ஆண்டு தமது பணிகளைத்தாமே நிர்வகித்து அன்னை மண்ணின் வளம் காணுதல் வேண்டும். இதுவே உதயனின் ஆசையும் அபிலாஷையும். தமிழ்ப் பெருமக்கள் இதனை ஈட்டுவதற்காக உதயன் தன்னை அர்ப்பணம் செய்வான். அந்த அர்ப்பணமே அவனது உதயநாள் சங்கற்பம்' என்று தனது உதய வேளையில் உதயன் உறுதிபூண்டான்.

அவன் வரித்துக்கொண்ட இலட்சியத்துக்காக, இலக்குக்காக இன்று வரையில் இம்மியும் பிசகாது 'துளியளவும் விட்டுக்கொடாது' உறுதியுடன், 'உங்கள் ஆதரவால் வலிமையுடன் கருத்துச் சமராடிக் கொண்டிருக்கின்றான். உதயன் நெருப்பாறுகளைக் கடந்தே வந்திருக்கின்றான். இன்னமும் எரிமலையாகக் கொதித்துக் கொட்டிக்கொண்டிருக்கும் அந்தத் தணல்களுக்கு மேலாகவே அவன் பயணித்துக் கொண்டிருக்கின்றான். இவை சுயதம்பட்டம் அல்ல. மீளப் பெறமுடியாத இழப்புகளை உதயன் இன்றும் சந்தித்துக் கொண்டிருப்பதற்கு இதுவே காரணம்.

அடித்தார்கள், உதைத்தார்கள், எரித்தார்கள், சுட்டும் கொன்றார்கள், வழக்குகளும் போட்டுப் பார்த்தார்கள் ஆனால் உதயனின் பயணத்தை எவராலும் நிறுத்த முடியவில்லை. தடைகள் எல்லாம் படிகளாக மாறியது உங்கள் ஆதரவினால் மாத்திரமே. என்றென்றும் உங்களுக்கு உதயன் நன்றியுடையவன்.

'தம்மைத்தாமே ஆண்டு, தமது பணிகளைத் தாமே நிர்வகித்து அன்னை மண்ணின் வளம் காணுதல் வேண்டும்' என்று உதயநாள் சங்கற்பத்தில் உறுதிபூண்டதை அடைவதற்காக உதயன் என்றும் உழைப்பான். அவனுக்கு எப்போதும், களமாடி வீரகாவியமான எங்கள் வீரர்கள், பேனாப் போராளிகள் தம் ஆசிகளை வழங்குவார்கள்.



# சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் இணையப் பாதுகாப்புச் சட்டம்!

**கொழும்பு, நவ.27**

**வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆய்வொன்றில், இணையவழி பாதுகாப்புச் சட்டவரைவு தொடர்பில் தங்களுக்குத் தெரியும் என்று கூறியவர்களில் 56 வீதமானவர்கள் இது சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் என்று கூறியுள்ளனர்.**

'சமூக ஊடகங்களில் நடத்தையை ஒழுங்குபடுத்தும் சட்ட வரைவை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது, அதைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?' என்ற கேள்விக்கு பதிலளித்தவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் (34 வீதம்) 'ஆம்' என்று பதிலளித்தனர்.

'ஆம்' என்று கூறியவர்களில், 56 வீதமானவர்கள் 'சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் சுதந்திரத்தை இது மட்டுப்படுத்தும்' என்றும், 25 வீதமானவர்கள் 'அதிக மாற்றத்தை ஏற்படுத்தாது' என்றும், 19 வீதமானவர்கள் 'சமூக ஊடகங்களின் தவறான பயன்பாட்டைக் குறைக்கும்' என்றும் கூறியுள்ளனர். அதேவேளை, நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள சட்டவரைவு தனிப்பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் அதிலுள்ள 31 வாசகங்களில் திருத்தம் செய்யப்படவேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (எ-இ)

# வீணாக்கப்பட்டது ரூ. 349 மில்லியன்!

கொழும்பு, நவ.27

2022ஆம் ஆண்டு அரச மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்ட மருத்துவப் பொருள்களில் 349 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள், சத்திரசிகிச்சை மற்றும் ஆய்வுக்கூடப் பொருள்கள் பாவனையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

தரக்குறைவு காரணமாகவே இவை விலக்கப்பட்டன என்று தேசிய கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் மருந்துகளின் பெறுமதி மட்டும் 32 மில்லியன் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மருத்துவர்களுக்கு 75,000/=

கொழும்பு, நவ.27

மருத்துவர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளை சுகாதார அமைச்சு தயாரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சேவையில் இணையும் மருத்துவர் ஒருவரின் அடிப்படைச் சம்பளத்தை 75 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க அதில் முன்மொழியப்பட்டுள்ளது. தற்போது மருத்துவர் ஒருவரின் அடிப்படைச் சம்பளம் 54 ஆயிரம் ரூபாவாகும். (எ-இ)

## நாளை

28.11.2023

செவ்வாய்க்கிழமை

**கார்த்திகை 12**

**விநாயகர் விரதம் ஆரம்பம்**

சுபநேரம் : 10.43 - 12.13

ராகுகாலம் : 03.13 - 04.43


## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்."

-ஸ்டேர்லிங் மோர்ட்டன்
(அமெரிக்க அரசியலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலியாட்டம் குப்பிழான் விக்கினேஸ்வரா முதலிடம்!

யாழ்ப்பாணம், நவ. 27
புலியாட்டப் போட்டியில் குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் தேசியமட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளது. சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை பாடசாலைச் சமூகத்தால் முன்னெடுக்கப்பட்டது. (ச-27)

# முதியவர்களுக்கு நலத் திட்டங்கள்!

மன்னார், அநுராதபுரத்தில் நடைமுறை

மன்னார். நவ. 27
முதியோர் நலன்கருதி சமூகம்சார் அபிவிருத்திப் பணிகளை மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் இயங்கி வரும் 'டெப்பிலிங்' நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

இந்தத் திட்டத்தின் மூலமாக எதிர்காலத்தில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்து ஒன்றுகூடி ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் மன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கூட்டத்தில் மன்னார், அநுராதபுரம் திட்ட இணைப்பாளர் ஜெயடியூலா தெரிவித்துள்ளதாவது;

முதியோர்களுக்காக நாங்கள் மன்னாரில் 10, மருத்துவ முகாம்களையும் அநுராதபுரத்தில் 20 மருத்துவ முகாம்களையும் முன்னெடுத்துள்ளோம்.

முதியோருக்கான உடல், உள, நல ஆலோசனைகள் மற்றும் அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்தல் ஆகியவை வீடு வீடாகச் சென்று செயற்படுத்தப்படுகின்றன. - என்றார். (ச-60)

# அரசமைப்பு பேரவை அதிகாரம் மழுங்கடிப்பு



கொழும்பு, நவ. 27

**அரசமைப்புப் பேரவைக்கு எதிராக தெரிவுக்குழுவொன்று அமைக்கப்படும் என ஜனாதிபதி கூறுகிறார். அவர் அவ்வாறு எப்படிச் செய்ய முடியும்?**

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அரசமைப்புப் பேரவைக்கு 10 ஆவது உறுப்பினரை நியமிக்கும் விவகாரம் தொடர்பில் எனக்கு எதிராகவும் ஜனாதிபதி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்த னின் பெயரை முன்மொழிந்தது. அந்த நியமனத்தை ஏன் ஏற்கவில்லை? அரசமைப்புப் பேரவைக்கு எதிராக தெரிவுக்குழுவொன்று அமைக்கப்படும் என ஜனாதிபதி கூறியுள்ளார். அவ்வாறு எப்படிச் செய்ய முடியும்? அரசமைப்புப் பேரவைக்கு எதிராக ஜனாதிபதியால் இவ்வாறு செய்ய முடியாது. ஜனாதிபதிக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்தும் ஓர் அங்கமாகவே அரசமைப்புப் பேரவை உருவாக்கப்பட்டது- என்றார். (ச-44)

# அலுவலகம் திறப்பு

முல்லைத்தீவு, நவ. 27
புதுக்குடியிருப்புப் பிரதேசசபையின் உப அலுவலகம் உடையார்கட்டுப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது.

இந்த அலுவலகம் ஊடாக விசுவமடு, வள்ளிபுனம், உடையார்கட்டு மற்றும் சுதந்திரபுரம் மக்கள் தங்கள் சேவையை இலகுவாகப் பெற்றுக் கொள்ளமுடியும். (ரி-75)

# கணினிப் பயிற்சி

கிளிநொச்சி, நவ. 27
பூநகரி பிரதேச செயலக அலுவலர்களுக்கான கணினி பயிற்சி வகுப்புகள் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றன. வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகின் பணிப்பாளர் இ.கர்ஜினால் பயிற்சிநெறிக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. (ரி-6)

# நெடுங்கேணியில் மண் தினம்

வவுனியா, நவ. 27
வவுனியா வடக்குப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட நெடுங்கேணி நாவலர் கிராமத்தில் உலக மண் தினத்தை முன்னிட்டு உள்ளூராட்சித் திணைக்களத்தால் செயற்படுத்தப்படும் "எமது கிராமத்தை பிளாஸ்ரிக் கழிவுகளற்ற பசுமையான அழகான கிராமமாக மாற்றியமைப்போம்" எனும் செயற்றிட்டம் நாவலர் சனசமூக நிலைய மாணவர் குழுவால் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்வில் மரக்கன்றுகளை நாட்டுதல், எமது சூழலை தூய்மையாகப் பேணுதல் தொடர்பான விழிப்புணர்வு த்துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது, சுவர் ஓவியம் வரையும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. (ரி-75)

# நான்கு அதிபர்களுக்கு வவு.வில் மதிப்பளிப்பு

வவுனியா, நவ. 27
வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியினால் வவுனியாவின் வடக்கு வலயம் மற்றும் தெற்கு வலயத்தைச் சார்ந்த நான்கு அதிபர்களுக்கு மதிப்பளிப்பு நிகழ்வு வவுனியா கல்வியியற்கல்லூரி பிரதான மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

வவுனியா கல்வியியற்கல்லூரி பீடாதிபதி ஜி.கமலகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதிகளாக மகாவலி கல்வியியற் கல்லூரி கண்டி பீடாதிபதி மற்றும் கல்வி அமைச்சு இசுருபாய ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-75)



# சாதனை நாயகி கௌரவிப்பு



தடகளப் போட்டியில் உலகளவில் இலங்கைக்குப் பெருமை சேர்த்த முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனையை கௌரவப்படுத்தும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

பிலிப்பைன்ஸில் அண்மையில் நடைபெற்ற தேசிய மாஸ்டர்ஸ், சிரேஷ்ட தடகள வீரர்கள் விளையாட்டுப் போட்டியில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட முல்லைத்தீவு முள்ளிய வளையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற சிறைச்சாலைகள் உத்தியோகத்தர் திருமதி அகிலத்திருநாயகி இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றார்.

அவரைக் கௌரவிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் எஸ்.குணபாலன்,பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் லிங்கேஸ்வரன் , பி உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ரி -19-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்
### வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான கிளைக்குழு தெரிவிக்கான வாக்களார் இடாப்பு 2023.11.25 ஆம் திகதி முதல் கிளை நிலைகளிலும் கிளை நிலையம் இல்லாத இடங்களில் கிராமசேவையாளர் அலுவலகங்களிலும் தலைமைப் பணி மனையிலும் காட்சிப்படுத்தப்படுகின்றது. இவ்வாக்காளர் இடாப்பில் ஆட்சேபனைகள் இருப்பின் 2023.11.25ஆம் திகதியில் இருந்து 2023.12.09 ஆம் திகதி வரையும் **செயலாளர் புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்** எனும் முகவரிக்கு அறிவித்தல் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலும் குறிப்பிடப்பட்ட திகதிக்கு பிந்திய ஆட்சேபனைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்**
**புதுக்குடியிப்பு ப.நோ.கூ. சங்கம்**
**புதுக்குடியிருப்பு.**

(CR 41233)(k-1)


## மரண அறிவித்தல்

### பஞ்சாட்சரம் கந்தசாமி
**(ஓய்வுபெற்ற வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்)**



**பிறப்பு:13.08.1954 இறப்பு:26.11.2023**

பூநகரியினை பிறப்பிடமாகவும் அரியாலை சாஸ்திரியார் வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் கந்தசாமி அவர்கள் (ஓய்வுபெற்ற வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்) நேற்று (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம் நல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற வர்களான யோகராஜா கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோராணியின் பாசமிகு கணவரும், சுதாயினி, நிருஜன் (பிரான்ஸ்), தர்சன், தனுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னலட்சுமி, கனகசபாபதி, சிவஇந்திராணி ஜெயலட்சுமி, ஜெயமலர், செல்வமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதாகரன் (RDA), நிலோஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சற்குணேஸ்வரி, குமாரதாஸ் மற்றும் வைகுந்தவாசன் காலஞ்சென்ற புஸ்பகலாதேவி மற்றும் புனிதராணி, மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கார்த்திகன், துசானி, தீபிகா, ஜாமிகா, ஜத்மிகா, ஆத்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2023) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் சாஸ்திரியார் வீதி, அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**இல.33, சாஸ்திரியார் வீதி,**
**அரியாலை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 4233 975**

(CS 27102)A-1


## வாடகைத்தாய் தேவை

குழந்தை இல்லாத தம்பதியினர் வாடகை தாய் மூலம் குழந்தை பெற்று கொள்ள விரும்புகின்றனர். வாடகை தாயாக விரும்புகின்றவர் எம்மை தொடர்பு கொள்ளவும். வயது எல்லை 25 முதல் 35 வரை உங்கள் விபரங்கள் எல்லாம் இரகசியமாக பாதுகாக்கப்படும். **மேலதிக விபரங்களுக்கு**

**சசி : 00447555593074 Whats App மட்டும்**



## புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம் (வ.து)
### பதவி வெற்றிடங்களுக்கான வெளிவாரி விண்ணப்பம் கோரல்

மு/புதுக்குடியிருப்பு - ப.நோ.கூ.சங்கத்தின் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**விண்ணப்ப முடிவுத்திகதி 2023.12.12ம் திகதி ஆகும்.**

**01. பதவிக்கான பெயர் : கணக்காளர்**
குறியீட்டு இலக்கம் : 104/08
சம்பள அளவுத்திட்டம் : 20665 - 260 x 10 - 280 x 10 - 26065

**02. பதவிக்கான பெயர் : களஞ்சியப்பொறுப்பாளர்**
குறியீட்டு இலக்கம் : 202 / 11
சம்பள அளவுத்திட்டம் : 19280 - 190 x 10 - 210 x 10 - 23280

**03. பதவிக்கான பெயர் : எழுதுனர்**
குறியீட்டு இலக்கம் : 302 / 14
சம்பள அளவுத்திட்டம் : 17900 - 155 x 10 - 165 x 10 - 21100

**04. பதவிக்கான பெயர் : எரிபொருள் நிரப்புனர்**
குறியீட்டு இலக்கம் : 313 / 16
சம்பள அளவுத்திட்டம் : 16975 - 135 x 10 - 150 x 10 - 19825

**05. பதவிக்கான பெயர் : விற்பனை உதவியாளர்**
குறியீட்டு இலக்கம் : 308 / 16
சம்பள அளவுத்திட்டம் : 16975 - 135 x 10 - 150 x 10 - 19825

**06. பதவிக்கான பெயர் : காவலாளி**
குறியீட்டு இலக்கம் : 315 / 16
சம்பள அளவுத்திட்டம் : 16975 - 135 x 10 - 150 x 10 - 19825

**வயதெல்லை 18 - 45 வயதாகும்.**

மேற்குறிப்பிட்ட பதவிகளிற்கான தகைமைகளினை வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் இணையத்தள முகவரி www.np.gov.lk இன் சுற்று நிருபங்கள் பகுதியில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் http://np.gov.lk/cocoperative employees - commisson-circular-2021 என்ற இணைப்பில் பார்வையிட்டுக் கொள்ள முடியும். அல்லது சங்கத்திடம் தொடர்பு கொண்டு தகைமைகளை பெற்றுக்கொள்ள முடியும். தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரம் கல்வித்தகைமை சான்றிதழ்களின் நிழற்பிரதிகளுடன் விண்ணப்பத்தினை தலைவர் புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 2023.12.12ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00மணிக்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைப்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்**
**புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்,**
**புதுக்குடியிருப்பு**

(CR 41232)(k-1)


## வெற்றிடங்களை நிரப்ப ஏற்பாடு!

கொழும்பு, நவ.27 எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து கிராம அலுவலர் பதவி வெற்றிடங்களும் பூர்த்தி செய்யப்படும் என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார். 2021ஆம் ஆண்டு விண்ணப்பங்களை அனுப்பிய தகுதியானவர்களுக்கு கிராம அலுவலர் தேர்வை டிசெம்பர் 2ஆம் திகதி தேர்வுத் துறை நடத்தவுள்ளது. தேர்வில் இருந்து கிராம அலுவலர் பணியிடங்களுக்கு 2 ஆயிரத்து 238 பேர் தேர்வு செய்யப்பட உள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மரண அறிவித்தல்

**பிறப்பு**
**30.04.1955**

**இறப்பு**
**26.11.2023**

### நீலாத்தை கந்தசாமி (சிவம்)




வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலியை வசிப்பிட மாகவும் கொண்ட நீலாத்தை கந்தசாமி (சிவம்) நேற்று (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான நீலாத்தை மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் தங்கராசாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ராஜசுலோசனாவின் அன்புக் கணவரும், செல்வி. சிவாநந்தினி (கனடா), சிவாகரன் (கனடா), நிரோஜி, ஜீவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசண்முகம், சரவணபவன், சத்தியகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரேஷ்மிகா, தஸ்மிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 041 7912**
**077 088 5652**

(CS 27101)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
13 - 12 - 1949



மறைவு
24 - 11 - 2023

## பத்மினிதேவி சபாநாயகம்

யாழ். கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பத்மினி தேவி சபாநாயகம் அவர்கள் கடந்த (24.11.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராஜேந்திரம் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா செல்லம்மா தம்பதிகளின் மரு மகளும், காலஞ்சென்ற சபாநாயகம் அவர்களின் பாசமிகு மனைவியும், ஜனார்த்தனன், ஜெகனிவாசன், தனஞ்செயன், சித்தார்த்தனன் ஆகியோரின் பாமிகு தாயாரும், இந்துமதி, தர்சிகா, சுதர்சனா, வனித்தா, ஆகியோரின் மாமியாரும், ஓவியா, நிலன், அக்ஷன், அர்ஜுன், சஞ்சனா, அக்ஷரா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற பாலசுதந்திரராஜன், மற்றும் மதிவதனராஜன், ரவிச்சந்திரராஜன், காலஞ்சென்ற செந்தில்ராஜன், மற்றும் ரமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பரம்சோதி மற்றும் மதனலீலா, யோகராஜா, கார்த்திகேசு, ஜெயராசா, ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்பம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (28.11.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அங்கு கிரியைள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

(CS 27094)(K-1)

# Invitation for Bids
## Jaffna College, Vaddukoddai
### SUPPLY AND INSTALLATION OF DESKTOP COMPUTER , LAPTOP COMPUTER & PRINTERS
### (JC/PROC/2023/01)

01. Principal, Jaffna College, Vaddukoddai, now invites sealed bids from eligible and qualified bidders for procurement of supply and installation of computer hardware & accessories for computer lab at Jaffna College. A brief summary of the requirement is given in table below:

| ItemNo | Description of Goods | Quantity/Units |
|---|---|---|
| 01 | Desktop computers | 80 |
| 02 | Line Interactive UPS | 80 |
| 03 | Laptop computers | 2 |
| 04 | Printers | 2 |
| 05 | Scanner | 1 |

02. Bidders are required to quote for all the items in a lot and total quantity of each item. Partial bids shall be treated as non-responsive and rejected. Detailed description of the Requirements and Specifications is given in the bidding document.

03. Interested bidders may inspect the bidding documents free of charge during school hours on working days commencing from 27th November, 2023 at Principal office, Jaffna College, Vaddukoddai. Telephone:021-2250888, email:1823jaffnacollege@gmail.com.

04. A complete set of bidding documents in English Language may be purchased by interested bidders on submission of a written application and upon payment of a non-refundable fee of SriLankan rupees one thousand (LKR. 1000.00) effective from 27th Nov, 2023 during school hours on working days from the office of the Jaffna College, Vaddukoddai. The method of payment will be by cash.

05. Bids must be delivered to the Principal, Jaffna College, Vaddukoddai on or before 12.00hrs on 11th December, 2023. Bids will be opened immediately after the dead line of bid submission in the presence of the bidders' representatives, who choose to attend. Late Bids and Bids sent electronically will not be accepted and will be rejected.


06. Bids shall be valid for a period of 90 days from the date of dead line for submission of the bids.

07. Jaffna College will not be responsible for any costs or any expenses incurred by the bidders in connection with the preparation or delivery of Bids.

Principal
Jaffna College, Vaddukoddai

27.11.2023

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் மகாலிங்கம்

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் இல.69 கணேசபுரம், மற்றும் 20/1 திருவையாறு கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மகாலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (25.11.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் பொன்னம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் ரூபவதி அவர்களின் மருமகனும், கிருஸ்ணவேணி (கிச்சா) அவர்களின் பாசமிகு கணவரும், மிருணாளினி (யாழினி - லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும், ரமணதாசன் (லண்டன்) அவர்களின் பாசமிகு மாமனாரும், அக்சயன், அஸ்விதன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் திருவையாறு இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00மணியளவில் திருநகர் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

20/1, திருவையாறு,
கிளிநொச்சி.
0772128283

தகவல்:
குடும்பத்தினர்

(CR 41241)(AK-1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 - 06 - 1949



மறைவு
24 - 11 - 2023

## இலங்கைராசா சறோஜினிதேவி

அராலி தெற்கு அராலியைப் பிறப்பிடமாகவும் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கைராசா சரோஜினிதேவி அவர்கள் கடந்த (24.11.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இலங்கைராசாவின் அன்பு மனைவியும், நவரத்தினம் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், அரசரத்தினம், மனோகரன் ஆகியோரின் சகோதரியும் ரகுராஜ் (லண்டன்), காலஞ்சென்ற செல்வி ரஜனி மற்றும் ரவிகரன் (லண்டன்), தர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குந்தவை, பிரியதாட்சாயினி, முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திபித்தா, திபிகஷன், ஜகன்னியா, ஹரிகரன், சபரி, யருஷன், சிறோஜென், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செல்வராணியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 27095)(K-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. சிவலிங்கம் அருள்குமரன்
(B.Ed, M.Ed, S.L.P.S III)



எமது பாடசாலை ஆசிரியர்
திரு. சிவலிங்கம் அருள்குமரன்
புதிதாக இலங்கை அதிபர் சேவை - IIIற்கு
நியமனம் பெற்றதையிட்டு அவரை
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

பாராட்டி வாழ்த்துகின்றோம்



21.11.2023 அன்று களனிப்
பல்கலைக்கழகத்தில்
MA English Linguistics
பட்டம் பெற்ற
திருமதி வேணுஷா
யுகராஜ்
(HNDE, BA in English.
PGDE)
அவர்களை மனதார
பாராட்டி வாழ்த்துவதோடு,
அவர் மேலும் பல
பட்டங்களைப் பெற்று
வாழ்வின் மகத்தான
நிலையை அடைய
இறைவனை
வேண்டி நிற்கின்றோம்

Congratulations

வாழ்த்துவோர்:
அப்பா - வை. அருணகிரிநாதன்
அம்மா - அ.வசந்தாதேவி
சகோதரர்களான -
பிரசன்னா, ஜனார்த்தனா,
கோபிகிருஷ்ணா, வினோதகன்.

# இஸ்ரேலில் நடப்பது எமக்கு புதிதல்ல

## இலங்கைத் தொழிலாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 27

1983ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை போரின் மத்தியில் வாழ்ந்தவர்கள். எமக்கு காஸா போர் ஒரு பொருட்டல்ல. இலங்கையில் வருமானம் போதாது. அதனால் அங்கு வேலைக்குச் செல்கின்றோம் - இவ்வாறு இஸ்ரேலுக்கு அடுத்த மாதம் செல்லவுள்ள 10 ஆயிரம் இலங்கைத் தொழிலாளர்களில் ஒருவரான டயஸ், ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிலுள்ள விவசாய நிலங்களிலும், முதியோர் இல்லங்களிலும், கட்டட நிர்மாணப் பணிகளிலும் பணியாற்றுவதற்காக இலங்கையைச் சேர்ந்த 10 ஆயிரம் தொழிலாளர்கள் அடுத்த மாதம் 10ஆம் திகதி இஸ்ரேலுக்குப் புறப்படவுள்ளனர் என தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலில், தாய்லாந்தவர்களும் பலஸ்தீனியர்களுமே பணியாற்றினர். இஸ்ரேலில் போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து அங்கு பணியாற்றிய தாய்லாந்து பிரஜைகள் தாயகம் திரும்பி விட்டனர். பலஸ்தீனர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கைத் தொழிலாளர்கள் அங்கு செல்லவுள்ளனர் என்று அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஒ-6)

# பாலுறவுக்கு தடையிடாதீர்



கொழும்பு, நவ. 27

ஒரு பாலுறவுக்குத் தடைவிதிக்கக் கூடாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவர் தெஹிதெனிய, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் ஒரு பாலுறவு அல்லது தன்பாலுறவு குற்றமாகக் கருதப்படுகிறது.

சர்வதேச சட்டங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்துக்குப் பரிந்துரை செய்ய வேண்டியது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடமை. ஒரு பாலுறவு அல்லது தன்பாலுறவுக்கு தடை விதிப்பது சர்வதேச சட்டங்களை மீறும் ஒரு செயற்பாடு.

எனவே இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் 365, 365 ஆகிய பிரிவுகள் மீளப்பெற வேண்டும் என அந்தக் கடிதத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் கோரியுள்ளார். (ஒ-6)

# எல்லோர் தலைவலிக்கும் மாத்திரை ஒன்றுதான்

## பெரமுன எம்.பி. வியாக்கியானம்

கொழும்பு, நவ. 27

இலங்கையில் தமிழ் மக்களின் தலைவலிக்கு ஒரு மாத்திரையும், சிங்கள மக்களின் தலைவலிக்கு வேறொரு மாத்திரையும் கிடையாது. இருக்கும் ஒரு மாத்திரையை தான் பங்கிட்டுக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்.' என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான சீ.பீ.ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்நாட்டில் சிங்கள, பௌத்த மக்கள் ஒரு விதத்திலும், தமிழ் மக்கள் இன்னுமொரு விதத்திலுமே கவனிக்கப்படுகின்றார்கள் என்றே எனக்கு முன்னர் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் (கோவிந்தம் கருணாகரன்) சுட்டிக்காட்டினார். தமிழ் மக்களின் தலைவலிக்கு ஒரு பனடோலும், சிங்கள மக்களின் தலைவலிக்கு மற்றொரு பனடோலும், முஸ்லிம் மக்களின் தலைவலிக்கு வேறொரு பனடோலும் இல்லை. எல்லோரினது தலைவலிக்கும் ஒரு மாத்திரைதான் இருக்கின்றது. அதனை பகிர்ந்து கொண்டேதான் இலங்கையராக முன்னோக்கிச் செல்லவேண்டும் - என்றார். (ஒ-44)

# ராஜபக்சக்களை தண்டிக்க கையெழுத்து வேட்டை!

கொழும்பு, நவ. 27

நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் எனக் கோரி எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கையெழுத்து வேட்டையில் களமிறங்கியுள்ளது.

நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்களின் குடியுரிமை உட்பட சிவில் உரிமைகளை இரத்துச் செய்யவேண்டும். வங்குரோத்து நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். இதற்கென கிராமம், நகரமாகச் சென்று கையெழுத்துகளைத் திரட்டுவோம்.

'ராஜபக்சர்களைப் பாதுகாக்காமல் அவர்களின் குடியுரிமைகளை சட்டபூர்வமாக இரத்துச் செய்க' என்று ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுப்போம் என்று இதில் வலியுறுத்தப்பட்டது. ஆரம்பகட்டமாக கடந்த வியாழக்கிழமை கொழும்பு புறக்கோட்டையில் கையெழுத்துத் திரட்டும் பணி முன்னெடுக்கப்பட்டது. இதனை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆரம்பித்து வைத்தார். (ச-44)



# மாகாணசபை முறையே சிறப்பு



புது அரசமைப்பு உருவாக்கப்படும் வரை மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கம் என தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான இ.சந்திரசேகரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்சக்களின் நாய்க்குட்டியாக இருந்த நரிக்குட்டி ஆட்சிப் பீடத்துக்கு வந்துள்ளது. நரித்தனமான நடவடிக்கைகளிலேயே கடந்த 45 வருடமாக அது ஈடுபடுகின்றது. இந்த நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒரு குடையின் கீழ் அணி திரளா விட்டால் அவர்கள் ஒன்று சேர முடியாவிட்டால் இந்த நாட்டில் விமோசனம் இல்லை என்ற கொள்கை தேசிய மக்கள் சக்தியிடம் தொடர்ந்து உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு நின்று நிலைக்கக் கூடியவாறு தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் உள்ளிட்ட அனைத்து இன மக்களின் கருத்துகளும் ஒன்று சேர்ந்து புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். மாகாணசபை முறை உருவாக்கப்பட்டு 36 வருடங்களாகின்றன. ஆனால் பிரச்சினை அதே இடத்தில்தான் இருக்கின்றது. புதிய அரசமைப்பு உருவாகி நிரந்தர தீர்வு எட்டப்படும்வரை மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்துவதே சிறப்பு - என்றார். (ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே வாக்குறுதிகள் ஆண்டுகளே வேறு!



கொழும்பு, நவ.27

பெருந்தோட்டத்துறை மக்களுக்காக கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதற்கு பெருந்தோட்டத்துறை மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள். ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளன, அவை நிறைவேற்றப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது வாக்குறுதிகளை வழங்கியுள்ளார் என்று விஜித ஹேரத் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-44)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலிற்கு இரும்பினாலான சுருக்கு கதவுகள் செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.**

இவ்வேலையினை மேற்கொள்ள விரும்புபவர்கள் ஆலயத்திற்கு நேரடியாக வருகைதந்து கதவுகள் பொருத்த வேண்டிய இடங்களை நேரடியாக பார்வையிட்டு அதற்கு ஏற்ற வகையில் கூறுவிலையினை தாங்கள் சுயமாக தயாரித்து பூரணப்படுத்தி 2023.12.03 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி **"செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு"** எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது கோயில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

**குறிப்பு:** கூறுவிலையானது பொருட்கள் கூலிகள் உட்பட்டதாக அமைதல் வேண்டும்.

**ந.மோகனரூபன்**
**செயலாளர்,**
**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

## மரண அறிவித்தல்



தோற்றம்
31 . 07 . 1956

மறைவு
26 . 11 . 2023

### திருமதி தனபாலசிங்கம் கெஜாவல்லி

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் கெஜாவல்லி நேற்று (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா சிவமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற மகாவல்லியின் பாசமிகு சகோதரியும், அனுஷா, ஜனகன், ஜெயந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கௌரிசுதன், ஜெயதேவி, தயாளினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஷவான், ஷரணி, ஷ்ரேயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 6155**
**077 244 4366**

(CS 27106) A-1

## மரண அறிவித்தல்



தாயின் அரவணைப்பில்
05 . 05 . 1939

கந்தன் திருவடியில்
25 . 11 . 2023

### இராமுப்பிள்ளை ஆறுமுகம்

இணுவில் கந்தசுவாமி கோவில் ஸ்தாபகர் குழந்தையர் வேலாயுதர் வழித்தோன்றலும் ஆலயத்தின் பரம்பரை ஆதீன கர்த்தாவும் ஆகிய இராமுப்பிள்ளை ஆறுமுகம் கடந்த (25.11.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை செல்லாபரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அபிராமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், தர்சினி (கனடா), சிவப்பிரியா (லண்டன்), இராமகீர்த்தன் (கீர்த்தனர் ஸ்ரோஸ் - இணுவில்), ரஜீவன் (கிராம சேவையாளர்- பிரதேச செயலகம் உடுவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராசநாயம், வேலாயுதபிள்ளை, மகாலிங்கம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற திருமகள் மற்றும் கைலாயநாதன், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் செல்வநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெகதீஸ்வரன் (கனடா), சுசிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காவியா, துஷா, சஹானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 27108) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
20 . 09 . 1999

மறைவு
26 . 11 . 2023

### உதயகுமார் யரன்நாத் (யது)

கச்சாய் வீதி, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உதயகுமார் யரன்நாத் (யது) நேற்று (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் உதயகுமார் (உதயகுமார் களஞ்சியம் - கொடிகாமம்) பத்மரஞ்சினி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், தேனுஜா, கோபிநாத், யானுசா ஆகியோரின் அருமைச் சகோதரனும், சதீஸ்குமாரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12.00 மணியளவில் கட்டைபறிச்சான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 2490 184**

(CS 27103) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லூரில் நேற்று சொர்க்கப் பனை எரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 27
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் திருக் கார்த்திகை உற்சவத்தின் சொர்க் கப் பனை எரிக்கும் உற்சவம் நேற்று மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.
வசந்த மண்டபத்தில் இருந்து எழுந்தருளி திருக்கைலாச வாக னத்தில் வீற்று வெளிவீதியுடாக வலம் வந்து பக்தர்களுக்கு காட்சி யளித்தார் நல்லூரான். (ஒ.27)

# தையிட்டியில் முன்னணி மீண்டும் போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 27
தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட் டுள்ள விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரது பௌர்ணமி தினப் போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மாலை 6 மணியுடன் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டது. (ஒ.100)

## பிரபாவின்...

தமிழ்த் தேசியக் கட்சியின் செயலர் எம். கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் பிர தேச இளைஞர்கள் இணைந்து வல்வெட் டித்துறை, ஆலடியில் அமைந்துள்ள தலைவர் பிரபாகரனின் வீடு அமைந்தி ருந்த வளாகத்துக்கு முன்பாக ஒன்று கூடி கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.
கேக் வெட்டியதுடன் வல்வெட்டித்துறை யின் அடையாளமான 69 எள்ளுப்பா குகளும் அங்கு நின்றவர்களுக்கு வழங் கப்பட்டது. வீதியால் சென்ற பொது மக்க ளுக்கு இனிப்புப் பண்டங்களும் வழங் கப்பட்டது. இதன்போது அப்பகுதிவாழ் மக்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
யாழ்ப்பாண நகரப் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற் பாட்டாளர்களால் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.
மேலும் நேற்று மாலை நல்லூரில் அமைந்துள்ள மாவீரர் நினைவுச் சதுக் கத்தின் முன்றிலில் தலைவர் பிரபாகர னின் பிறந்த நாளை முன்னிட்டு 69 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இனிப்பு களும் பரிமாறப்பட்டன. வானில் புகைக் குண்டுகளும் பறக்க விடப்பட்டன.
(அ-ஒ-26-66-100)

## மிகப்பெரிய...

ஆண்டி ஐயா விஜயராசா, மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலய குருக்கள் பவானந்த சர்மா ஆகியோரை ஊர்கா வற்றுறை நீதிமன்றில் இன்று முன்னி லையாகுமாறு பொலிஸார் அழைப்புக் கட்டளை அனுப்பியுள்ளனர். அவர் களை நேற்று நேரில் சென்று சந்தித்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், அங்கு வைத்து ஊட கங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:-
மாவீரர் நாளை தடைசெய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் சிறிலங்கா காவல் துறை செயற்பட்டு வருகின்றது. அதற் காக அவர்கள் பல இடங்களிலும் நீதி மன்றத்தை நாடியிருக்கின்றார்கள். நீதி மன்றங்கள் மக்களின் நினைவேந்தும் உரிமையை பல சந்தர்ப்பங்களில் நிலைநாட்டியிருக்கின்றன. ஆனாலும் சிறிலங்கா காவல்துறையினரும் சளைக் காமல் மீண்டும் மீண்டும் நீதிமன்றப் படியேறிக் கொண்டிருக்கின்றார்கள்.
தமிழர்களின் நினைவேந்தும் உரி மையை மறுதலிப்பதே இவர்கள் நோக் கமாக இருக்கின்றது. தமிழர்கள் தங்கள் உறவுகளை நினைவுகூர்வதைத் தடுக்க முற்படுவதன் ஊடாக சிறிலங்கா காவல் துறை உலகில் மிகக் கேவலமானவர்கள் என்ற அடையாளத்தை மீண்டும் மீண் டும் நிரூபித்துக் கொண்டிருக்கின் றார்கள்.
உலகம் முழுவதிலும் உயிரிழந்தவர் களை நினைவுகூர்வது என்பது மரபா கவே இருந்து வருகின்றது. இந்த நாட் டில் இருக்கின்ற சிங்கள மக்களும் போரில் உயிரிழந்த தங்கள் பிள்ளை களை நினைவுகூர்கின்றார்கள். உங்கள் பிள்ளைகளை - உறவுகளை நினைவு கூர அனுமதி வழங்க மறுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? இன்றைய நாளில் நினைவுகூரலுக்கு எதிராகக் குரல் எழுப் பும் ஒவ்வொருவரும் இதற்கு முதலில் பதில் சொல்லுங்கள்.
நாங்கள் இன்று ஆயுதம் ஏந்திப் போராட் டம் நடத்தவில்லை. ஆயுதப் போரில் சாவடைந்த எங்கள் உறவுகளுக்கே அஞ்சலி செய்கின்றோம். அதைத் தடுப் பதைப்போன்ற மிகக் கேவலமான செயல் உலகில் வேறெதுவும் இல்லை - என்றார். (அ-ஒ-125)

## மாவீரர் நாள்...

தமது உன்னத உயிருக்கும் மேலாக தேசத்தின் விடுதலையை அதியுன்னத மாக நேசித்து அந்த உயரிய இலட்சியத் துக்காக சாவைத் தழுவிக் கொண்ட மாவீ ரர்களைப் போற்றி வணங்கும் நன்னாள் இன்று. ஆயிரமாயிரம் அக்கினிப் பந்து களாக எரி நட்சத்திரங்களாக எரிந்தவர் களை நினைவுகூரும் நன்னாள்.
தமிழனத்தின் இருப்புக்காக தமது இன் னுயிரை ஈகம் செய்த உன்னதமானவர் களை தமது நெஞ்சத்தின் நினைவால யத்தில் நிறுத்தி தமிழர்கள் நினைவு கூரும் நாள். தமிழர் தாயகம் சுதந்திரத் தாகம் கொண்டு எழுச்சி கொள்ளும் மகத்தான நாள். தமிழர் தயாகத்தின் விடிவுக்காகவும் தமிழர் விடுதலைக்காக வும் தமது இன்னுயிரை ஈகம் செய்த எம் மினிய வீரர்களை தமிழர்கள் தம் இதயக் கோயில்களில் நிறுத்தி பூசிக்கும் நாள்.
எதனையும் தாங்கும் இதயத்துடன் சாவுக்கு அஞ்சா வீரத்துடன் சாவைத் தழுவியவர்கள் தான் மாவீரர்கள். அவர் களின் துயிலும் இல்லங்கள் தாயகத்தில் சிறிலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக் கப்பட்டுள்ள அல்லது சீரழிக்கப்பட்டுள் ளன. இருப்பினும் தரைமட்டமாக்கப்பட்ட துயிலும் இல்லங்களின் எச்சங்களை மீட்டெடுத்து இன்றைய மாவீரர் நாளை எழுச்சியுடன் கடைப்பிடிக்கத் தாயக தேசம் தயாராகியுள்ளது. வீதிகள் எங்கும் சிவப்பு - மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசிப்பறக்கின்றன. மாவீரர் அலங்கார வளைவுகள் மிடுக்குடன் அமைக்கப்பட் டுள்ளன. மின் அலங்கார விளக்குகளால் மாவீரர் துயிலும் இல்லங்கள் ஒளியூட்டப் பட்டுள்ளன.
யாழ்ப்பாணத்தில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர் துயி லுமில்லம், எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயி லுமில்லம், சாட்டி மாவீரர் துயிலுமில்லம் ஆகியவற்றில் ஏற்பாடுகள் பூர்த்தியாகி யுள்ளன.
இதனைவிடவும், நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன் பாக, மாவீரர்களின் பெயர்கள் பொறிக் கப்பட்ட கல்வெட்டு அமைந்துள்ள மாவீ ரர் நினைவாலயத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.
வடமராட்சி, நெல்லியடி, மாலு சந்தி பிள் ளையார் கோவில் முன்பாகவுள்ள மாவீ ரர் நினைவாலயத்திலும் அஞ்சலி நிகழ் வுகள் நடைபெறவுள்ளன. அச்சுவேலி நகரில் அமைந்துள்ள மாவீரர் நினைவா லயத்தில் மாவீரர் நினைவேந்தல் நிகழ் வுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கப்டன் அல்பேட் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரால் முதன் மைச்சுடர் ஏற்றப்படும், அச்சுவேலி, புத் தூர் மாவீரர் கோட்டத்துக்கு உட்பட்ட மாவீரர்களின் பெயர்களுக்கான மலரஞ் சலியும் நிகழ்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
மேலும், யாழ்.பல்கலைக்கழக வளாகத் திலுள்ள நினைவுத்தூபியில் மாவீரர் களை நினைவேந்தும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத் தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இறுதி நாள் அஞ்சலிக் கான விசேட ஏற்பாடுகள் பூர்த்தியாகி யுள்ளன.
இதேவேளை- கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம், தேராவில் மாவீரர் துயிலுமில்லம் ஆகி யவற்றில் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடா கியுள்ளன.
அதேநேரம், முல்லைத்தீவு மாவட்டத் தில், முல்லைத்தீவுக் கடற்கரை, இரட்டை வாய்க்கால், தேவிபுரம், களிக்காடு, கொக் குத்தொடுவாய், சுதந்திரபுரம், அலம்பில், வன்னிவிளான்குளம், முள்ளியவளை, ஆலங்குளம், இரணைப்பாலை, முள்ளி வாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களிலும் நினை வேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.
இதேநேரம், மன்னார் மாவட்டத்தின் ஆட் காட்டிவெளி, பெரிய பண்டிவிரிச்சான், முள்ளிக்குளம் துயிலுமில்லங்களிலும், வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.
கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை யில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடி முன்மாரி, தரவை, தாண்டியடி, வாகரை, கண்டலடி ஆகிய மாவீரர் துயிலுமில்லங் களிலும், திருகோணமலை மாவட்டத் தின் சம்பூர், ஆலங்குளம் துயிலுமில்லத் திலும், அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு துயிலுமில்லத்திலும் நினைவேந்தலுக் கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இதனைவிடவும், கிழக்குப் பல்லைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தால் விசேட நினைவேந்தலுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும், திருகோண மலை ஆலங்குளத்தில் மாவீரர் நினை வேந்தலைச் செய்வதற்கு நீதிமன்ற தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை - மாவீரர் நாளை முன் னிட்டு சிறிலங்கா இராணுவத்தினரதும் காவல்துறையினரதும் கண்காணிப்பு கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பல நீதி மன்றங்கள் நினைவேந்தலுக்கு தடை விதிக்காதபோதும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னங்கள், இலச் சினைகள், பாடல்கள் என்பனவற்றைப் பயன்படுத்தத் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## மாவீரர் நாளை...

படைகள் கண்காணிக்காது விடவேண் டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்;
உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு ஒன்றை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசு கின்றார். போரில் உயிர் தப்பியவர்கள் அவர்களுக்கிருக்கும் வருத்தப்படுவதற் கான உரிமையைக் கூட பயன்படுத்திக் கொள்ள முடியாதுள்ள, நினைவு நிகழ்வு களில் கலந்துகொள்வதன் மூலமாக தங்களது மனவலிகளுக்கு ஆறுதல்தே டக்கூட முடியாதுள்ள சூழ்நிலையில், இவ்வாறான ஒரு அமைப்பில் உயர்தப் பியவர்கள் கலந்துகொண்டு, தங்கள் வாக்குமூலத்தை வழங்குவது சாத்திய மல்ல.
உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு நம்பகரமானதாகச் செயற்பட்டு, வெற்றியடையவேண்டுமாக இருந்தால், அரச ஆதரவுடன் நடைபெறும் வன்முறை கள் நிறுத்தப்படுவதுடன், நவம்பர் 27 ஆம் திகதி நடைபெறும் நிகழ்வு களைப் பாதுகாப்புப் படைகள் கண்காணிக்காது விடுவதுடன், இவற்றை ஏற்பாடுகள் செய் பவர்கள் அல்லது பங்குபற்றுபவர்க ளுக்கு எதிராக எந்தவொரு பழிவாங்கும் நடவடிக்கையும் இருக்கவும்கூடாது. இந்த அடக்குமுறையைக் கண்டு இராஜ தந்திர சமூகம் அமைதிகாக்காது இருப்ப துடன், சாதாரண உடைகளில் வரும் அதி காரிகள் ஒளிப்படங்கள் எடுக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக சர்வ தேசகண்காணிப்பாளர்களையும் அனுப்ப வேண்டும் - என்றுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய நோயாளர்கள் உயிருக்கு ஆபத்து!

## கதிரியக்க தொழில்நுட்ப அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, நவ.27

**கொழும்பு தேசிய மருத்துவமனை மற்றும் கண்டி பொது மருத்துவமனையின் இருதய வடிகுழாய் இயந்திரங்கள் பழுதடைந்தமையால் காத்திருப்போர் பட்டியல் எட்டு மாதங்களுக்கும் மேலாக நீடிக்கப்பட்டுள்ளது என்று அரச கதிரியக்க தொழில் நுட்ப அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**



இதனால் பெருந்தொகையான இருதய நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

ஆஞ்சியோகிராம் பரிசோதனைகள் மூலம் இதயத் தமனிகளில் அடைப்பு இருப்பதைக் கண்டறிந்து, வடிகுழாய் பரிசோதனை மூலம் இருதய மாற்று அறுவை சிகிச்சை அல்லது ஸ்டென்ட் பரிசோதனை செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# சிக்கின டிப்பர்கள்

கொடிகாமம், நவ.27

தருமபுரம் கல்லாறில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணாகப் பயணித்த ஆறு டிப்பர் வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன. அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.சதுரங்க தெரிவித்தார். (எ-113)


## யூரியா மலிவு விற்பனை

50 Kg தரமான யூரியா (கெமிலீஸ்) ரூ.8650/- மலிவுவிலையில் விற்பனைக்கண்டு.
தொடர்பு: அபிபாம், செல்வபுரம், பளை.
077 781 1212

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரம், கிரக பாவம் 22, செவ்வாய் 8 இல் உள்ள தபாலதிபராக பணிபுரியும் (HND IT) மணமகனுக்கு பொருத்தமான பணிபுரியும் மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு : 077 864 9878, 077 634 3103

## காணி விற்பனைக்கு


யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 51 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: **071 173 3911**
**076 853 5022**
**076 213 7239**

(CS 27104) A-1


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 01 - 1936 | 25 - 11 - 2023 |

### யோசப் எட்வேட் இராசநாயகம்

**(ஓய்வு நிலை தொழிநுட்ப உத்தியோகத்தர் - நீர்ப்பாசனத் திணைக்களம், நற்கருணைப் பணியாளர் - OLR)**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இல.40 மாட்டீன் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் எட்வேட் இராசநாயகம் அவர்கள் (25.11.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் மரியம்மா தம்பதியரின் மூத்த அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை மேரி யோசேப்பின் (அன்னம்) தம்பதியரின் மருமகனும், லூர்தம்மா (ஜெயம்) Retired Teacher- J/Holy Family Convent) அவர்களின் அருமைக் கணவரும், Dr. கமிலா றஜனி (Canada) லொறன்சிலா றொஜனி (Teacher - J/ St.Mary's Vidyalayam - OLR), றொணிகய் (Coordinator - Development Consultancy) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.சைரனஸ் யோசப் (Canada), தர்மபூபதி (Principal - J/Kodikamam Government Vidyalayam), தனுஜா (Management Service Officer- Mininstry of Agriculture, NPC) ஆகியோரின் அன்பு மாமனாரும், தூயனா, டிலக்ஷனா, கவின், ஹஷ்மினா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை (அன்ரோ சொப் உரிமையாளர்), மரியநாயகம் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் - மதுவரித் திணைக்களம்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (29.11.2023) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

**இல.40, மாட்டீன் லேன்,**
**யாழ்ப்பாணம்.** (CS 27097)(AK-1)
**021 222 9101, 077 358 2704**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 - 02 - 1939 | 26 - 11 - 2023 |

### தியாகராசா வல்லிபுரம்

(ஓய்வு பெற்ற விவசாயப் போதனாசிரியர்)

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா வல்லிபுரம் (ஓய்வு பெற்ற விவசாயப் போதனாசிரியர்) அவர்கள் நேற்று (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புச் சகோதரனும், வாசுகி, வளர்மதி (Teacher, J/ St. James Girl's School), இளங்கோவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஷ் (Executive Hayleys Agriculture Holdings Ltd) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் கனகலிங்கம், கருணேஸ்வரி, கமலேஸ்வரி, விமலேஸ்வரி, அமிர்தலிங்கம், சுந்தரலிங்கம், இராஜலிங்கம், அன்னலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், ஜனந்தினி, அபிசயா, கம்சாயினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2023) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் உசன் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உசன், மிருசுவில்.**
**077 759 4962**

தகவல்:
குடும்பத்தினர்

(CS) N-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களின் குரலாய் ஒரு வரலாற்றுப் பயணம்



உதயன் பத்திரிகையின் 38ஆவது பிறந்ததின சிறப்பிதழுக்கு எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றெடுத்த நாளிதழாக உதயன் தொடர்ந்து வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதே.

தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்கடிகளை செய்திகளாக வெளி உலகத்துக்குக் கொண்டுவந்து, சம்மந்தப்பட்ட தரப்பினரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் உதயனின் செயற்பாடுகள் உள்ளன. ஒரு செய்திப் பத்திரிகை என்ற வகையில் மக்களின் அவலங்களை, பிரச்சினைகளை வெளிக்கொணரும் இப்பணி உண்மையில் பாராட்டப்பட வேண்டியதாகும்.

உதயன் பத்திரிகை கடந்துவந்த பாதைகள் மிகவும் கடினமானவை. பல்வேறு ஆபத்துக்களை, இழப்புக்களை, சவால்களைச் சந்தித்தே உதயன் தனது நீண்ட பயணத்தைத் தொடர்ந்துகொண்டு இருக்கின்றது. எத்தனை நெருக்குவாரங்களைச் சந்தித்தாலும் உதயன் தனது நோக்கத்தில் இருந்து பிறழ்ந்துவிடவில்லை. தமிழ் மக்களின் குரலாய் அது தொடர்ந்து தனது பணிகளை முன்னெடுக்கின்றது.

சவால்கள் மிக்க இந்த ஊடகப் பயணத்தை நேர்த்தியாகத் தொடர்ந்து 39ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் உதயன் பத்திரிகையின் நிர்வாகிகள், பணியாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை,**
மன்னார் மறைமாவட்ட ஆயர்

## தமிழர்களுக்கான பணி தொடர்க!



உதயன் பத்திரிகை இன்று 39ஆவது அகவைக்குள் காலடி பதிப்பதை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

சூரிய உதயத்தின்போது, உதயன் மூலமாகத் தகவல்களையும் தெரிந்துகொள்ளும் ஆர்வமுடையவர்கள் தமிழ்மக்கள். தமிழ் மக்களுடைய தேவைகளை எடுத்துக்காட்டி உதயனில் வெளிவருகின்ற செய்திகள் அனைவருடைய மனதிலும் சிந்தனையைத் தூண்டுகின்றன.

சமயம், சமுதாயம், வர்த்தகம், பொருளாதாரம், அரசியல் என அனைத்துத் துறையிலும் ஆங்காங்கே நடைபெறுகின்ற ஆலய விழாக்கள் அனைத்தையும் குறிப்பாக அறிந்துகொள்ளும் வகையில் உதயன் வெளிவருவதே அந்தப் பத்திரிகை அனைவரது உள்ளத்திலும் ஒரு தனியான இடத்தைப் பிடித்துள்ளமைக்குக் காரணம். இதனை நெறிப்படுத்தும் இயக்குனர், பத்திரிகை ஆசிரியர்கள், செய்தித் தொகுப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் அனைவரையும் வாழ்த்துவதுடன், உதயனின் பணி தொடர இறையருளை வேண்டுகின்றேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## சமய முரண்பாடுகளுக்குள் மிகச்சரியான அறிக்கையிடல்



தமிழ் பேசும் மக்களின் மனம் நிறைந்த தமிழ் நாளிதழாகிய உதயன் நாளிதழானது தனது 39ஆவது அகவைக்குள் கால்பதிக்கும் இத்தருணத்தின் அதன் பணிகள் மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து நீண்டகாலமாக வெளிவரும் முன்னணி நாளாந்த தமிழ்ப் பத்திரிகை எனும் பெருமைக்குரியது உதயன் ஆகும். மிகவும் நெருக்கடியான அரசியல், சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகளிலும் இந்தப் பத்திரிகை தொடர்ந்து வெளிவருகின்றமை பாராட்டுதலுக்கு உரியதாகும். 1985ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவனால் நிறுவப்பட்டு அன்றுமுதல் இன்றுவரை ஊடக சுதந்திரத்தை மதித்து நீதி தவறாமல், பக்கச்சார்பின்றி, உண்மைச் செய்திகளை இப்பத்திரிகை சுமந்து வருவதையிட்டு நான் புககாங்கிதம் அடைகின்றேன்.

சமய முரண்பாடுகள் நிறைந்த சூழலிலும் பக்கச்சார்பின்றி சரியான செய்திகளை மக்களிடத்தில் எடுத்துச் செல்வது இந்தப் பத்திரிகைக்குரிய தனிச்சிறப்பாக அமைகின்றது. இத்தகைய சிறப்புமிக்க இந்தப் பத்திரிகையானது தொடர்ந்தும் ஊடக சுதந்திரத்தைப் பேணி கறைபடிந்த ஊழல்மிக்க சமுதாயத்திலே உண்மைச் செய்திகளை வெளிக்கொணர்ந்து விறுநடைபோட வேண்டும் என்பதுடன் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் அயராது உழைக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பேராயர்
**கலாநிதி வேலுப்பிள்ளை பத்மதயாளன்,**
தென்னிந்தியத் திருச்சபை,
யாழ்.ஆதீனம்.

## வெற்றிநடை தொடரட்டும்




அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கின்றேன். உதயன் பத்திரிகை இன்று தனது 39ஆவது அகவைக்குள் கால்பதிப்பதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

உதயனுக்கும், உதயனைப் பெற்று வளர்த்து சீராட்டிய அவனது குடும்பத்தவர்களுக்கும், அவனை மெருகூட்டி, சீராட்டி, வளமாக்கி வீறுநடை போடச்செய்த வாசகர்களுக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். எதிர்காலத்தில் உதயன் இன்னும் பல உச்சத்தைத் தொடவேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனான அல்லாஹ்விடம் இருகரமேந்திப் பிரார்த்திக்கின்றேன்.


**மௌலவி அல்ஹாபில் அல்ஆலிம் எம்.ஏ.எம்.அஸ்லம்**
பெரிய முஹியத்தீன் ஜும்ஆ பள்ளி வாசல்





## தமிழ்மக்களின் விடுதலைக்கான தேடலில் பக்கபலமாக உதயன் பத்திரிகை



மக்களின் மனம் கவர்ந்த தமிழ் நாளேடாக கடந்த 39 ஆண்டுகளாக மிகவும் சிறப்பாக பணியாற்றி வரும் உதயன் பத்திரிகைக்கு எமது இறை ஆசீர் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

செய்திகளை உடனுக்குடன் நடுநிலைமையோடு மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதும், சிந்தனை ஆழமிக்க ஆசிரியர் தலையங்கங்களால் மக்களையும் சமூகத்தையும் வழிப்படுத்துவதும், மக்களின் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்தும் ஆக்கங்களை வெளியிடுவதும், அரசியல் மற்றும் சமூக பிரச்சனைகளை அலசி ஆராய்வதும், சிறுவர், இளையோரை கல்வியிலும் ஒழுக்கத்திலும் வழி நடத்தும் கட்டுரைகள் கவிதைகளை அள்ளி வழங்குவதும், சினிமாத்துறை, விளையாட்டுத்துறை போன்ற பொழுதுபோக்கு அம்சங்களை கவர்ச்சியாக வெளிக்கொணர்வதுமாகிய உள்ளடக்கங்கள் உதயன் பத்திரிகையின் சிறப்புக்கான காரணங்களாகும்.

மொத்தத்தில் தமிழ் சமூகத்தின் உள்ளார்ந்த உணர்வுகளை துல்லியமாக உள்வாங்கி அவர்களுடைய விடுதலைக்கான தேடலில் பக்கபலமாக இருக்கின்ற ஒரு மகத்தான பணியை உதயன் பத்திரிகை ஆற்றி வருகின்றது.

இந்தச் சிறப்பான பணி மேலும் பல்லாண்டுகள் தொடர உதயன் பத்திரிகையின் ஆசிரியர், செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், பணியாளர்கள் அனைவருக்காகவும் இறையாசிர் வேண்டி அவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம்,**
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்திமுனை மீதான பயணம் இனியும் அச்சமின்றித் தொடரும்



தமிழர்களின் நலன்களையும், தமிழ்த் தேசியத்தின் விடிவையும் தன் கொள்கைகளாக வரித்துக்கொண்ட உதயன் பத்திரிகை, இன்று தன் 39ஆவது அகவைக்குள் கால் பதிக்கின்றது.

இந்த நீண்டதும் நெடியதுமான பயணமானது செங்கம்பளம் விரித்த பயணமாக உதயனுக்கு இருந்ததேயில்லை. இது கற்களும், முட்களும் நிரம்பிய கரடுமுரடான பயணம்தான். அதை ஒட்டுமொத்த உலகமும் நன்கறியும். இந்தப் பயணத்தில் உதயன் தன் பேரன்புக்குரிய பணியாளர்களை இழக்க வேண்டியிருந்தது. சொத்திழப்புக்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், ஓரடிகூட உதயன் தன் தடத்தைப் பின்வைக்கவில்லை. தடைகளைக்கண்டு வேகமெடுக்கும் காட்டாறுபோலதான் உதயனின் பயணமும். உயிரிழப்புகள், சொத்தழிப்புகள் என்பவற்றை எதிர்கொண்டு உதயனின் பயணம் வேகமெடுத்திருக்கின்றதே அன்றி இம்மியும் எப்போதும் தயங்கியதேயில்லை. அந்தத் தயக்கம் எள்ளளவும் இனியும் இல்லை.

கடந்துவந்த 38 வருடங்களும் உதயன் சந்தித்த சோதனைகளும், நிகழ்த்திக்காட்டிய சாதனைகளும் தமிழ் ஊடகப் பரப்பில் தனியொரு வரலாறாக நிலைத்து நிற்கும். நேர்மையும் மக்கள் நலனும் கொண்டு உதயன் தொடர்ச்சியாக வெளிவந்தமையும் அதற்கு மக்கள் காட்டிய ஆதரவுமே இந்த உன்னத நிலையை நாம் அடைவதற்குக் காரணிகளாகின என்பதை உதயனை நேசிப்போர் மட்டுமன்றி நெருக்குவாரங்களைத் தந்தோரும் நன்கறிவர்.

உதயனுக்காக தம் உயிரை ஆகுதியாக்கிய என்னுயிருக்கு நிகரான பணியாளர்களையும், உதயனின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும், ஸ்தாபக ஆசிரியரும் வாழ்நாள் பிரதம ஆசியருமான அமரர் ம.வ.கானமயில்நாதனையும் இந்த நாளில் கனத்த இதயத்துடன் நினைந்து அஞ்சலிக்கின்றேன்.

உதயனின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பணியாளர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், வாசகர்கள், படைப்பாளர்கள், ஏனைய ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும்.

**ஈஸ்வரபாதம் சரவணபவன்**
உதயன் குழுமத் தலைவர்,
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்.

## உயிரை விலையாகக் கொடுத்தும் உறுதியான பாதையில் பயணம்!



1985ஆம் ஆண்டு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவனால் நிறுவப்பட்ட உதயன் நாளிதழ் தற்போது 39 வயதை எட்டியுள்ளது. இதனைமுன்னிட்டு வெளிவரும் சிறப்பு இதழுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவது மகிழ்ச்சியளிக்கின்றது.

போர்காலத்தில் பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், அச்சமின்றி அழுத்தங்களை எதிர்கொண்டு உதயனால் முன்னோக்கி செல்ல முடிந்துள்ளது. அதேபோல பல்வேறு சமயங்களில் அரசால் தடை செய்யப்பட்டாலும், அடிபணியாமல் தற்போது 39ஆவது ஆண்டில் உதயன் பயணிப்பதென்பது மகத்தானது. உண்மையை உரக்க கூறுவதால் உயிரைக்கூட விலையாகக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும், தகவல் அறியும் உரிமைக்காக அவர்கள் ஆற்றிய மகத்தான பணியை மறக்கக் கூடாது.

தற்போது நாடு எதிர்நோக்கும் பொருளாதார திவால்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வலுவான குடிமக்களைக் கட்டியெழுப்பும் பணியை உதயன் பத்திரிகையும் ஆரம்பிக்கும் என நம்புகின்றேன். ஊடக சுதந்திரத்துக்காக என்றும் முன்னின்று செயற்படும் நாம், உதயனின் பயணம் தொடர பிரார்த்திக்கின்றோம்.

**சஜித் பிரேமதாச,**
எதிர்க்கட்சி தலைவர்.




## உயிர்ப்புடன் இருப்பான் உதயன்



39ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் உதயன் நாளிதழுக்கு வாழ்த்து செய்தி அனுப்பி, உதயன் குடும்பத்தின் கூட்டு மகிழ்வில் நாமும் இணைந்து கொள்கின்றோம். இலத்திரனியல் ஊடகங்கக்கும் சமூக வலைத்தளங்களும் ஊடகப் பரப்பில் நுழைந்து ஆதிக்கம் செலுத்தும் காலகட்டம் ஒன்றிலேயே நாம் வாழ்கின்றோம். எல்லாவற்றையும் தாண்டி அச்சியந்திர ஊடகப்பரப்பில் உதயனின் தனித்துவமும் அங்கீகாரமும் தனியான இடத்தில் நிமிர்ந்து நிற்கின்றன. இது யாராலும் மறுக்கப்படமுடியாது.

நாமும் உதயனையும் உதயன் குழுமத்தின் ஒவ்வொரு உழைப்பாளிகளையும் வாழ்த்தி நிற்கின்றோம்.

**வினோ நோகராதலிங்கம்,**
நாடாளுமன்ற உறுப்பினர்

## தனித்துவமான பாதையில் தடம்மாறாமல் பயணிப்பான்



இலங்கை இதழியலில் மற்றும் ஊடகத்துறையில், தனக்கான பாதையில் தொடர்ந்து பயணிக்கும் உதயன் நாளிதழ், 1985ஆம் ஆண்டுமுதல் பயணித்து தற்பொழுது 39ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்தநாளில், வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈழத் தமிழர்களின் குரலாய் யுத்த காலங்களிலும் பல இன்னல்கள் நிறைந்த கலாகட்டங்களிலும் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் மக்கள் பிரச்னைகளை முன்னிறுத்தி, உதயன் தனது ஊடக தர்மத்துடன் செய்திகளை தொடர்ந்தும் இன்றுவரை வெளியிட்டு வருகிறது. மக்களின் பக்கம் நின்று, உண்மைகளை உரக்கச் சொல்ல வேண்டிய இதழியல் அறநெறிப்படி, உதயன் தன் இதழியல் பயணத்தை இனிவரும் காலங்களிலும் வெற்றிகரமாக மேற்கொள்ள வாழ்த்துகிறேன்.

**இரா.சாணக்கியன்**
நாடாளுமன்ற உறுப்பினர்

## சவால்களைக் கண்டு சலிக்காத பயணம்!



உலகமெங்கும் தனது செய்திகளை எடுத்துச்சென்று மக்கள் மனதை கொள்ளை கொண்ட உதயன் பத்திரிகை, தனது இவ்வுலகப் பயணத்தில் 38 ஆண்டுகளை நிறைவு செய்து 39 ஆவது அகவையில் காலடி பதிக்கும் இத்தருணத்தில் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்து வந்த 38 ஆண்டுகளில் போர்க்காலத்திலும், போர் நிறைவுக்கு வந்த பிற்பட்ட காலங்களிலும் உண்மைச் செய்திகளை, உள்ளது உள்ளபடி மக்களின் கரங்களுக்கும் மனதுக்கும் உதயன் கொண்டுசென்று சேர்ப்பித்து வருகின்றான். கடந்து வந்த பாதையில் பல தடைகள் மற்றும் சவால்களைக் கண்டும் சலிக்காது செய்திகளை அள்ளி வழங்கியது போன்று இனிவரும் காலங்களிலும் இன்னுமதிகமாக உலகின் எத்திசையிலும் வாழும் மக்கள் மத்தியில் செய்திகளை காவிச்சென்று தன்னிகரற்ற பணியாற்ற எனது ஆசிகளைக் கூறிநிற்கின்றேன்.

**அ.அடைக்கலநாதன்,**
நாடாளுமன்ற உறுப்பினர்

## உதயன் செய்தி ஏடு வரலாற்றுப் பெருமைமிக்கது



இலங்கை செய்தித்துறை வரலாற்றில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் உதயன் பத்திரிகை மக்கள் மத்தியில் பிரபலமானதாகும். தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்துடன், போராட்ட வரலாற்றுடன் ஆழப் பிணைந்து நிற்கும் ஊடக சாதனங்களில் முன்னணி வகிக்கும் ஊடக சாதனமாகத் திகழ்கின்றது.

இந்த வரலாற்றுச் சாதனைக்குரிய உதயன் செய்தி ஏடு 38 ஆண்டுகள் தமிழ்த் தேசத்தின் விடுதலையை வழிநடத்துவதில் துணிச்சலுடன், அர்ப்பணிப்புடன், ஒரு விடுதலை இயக்கத்துக்கு ஈடாக செயற்பட்டு வந்திருக்கிறது. இந்தப் பணி தொடரவேண்டும். தமிழர் போராட்டக்களத்தில் இலட்சக்கணக்கில் மக்கள் உயிர்களைப் பலிகொடுத்து விட்டார்கள். அதேபோல உதயன் நிறுவனத்திலும் உயிர்ப் பலிகளும், பொருள் இழப்புகளும் மதிப்பிடப்பிட முடியாததாகும். உதயன் நிறுவனத்தைக் கொண்டு நடத்துவதில் அர்ப்பணித்து நிற்கும் உதயன் குழுமத்தை நாம் அனைவரும் அறிவோம்.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை தளத்தில் செய்திகளை வெளியிடுவதும், அதற்கான அறிவு ஆற்றலை வளர்ப்பதும் மக்களை வெற்றிகரமாக வழிநடத்துவதிலும், போராட்டக்களத்தில் போராளிகளாக தளபதிகளாக தலைமைதாங்குவதும் மிக்க அர்ப்பணம் நிறைந்த பணியேயாகும்.

உதயன் ஏடு 38 ஆண்டுகளைக் கடந்து 39ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்து இன்னும் இளமையுடன் அறிவாற்றலுடன் அனுபவ முதிர்ச்சியுடன் தலைமைத்துவப் பண்புகளுடன் தமிழினத்தை வழிநடத்தி தமிழ்த் தேசிய விடுதலைக்கு அந்த விடுதலையை சுதந்திர ஆட்சியை மக்கள் வென்றெடுக்கத் தொடர்ந்தும் நின்று நிலைத்து அர்ப்பணித்து உதயன் ஏடு வளரவேண்டும் என்று வாழ்த்தி நிற்கின்றோம்.

**மாவை சோ.சேனாதிராசா,**
தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச இராஜதந்திரத்தை நகர்த்திச் சென்றவன் உதயன்



முப்பத்தொன்பது ஆண்டுகள் விரைவாக ஓடி விட்டன. ஈழத்தமிழர் வரலாற்றில் இந்த காலகட்டம் சவால் மிகுந்தது. துயரம் மிகுந்தது. வானிலும், தரையிலும், கடலிலும் தீம்பிழம்பு ஆறாய், மழையாய் ஓடிய, கொட்டிய எரிமலை காலங்கள்.

வடக்கின் பிராந்திய ஏடாய் தோன்றி, தேசிய அவதானம் பெற்று, உள்நாட்டு, வெளிநாட்டு, அபிமானத்தையும் பெற்ற ஏடு, உதயன். இந்த ஏட்டை செதுக்கி, வடிவமைத்து, அரசியல் பருவ காலங்களுக்குள் முன்னெடுத்த அனைத்து ஆசிரியர்களும், அவர்களது அணிகளும் எனக்கு பரிச்சயமான நண்பர்கள். நான் எங்கே இருந்தாலும், இன்றைய பல புதிய அரசியலர்களை விட அதிகமாக இவர்களுடனேயே கூட ஓடியவன், நான்.

'..சோ வட்ஸ் உதயன் டெல்ஸ் டுடே..?' என்ற கேள்வி, கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களுடன் உரையாடிக்கொண்டு இருக்கும் கடுமையான காலகட்டங்களில், அடிக்கடி எழுப்பப்படுவதை, நான் பல பத்தாண்டுகளுக்கு முன்னமேயே கேட்டுள்ளேன். அதாவது, அதாவது, இலங்கை யுத்தம், இனப்பிரச்சினை ஆதியன பற்றி உரையாடும்போது, வடபுல மக்களின் எண்ணம் எதுவென அறிய உதயனின் கருத்தை தேடி வாசிப்பதை கொழும்பு ராஜதந்திரிகள் அன்று வழமையாக கொண்டிருந்தனர். அவர்களுக்கு இதுதான் அன்றிருந்த ஒரே வழி.

நண்பன்
**மனோ கணேசன்**
நாடாளுமன்ற உறுப்பினர்








## ஈழத்தமிழர்களின் ஊடகக்குரலானவன்

தமிழ்மக்களின் உள்ளத்திலும், உணர்விலும் இரண்டறக் கலந்திருக்கும் உதயன் நாளிதழ், தனது 39ஆவது அகவையில் கால்பதிப்பதையிட்டு அகமகிழ்கிறேன். தமிழின வரலாற்றுத் தடங்களை மீட்டிப்பார்க்கையில் காலப்பிரவாகத்தின் கறைபடிந்த நாள்களில்கூட தமிழர்களுக்கான சூரியனாய் 'உதயன்' உதித்தே வந்திருக்கிறான் என்பதும், கொண்ட கொள்கையில் பிறழ்வின்றி, வரித்த இலட்சியத்தில் தளர்வின்றி இழப்புகளின் விளிம்பில் நின்றுகூட இனத்தின் குரலாக ஒலித்திருக்கிறான் என்பதும்தான் நான்கு தசாப்தங்களை நெருங்கியும் ஈழத்தமிழர்களின் இதயங்களில் உதயன் தனித்துவம் பெற்றிருக்கக்; காரணம். காலங்காலமாகவே சிங்கள ஆதிக்கத்தின் பிடிக்குள் சிக்குண்டும், அடியோடு இடம்பெயர்க்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வரும் இனமாகவே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் அபிலாசைகளையும் வடக்கு, கிழக்கின் நிலைப்பாட்டையும் சர்வதேசத்துக்கு எடுத்துக்கூறும் ஒரு பலமான சாட்சியாகப் பயணித்துக் கொண்டிருக்கும் உதயன் இனியும், எதிர்வரும் இடர்களையெல்லாம் கடந்து என்றென்றும் தமிழ்மக்களுக்காய் தன் பணி தொடர வேண்டுமென இவ் அகவை நாளில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.



**சிவஞானம் சிறீதரன்**
நாடாளுமன்ற உறுப்பினர்



## நெருப்பாற்றை நீந்திக் கடந்தவன்

உதயன் தினசரியின் முப்பத்தி ஒன்பதாவது அகவைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் உவகை கொள்கின்றேன்.

உதயனின் உதயமும் உயர்வும் நெருப்பாற்றை நீந்திக் கடந்த வீர வரலாறு என்பதை வன்னி மண்ணுக்கு உரியவன் என்ற வகையில் அனுபவமாகவே அறிந்திருக்கிறேன். உணர்ந்திருக்கிறேன். போர் இயன்றவரை விளையாடிச் சென்ற எம் மண்ணினும் மண்ணின் மக்களினதும் துயரங்களை வெளிக்கொணர்வதில் உதயன் சிரத்தையுடன் செயலாற்றுகிறது என்பது ஈழத் தமிழரின் வரலாற்றில் ஈரமாய் பதியப்பட வேண்டியதொன்றாகும்.

இந்த வேள்வியிலே உதயனின் உயிர் பலமுறை சென்று மீண்டிருக்கிறது என்பதை மனச்சாட்சியுள்ள யாரும் மறுக்கமாட்டார்கள். இவ்வாறான நீண்ட துன்பகரமான பயணத்தில் உதயனின் ஆசிரிய பீடத்தினதும் அதன் ஊழியர்களது அர்ப்பணிப்பையும் நான் மனதார வாழ்த்துகிறேன். இதன் முப்பத்தி ஒன்பதாவது அகவையிலிருந்து இன்னும் நீண்ட ஆயுளுடன் பயணிக்கவும் மக்கள் பயன்பெறவும் மனமுவர்ந்து ஆசிக்கின்றேன்.

**கே.மஸ்தான் காதர்**
இராஜாங்க அமைச்சர் - கிராமிய பொருளாதாரம்

## சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக உதயனின் குரல் என்றும் வலியதே!





உதயன் பத்திரிகை தனது ஊடகப் பணியில் 38ஆவது ஆண்டை நிறைவு செய்து 39ஆவது ஆண்டுக்குள் நுழைவதை முன்னிட்டு உதயனை வாழ்த்துவதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பெருமிதம் கொள்கின்றது.

தமிழ் மக்களது உரிமைப் போராட்ட வரலாற்றில் உதயன் பத்திரிகையின் பங்கும் பணியும் என்றும் மறக்க முடியாதவை. உதயன் பத்திரிகையானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தமிழ் மக்களின் உரிமைக்காகவும், தமிழ் மக்கள் மீதான சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு எதிராகவும் குரல் கொடுத்து வந்துள்ளது. குறிப்பாக தமிழ்த் தேசத்தின் மீது சிங்கள தேசம் ஆக்கிரமிப்பு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்த நிலையில் யுத்த களத்திலிருந்து வெளிவந்த துணிச்சல் நிறைந்த பத்திரிகையாகும். வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதளவு நெருக்கடிகள் மத்தியிலும் பல உண்மைகளை யுத்த களத்திலிருந்து வெளிப்படுத்துவதில் துணிந்து செயற்பட்டமையினால் அதன் ஊடகவியலாளர்கள் பலர் அரசினாலும் அதன் துணை இராணுவக் குழுவினராலும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். பத்திரிகை அலுவலகமும் அதன் பொறித்தொகுதியும்கூட மோசமாக தாக்கிச் சேதமாக்கப்பட்டது.

உதயனின் இத்தகைய அர்ப்பணிப்பான செயற்பாடுகளால் மக்கள் கண்ணைமூடிக்கொண்டு நம்பும் நிலை கூட இருந்தது. இந்த நிலையில் அந்த நம்பிக்கையை துஷ்பிரயோகம் செய்யாத வகையில், மக்களுக்கு சரியான முறையில், உண்மையாகவும் நேர்மையாகவும் தகவல்களை வழங்கி, அறிவூட்டி வழிகாட்டிச் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் உதயன் பத்திரிகை நிறுவன உரிமையாளருக்கும் ஆசிரியர்கள், செய்தியாளர்கள் உத்தியோகத்தர்களுக்கும் உண்டு. அந்தக் கடமையை உதயன் பத்திரிகை சரிவர ஆற்றவேண்டும். ஒவ்வொரு பத்திரிகையின் ஆசிரியர் பீடமும் தனித்துவமான கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும். எனினும் மாற்றுக் கருத்துக்கள் முன்வைக்கப்படும்போது, அந்தக் கருத்துக்களுக்கும் இடமளித்து, அத்தகைய செய்திகளையும் பிரசுரித்து, மக்கள் மத்தியில் விவாதங்கள் ஏற்படுத்தப்படக் கூடிய வகையிலும் இடமளிக்கப்படவேண்டும். மாற்றுக் கருத்துக்களுக்கும், அதன் மூலம் ஏற்படக்கூடிய விவாதங்களுக்கும் இடம் வழங்கக்கூடிய வகையில் உதயன் பத்திரிகை முன்னின்று செயற்படவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

இலங்கைத்தீவில் எமது இனம் தனது இருப்புக்காக நீண்ட நெடிய போராட்டத்தை, ஈடுசெய்ய முடியாத விலைகொடுத்து நடத்தியுள்ளது. தனது இலக்கை நோக்கி தமிழ் இனம் இன்னமும் போராடிக்கொண்டேயிருக்கின்றது. இந்த விடுதலைப் பயணம் வெற்றியடைய வேண்டுமானால் இந்தத் தீவை மையப்படுத்தி இடம்பெறும் பூகோள ஆதிக்கப் போட்டியும், இந்தப் போட்டியில் தமிழ் மக்களது நலன்களை அடைந்து கொள்வதற்கு ஏற்ப, எவ்வாறு தமிழ்த் தரப்பு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலும் உதயன் ஆசிரியபீடம் ஆழமான கரிசனை கொண்டு உண்மை நிலைமைகளுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும். உதயன் பத்திரிகை தனது பொறுப்பை உணர்ந்து தமிழ் மக்களின் உண்மையான தமிழ்த் தேச விடுதலைக்காக செயற்படும் எனவும் நம்பிக்கையுடன், உதயன் பத்திரிகையின் வெற்றிப் பயணம் தொடர வாழ்த்துகின்றோம்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**
*நாடாளுமன்ற உறுப்பினர்*
*தலைவர் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி*

**செல்வராசா கஜேந்திரன்**
நாடாளுமன்ற உறுப்பினர்
பொதுச் செயலாளர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## உலக மக்களுக்கு உன்னத சேவை!



யாழ்ப்பாணத்தில்; அச்சு ஊடகத்துறையில் தனக்கெனத் தனியிடம் பதித்து 38 வருடங்களை நிறைவு செய்து 39ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் உதயன் பத்திரிகைக்கு எனது உளம் கனிந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பத்திரிகைகள் மக்களுடைய வாழ்க்கையில்; முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை செய்திகளை மட்டுமன்றி விழிப்புணர்வுகளையும் மக்களுக்கு எடுத்துச்சென்று அவர்களை விழிப்படையச் செய்கின்றது. உதயன் பத்திரிகை இந்த கடமையை பல சவால்கள், நெருக்கடிகளுக்கு மத்தியில் உரிய வகையில் இன்று வரை செய்து வருகின்றது.

நவீன காலத்தின் போக்கிற்கேற்ப ஊடகத்துறையும் தன்னை மேம்படுத்தும் இக்காலத்தில் உதயனும் தனது ஊடக சேவையை உலகெங்கிலுமுள்ள புலம்பெயர் தமிழ் மக்களுக்கு பல்வேறு தளங்களினூடாக வழங்கி வருகின்றது. உதயனின் வளர்ச்சியில் ஆரம்பம் முதல் இன்று வரை பங்காற்றிய அனைவருக்கும் எனது பாராட்டுக்களை வழங்குவதோடு, உதயன் பத்திரிகையின் வளர்ச்சிக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**த.சித்தார்த்தன்,**
நாடாளுமன்ற உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தெளிவான செல்நெறி உதயனின் தனித்துவம்

'வாசிப்பதால் மனிதன் பூரணப்படுகிறான்' என்ற வாசகத்துக்கு அமைய பத்திரிகை வாசிப்பதன் மூலம் மனிதன் தன்னுடைய திறன்களையும், அறிவையும் விருத்தி செய்து கொள்ள முடியும். பத்திரிகை வாசிப்பின் மூலம் கலை, கலாசாரம், விளையாட்டு, பண்பாடு, வியாபாரம் போன்ற அனைத்து துறைகள் சார்ந்த அறிவினையும் வளர்த்துக் கொள்ள முடிவதோடு எம்மைச் சூழவுள்ள சமூகத்தில் நடைபெறுகின்ற சமகால நிகழ்வுகளையும் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இருப்பினும், மாறிவரும் நவீன உலக ஒழுங்குக்கேற்றாற் போல தொழில்நுட்பமும் அதிக வளர்ச்சி அடைந்து வருவதன் காரணமாகப் பத்திரிகை தவிர தொலைக்காட்சி, இணையத்தளம், தொலைபேசி முதலான பல வழிகளின் ஊடாக நாம் செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. பத்திரிகைகளை விட மிக வேகமாகவும், கவர்ச்சிகரமாகவும் விடயங்களைத் தெரிந்து கொள்வதற்கு பல சமூக வெகுஜன ஊடகங்கள் உருவாகியுள்ளன. இதனால், பத்திரிகைகளை வாசிப்பவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைந்து வருகிறது. இது பத்திரிகைத்துறை சார்ந்தோருக்குப் பெரும் சவால் என்றே சொல்ல வேண்டும்.

ஆனாலும், பத்திரிகையை வாசித்து வந்தவர்கள் எவராக இருந்தாலும், அன்றிலிருந்து இன்று வரை அதன் பயன்பாட்டை கைவிடாமல் தொடர்ந்துகொண்டே இருப்பதும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்யதொரு விடயமாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டை மையப்படுத்திய அச்சு ஊடக வரலாறு என்பது நீண்ட காலப் பாரம்பரியம் மிக்கது என்பதுடன் தனித்துவம் மிக்கதுமாகும்.

அதிலும் குறிப்பாக எமது யாழ்ப்பாண மண்ணில் உதயனைக் காணாமல் தங்கள் நாட்கடமைகளை ஆரம்பிக்காத பலரை நாம் காண முடியும். யாழ்ப்பாணத்து அச்சு ஊடக வரலாற்றில் உதயனின் வகிபாகம் பிரித்துப் பார்க்க முடியாதது. யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் ஒன்றாக உதயனும் அதன் அச்சு ஊடகப் பண்பாடும் புதிய பிரிமாணத்தைக் கொண்டுள்ளதுடன், உதயன் தனக்கெனப் பல தனித்துவங்களையும் கொண்டமைந்திருப்பது சிறப்பாகும்.

குறிப்பாக, இடர்கள் பல கண்ட போதிலும், தடைப்படாமல் 37 வருடங்கள் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஒரேயொரு அச்சு ஊடகம் எனும் வரலாற்று அடையாளம் உதயனுக்கு உண்டு. பரீட்சைப் பெறுபேறு, கப்பல் போக்குவரத்து அட்டவணை, நியமனப் பட்டியல், மரண அறிவித்தல் என அத்தனைக்கும் இந்தச் சமூகம் உதயனில் தங்கியிருந்த போர்க் காலப் பொழுதுகள் என்றும் மறக்க முடியாதவை. உதயன் தன் தனித்துவத்தை இழக்காது இன்று வரை பயணிக்கின்றமை அதன் தெளிவான செல்நெறிக்குச் சான்றாகும்.

உதயன் தற்போது பயணிக்கும் ஊடகச் சூழலும் பெரும் சவாலானது. கட்டற்ற ஊடகப் பெருவெளிகளின் தாக்கம், ஊடகங்களின் பணியில் பாதியை செய்யும் சமூக வலைத் தளங்களின் ஆக்கிரமிப்பு, எனச் சவால்கள் நாளுக்கு நாள் நீள்கின்றன. இருந்தும் உதயன் தன்னிலை தவறாது வெளிவருகின்றமை பாராட்டுக்குரியது.

இன்று தனது 38ஆவது மைல் கல்லைக் அடையும் உதயன், தமிழர் தாயகத்தின் தனித்துவமான ஊடகமாகத் தொடர்ந்தும் பயணிக்களன் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதுடன், உதயனின் அனைத்து முயற்சிகளிலும் இறையருள் துணை நிற்க எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் சிறிசற்குணராஜா**
துணைவேந்தர்



சர்வதேச
விருது பெற்ற
ஒரேயொரு
தமிழ் ஊடகம்



## உதயமாய் உயர்ந்திடு

கிழக்கின் விடியலை நாடியே ஏங்கிடும்
உளத்தார் யாவர்க்கும் உதயனே ஆறுதல்
நிலத்தில் முப்பத்து ஒன்பது ஆண்டுகள்
தளர்ச்சி இன்றியே தந்தனை செல்நெறி

மக்கள் மனங்கவர் நாளிதழ் ஆனதால்
இக்கண் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைப்
பக்கம் வந்திடும் செய்திகள் யாவுமே
திக்குகள் சேர்த்தனை நன்றிகள் தந்தனம்

தாயகத் தமிழர்நாம் தரணியில் ஓங்கிட
நேயமாய் நல்வழி காட்டிடும் உதயனே
காயங்கள் பட்டனை காய்த்த மரமதால்
ஓயாது நின்சேவை உயர்வுறத் தந்திடு!

செந்தமிழ்ச் சொல்லருவி
**சந்திரமௌலீசன் லலீசன்**
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை





## தமிழர்களின் மந்திரச்சொல்

'உதயன்', இந்த மந்திரச்சொல் யாழ். ஊடக உலகை வியாபித்து இன்று இன்னும் ஒரு அகவை காண்கிறது. ஊடகப்பணி என்பது வெறுமனே செய்திகளைச் சொல்வதிலும் பார்க்க, கருத்துருவாக்கத்தையும் உருவாக்கும் வலு நிறைந்தது என்பதைத் தனது அன்றாடச் செயலாகப் பொறுப்புணர்ந்து பணிசெய்யும் 'உதயன்' இன்றைக்கும் அதனைத் தன் தனித்துவமாகப் பேணிவருவதை உன்னிப்பாக அவதானிக்கமுடிகின்றது. யாழ்ப்பாண மண்ணின் பண்பாடு, சமூக இயங்கியல், அரசியல், பொருளியல் என அனைத்துத் தளங்களிலும் தான் மக்களுக்கு எதனைச் சொல்ல வேண்டும், எப்படிச் சொல்லவேண்டும் என்ற கோடுபிடித்து நகர்வது உதயனின் சீர்மை நிறைந்த பயணத்தின் வெளிப்பாடு.

தகவற் சிதறல்கள் நிறைந்து, தகவல்களே மழையாகப் பொழியும் இன்றைய ஊடக உலகில் ஒரு தினசரியாக வாசித்துவிட்டுக் கடந்துபோகும் தன்மையற்று, அதன் ஒவ்வொரு வரியும் மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்படும் வண்ணம் தனது பணிச்செலுத்துகையைக் கட்டமைப்பதும் 'உதயன்' தனிச்சிறப்பே.

மாறும் உலகில், ஊடகத் தெரிவுகள் மலிந்துநிற்கும் இன்றைய பொழுதுகளிலும் 'உதயன்' வருவான் என காலைவேளைகளில் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கும் ஒவ்வொரு வாசகருமே ஆழமும் அர்த்தமும்மிக்க அதன் செய்திச்சேவையின் வெற்றியைக் கொண்டாடும் பேறுபெற்றவர்கள். அந்தச் சாதாரணர்களுடன் இணைந்து மீண்டும் ஒரு உதய அகவையை வாழ்த்தி நிற்கிறோம். வாழ்க..! இன்னும் பணி சிறந்து வளர்க..!

**பேராசிரியர் சி.ரகுராம்,**
கலைப் பீடாதிபதி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



## அனைத்து இன மக்களுக்காக உரத்து ஒலிக்கட்டும் உதயன்

ஒரு நாட்டின் கல்வி, பொருளாதார, கலாசார, விளையாட்டு, பண்பாடு போன்றவற்றின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்கு பத்திரிகை பெரும் பங்கு வகிக்கின்றது. அந்த வகையில் உதயன் பத்திரிகை நிறுவனமானது 39ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைப்பதை நினைத்து நாமும் பெருமை கொள்கின்றோம். பல்வேறு சவால்களையும் தடைகளையும் கடந்து தங்களது அளப்பரிய சேவையினை மக்களுக்காக வழங்கி வருகின்ற 'உதயன்' நிறுவனத்தை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் நடைபெறுகின்ற பல்வேறு செய்திகள், கட்டுரைகள், விளையாட்டுச் செய்திகள், வணிகச்சூழ்நிலைகள், சினிமா தகவல்கள் என பல விடயங்களை தன்னகத்தே கொண்டு தினமும் 'உதயன்' இதழ் பிரசுரமாகி வருகின்றது. தற்போது எமது வட மாகாண மக்களின் தினசரி தகவல் அறியும் முறைகளில் பிரதானமாக தங்களது பத்திரிகை திகழ்கின்றது என்பதனை நினைத்து மகிழ்வடைகின்றோம். நாட்டின் மூலைமுடுக்குகளில் நடைபெறும் அனைத்து செயற்பாடுகளையும் அறிந்து கொள்ள தங்களது பத்திரிகை மிகவும் உறுதுணையாக அமைகின்றது. தமிழ் மக்களின் பிரச்சனைகள் மற்றும் அவர்களது தற்கால சூழ்நிலைகளை உலகுக்கு தெரிவிக்கின்ற முக்கிய ஊடகமாக விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பத்திரிகை சேவை என்பது இனம், மதம், மொழி கடந்து நாட்டு மக்கள் அனைவருக்கும் பயனுடையதாக அமைதல் வேண்டும். அந்த வகையில் நாட்டின் ஒவ்வொரு மக்களது வாழ்விலும் 'உதயன்' பத்திரிகையின் செயற்பாடுகள் கைகொடுக்க வேண்டும் என வாழ்த்துவதோடு, தங்களது பத்திரிகை செயற்பாடுகள் எந்தவித தடைகளும் இன்றி தொடர்ந்து முன்னே பயணிக்க வேண்டும் என இறைவனைப் பிராத்திக்கின்றோம்.



**பேராசிரியர் த.மங்களேஸ்வரன்.**
துணைவேந்தர்,
வவுனியாப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985
2023

சர்வதேச விருது பெற்ற ஒரேயொரு தமிழ் ஊடகம்

## பெருமிதத்துடனான பயணம் தொடரட்டும்



ஊடகப் பரப்பில் தனக்கென தனியிடம் பதித்துள்ள உதயன் பத்திரிகை இன்று 39ஆவது அகவைக்குள் கால் பதிப்பதை யிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

தமிழர்தம் மனதை அறிந்து எமது பண்பாட்டுக்கு ரிய பாணியில் தகவல்களையும், செய்திகளையும், அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரம் போன்ற வெவ்வேறு துறைகளினூடாக வாசகர்களுக்கு அளித்து வருகின்ற உதயன் பத்திரிகை தனது 39ஆவது அக வையில் கால்பதிக்கின்ற இந்த நாள் மகிழ்ச்சிக்குரியது. உலகம் போற்றும் உன்னதப் பத்திரிகையாகவும் உயர்ந்த இலட்சியமும் உன்னதக் கொள்கையும் கொண்டு உதித்தவன் உதயன். உலக வளர்ச்சிக்கு ஏற்ப தமிழ்மக்களை இட்டுச் செல்வதற்கு இயன்றளவு தனது முயற்சிகளை மேற்கொண்டு வருபவன். மாண வர்களுக்கான அறிவுப் பசியைப் போக்கத் தேவை யான கல்வி, பொருளாதாரம், அரசியல், உலகவிட யம், சமூகக் கட்டுரை, கவிதை, சிறுகதை, சுகாதாரப் பழக்கவழக்கம், ஆன்மிகம் என்பவற்றை நாளிதழில் பதிப்பித்து மனம்கவர் பத்திரிகையாக வலம் வரும் உதயன் பத்திரிகை இன்னும் பல்லாண்டு பயணிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ்**
ஆளுநர், வடக்கு மாகாணம்.

## இளைஞர்களை வழிப்படுத்த இடையறாத ஊடகப்பணி!



ஈழ மண்ணிலிருந்து தமிழ் பேசும் மக்க ளின் தனிப்பெரும் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் உதயன் பத்திரிகை யானது 39ஆவது ஆண்டில் தடம் பதிப்பதனை சிறப்பிக்கும் முகமாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 38 வருடங்களாக யாழ்ப்பாணத்திலிருந்து நெடுங் காலம் வெளிவரும் முன்னணி நாளாந்த தமிழ் பத்திரிகை எனும் ரீதியில் பல்வேறு சவால்களையும் அச்சுறுத்தல்க ளையும் எதிர்கொண்டு, இடையறாது தனது செய்திகளை மக்களுக்கு வழங்கி வாசகர் மனங்களில் தனியிடம் பெற்று தனது பணியை தொடர்ந்து வரும் உதயன் பத்திரிகைக்கு எனது முதற்கண் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்றைய காலம் தொட்டு இன்று வரை பத்திரிகைகளுக்கு என்று பொதுமக்கள் மத்தியில் தனியிடம் உண்டு. வாசகர் களுக்கு புதிய விடயங்களைத் தெரிவிப்பதுடன், உளம் சார் விடயங்களையும் கட்டுக்கோப்பில் வைத்திருக்க உதவுகின் றன. அந்த வகையில் உதயன் பத்திரிகை தனது பணியை சிறப்புடன் தொடர்வதனையிட்டு மகிழ்வடைகின்றேன்.

**தி.திரேஸ்குமார்,**
மேலதிக மாவட்டச் செயலர்
மாவட்ட செயலகம், வவுனியா.

## குடாநாட்டு மக்களின் குரலாக ஒலிக்கிறான்



இலங்கையின் வடபுலத்திலி ருந்து வெளிவரும் நாளே டுகளில் உதயனுக்குத் தனியிடமுண்டு. உள் ளூர்ச் செய்திகள் முதல் உலக நடப்புவரை விரை வாகவும் நிறைவாகவும் தரு வதில் உதயனின் பங்கு தவிர்க்க முடியாததாகின்றது.

இன்றைய இலத்திரனியல் செல்வாக்கின் காரணமாக ஊடகத்துறையின் பரிமாணம் பல்வேறு மாற்றங்களைக் கண்டபோதும் குடாநாட்டு மக்களின் குரலாக ஒலிக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய முன்னிலை ஊடகங்களில் உதயனும் ஒன்றாகும் என்பது மிகையில்லை. மேலும் அது மின்னிதழாக உலகெங்கும் பரந்து தனது வாசகர் வட்டத்தை விரிவுபடுத்திக் கொண் டிருக்கிறது.

நாளேடுகளாக வாரமஞ்சரியாக செய்திக ளோடு பயனுள்ள கட்டுரைகள் ஆய்வுகள் இலக்கிய ஆக்கங்கள் என எழுத முனை யும் ஆர்வலருக்கு களமாகவும் அமைந்து காணப்படுகிறது.

ஊடகத்துறையின் நெறிமுறைகளைப் புறந்தள்ளி சமூகத்தாக்கங்களுக்கான பொறுப்புக்கூறலிலிருந்து விலகி சுவார சியத்தையும் உணர்ச்சிக்கிளர்ச்சியையும் நோக்கமாகக் கொள்ளாமல் ஊடகங்கள் செயற்படுமாயின் சமூகமாற்றம் சாத்திய மானதாக அமையும்.

38 ஆண்டுகள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து தன் பணிதொடரும் மூத்த பத்திரிகை என்ற பெருமைகாத்து வளர உதயனுக்கு எனது வாழ்த்துகளைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

**அ.சிவபாலசுந்தரன்**
மாவட்டச்செயலாளர்
யாழ்ப்பாணம்

## கண்ணியமான சமூகத்தை உருவாக்குகிறான் உதயன்



பொதுமக்களின் உரிமைகள் மற்றும் தனித் துவத்தை கருத்திற் கொண்டு, தேசிய பாதுகாப்பிற்கும் தனிநபர் சுதந்திரத்திற் கும் பங்கம், இடையூறு விளைவிக்காத வகையில் கருத்துகள் பகிரப்பட வேண் டும் என்பது பத்திரிகை சாசனத்தின் முக்கிய கோட்பாடாகும்.

பத்திரிகைத்துறையின் அடிப்படை நோக்கமா னது நடுநிலைமை தவறாமல், ஒழுக்கமானதும் தெளிவானது மான செய்திகள், கருத்துக்கள் மற்றும் தகவல்களைத் தருவதே ஆகும். பத்திரிகையில் கருத்து சுதந்திரம் என்பது சுதந்திரமாக நம் கருத்துகளை கூறுவதில் மட்டும் இல்லை: அந்தக் கருத்தை கூறிய பின்பும் நமக்கு சுதந்திரம் இருக்கின்றதா? என்பதிலேயே தங்கி உள்ளது.

அந்த வகையில் உதயன் பத்திரிகையானது இன்றுவரை ஊடக சுதந்திரத்தை மட்டுமன்றி, ஜனநாயகத்திலும் மக்களினதும் சுயா தீனத்தை பேணத்தக்க, மதிப்பளிக்கத்தக்க வகையிலேயே கடந் தகால, நிகழ்கால செய்திகளை, கருத்துக்களை, நிகழ்வுகளை மற்றும் பண்டைய வரலாறு, அறிவியல், கல்வி, கலை, இலக் கியம், விளையாட்டு மற்றும் அரசியல் போன்ற பல்வகையான செய்திகள், கட்டுரைகள், விவரணங்கள் மூலமாக உண்மைத் தன்மை மாறாமல் உடனுக்குடன் மக்களுக்குத் தெரியப்படுத்தி வருகின்றது. பத்திரிகைத் துறையினாலேயே ஜனநாயகத்துக்கு வலிமையும் எழுச்சியும் சேர்க்கப்படுகின்றது என்கிற மாறாத உண்மையை எந்தவொரு சூழ்நிலையிலும் வழுவாது காத்து வரு கின்றதொரு பத்திரிகையாக இற்றைவரை இயங்கி வருகின்றது. உதயன் பத்திரிகையானது மேன்மேலும் வளரவும் இந்த நிறுவனத்தில் பத்திரிகை தர்மத்தோடு கடமையாற்றிக் கொண் டிருக்கின்ற இயக்குநர், ஆசிரியர்கள் மற்றும் சகல ஊழியர்க ளுக்குமான நல்லாசிகளை இறைவன் அருள வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**எஸ்.எம்.சமன் பந்துலசேன**
பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம்

## தமிழ் மக்களைக் கவர்ந்து மிடுக்குடன் பயணிக்கிறான்




'உதயன்' செய்தித்தாளானது 39ஆவது அகவையில் காலடி எடுத்து வைப்பதை யொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வவுனியா நிர்வாக மாவட்ட செயலா ளராக வாழ்த்துச் செய்தியை வழங்கு வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த இத்தனை வருடங்களுள் உதயன் பத்திரிகையானது தமிழ் பேசும் மக்களின் நெஞ்சங்களை கவர்ந்திழுக்கும் வகையில் மிடுக்குடன் பயணித்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் சார்ந்த பல்வேறு துறைகளிலும் வாசகரது அறிவை மேம்படுத்த ஆற்றி வருகின்ற ஊடகப்பணி தொடர்பில் பெருமிதம் அடைகின்றேன்.

மேலும், பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து தமது அன்றாட வாழ்க்கையினை கடந்து வரும் மக்களின் மனதுக்கு புத்துணர்ச்சியையும், பிரச்சினைக ளுக்கான ஆலோசனைகளையும் தன்னகத்தே கொண்டு ஒளிவீசும் உதயன் பத்திரிகைக்கு மேலும் வாய்ப்புக்கள் கிட்ட வேண்டுமென பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பீ.ஏ.சரத்சந்ர**
மாவட்ட செயலாளர், வவுனியா.



Consulate General of India
Jaffna

The Consulate General of India in Jaffna conveys its sincere congratulations to the Uthayan daily and its team on the completion of 39 years of its publication. Uthayan daily over these years has done commendable work in bringing to its readers news and opinions, a vital task in any democracy. One of the leading Tamillanguage national media outlets, Uthayan has continued to play an essential role in strengthening relations between India and Sri Lanka, especially highlighting the essential contributions of India, its cultural outreach and developmental projects in the country, especially the Northern Province.

On this commemorative occasion, the Consulate commends all those involved in the publication of Uthayan for their efforts, passion, commitment and wish the team continued success in the years to come.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம், உதயன் நாளிதழுக்கும் அதன் குழுவிற்கும் 39 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்த ஆண்டுகளில் உதயன் நாளிதழ் தனது செய்திகளையும் கருத்துக்களையும் வாசகர்களிடம் கொண்டு சேர்ப்பதில் பாராட்டத்தக்க பணியைச் செய்துள்ளது, இது எந்த ஜனநாயகத்திலும் இன்றியமையாத பணியாகும். முன்னணி தமிழ் மொழி தேசிய ஊடகங்களில் ஒன்றான உதயன் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதில் தொடர்ந்து முக்கிய பங்கை ஆற்றி வருகிறது. குறிப்பாக இந்தியாவின் அத்தியாவசிய பங்களிப்புகள், அதன் கலாசார மேம்பாடு மற்றும் நாட்டில், குறிப்பாக வடக்கு மாகாணத்தின் வளர்ச்சித் திட்டங்களை எடுத்துக்காட்டுகிறது. . இந்த நினைவேந்தல் நிகழ்வில், உதயன் பத்திரிகையை வெளியிடுவதில் ஈடுபட்டுள்ள அனைவரையும் அவர்களின் முயற்சிகள், ஆர்வம், அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்காக துணைத் தூதரகம் பாராட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நெருக்கடியான நாள்களில் பெறுமதியான மக்கள்பணி

கடந்த 38 ஆண்டுகளாக பல்வேறு ஆசிரியர்கள் ளால் வழிநடத்தப்படும் உதயன் பத்திரிகை இன்று தனக்கான தனித்துவமான இடத்தை வடபகுதி மக்களிடையே பெற்று, 39ஆவது அகவைக்குள் இன்று கால் பதிக்கின்றது.

நாட்டில் போர் நடைபெற்ற காலத்திலும், பெருந்தொற்று ஏற்பட்ட காலத்திலும், பின்னர் பொருளாதாரப் பேரிடர் ஏற்பட்ட போதும் ஊடகங்கள் ஆற்றிய பணி சிறப்பாகக் குறிப்பிடப்படத்தக்கவை. உலகில் யுத்தம் இல்லாத காலத்திலும் ஊடகவியலாளர்கள் ஆபத்து நிறைந்த பணியை ஆற்றிவருகின்றார்கள். மாற்றுக் கருத்துக்கள், ஒரு பிரச்சினைக்கான மாறுபட்ட தீர்வுகளை, முன்மொழிவுகளை ஒருவர் முன்வைக்கும்போது அல்லது எழுதுகின்றபோது கருத்துக்களை முன்வைப்பதற்கான உரிமைகள் எப்போதும் பாதுகாக்கப்படல் வேண்டும். ஊடக சுதந்திரம் என்பது ஒரு நாட்டின் ஜனநாயகத்துக்கு அடிப்படையானது. அதேநேரம் இன்று சமூக ஊடகங்களில் தனிமனிதர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் உண்மைக்கு மாறான பக்கச்சார்பான தனிப்பட்ட தேவைகளுக்காக முன்வைக்கப்படும் கருத்துக்கள் மக்கள் மத்தியில் ஊடகங்கள் மீதான நம்பகத்தன்மையை இழக்கச் செய்து வருகின்றன.

ஒரு செய்தியை வழங்குவதில் உள்ள பொதுநன்மை என்ன? என்ற விடயத்தை ஊடகவியலாளர்களும் ஊடகத்தின் ஆசிரிய பீடமும், சமூக ஊடகத்தைப் பேணும் ஒவ்வொரு தனிபரும் சிந்தித்து அதனைச் செய்தியாக்குவதும் பதிவிடுவதும் ஆரோக்கியமானது.

வட்பகுதியில் நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு நாளிதழ் இப்பகுதி மக்களது வாழ்வை மேம்படுத்தும் பணிகளைச் சுயாதீனமாக முன்னெடுத்தல் வேண்டும். மக்கள் மனம் நிறைந்த நாளிதழ் அடிப்படை வசதியின்றித் தவிக்கும் மக்களுக்கு உதவுவதுடன், தேவையை நாடும் மக்களுடன் நாம் என்ற இலக்கை நோக்கிப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று அன்போடு வேண்டிக்கொண்டு உதயன் நாளிதழ் பல்லாண்டு காலம் ஊடகப்பணியையும் மக்கள் பணியையும் ஆற்றி சிறப்புடன் விளங்க இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துவதில் அகம் மகிழ்கின்றேன்.

**மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி**
பணிப்பாளர்,
யாழ். போதனா மருத்துவமனை,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
வடமாகாணம்.



## உயிர்ப்பலிகளுக்கும் அஞ்சாதவன் உதயன்

வடமாகாணத்தின் சிறந்த தமிழ் இதழ் என்ற பெருமைக்குரியதாக 38 வருடங்கள் ஊடகச் சேவையாற்றிய 'உதயன்' பத்திரிகையைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

1985ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி 'உதயன்' பத்திரிகை அதன் முதலாவது வெளியீட்டை மேற்கொண்டதிலிருந்து இன்று வரை அதன் வளர்ச்சியையும் எதிர்கொண்ட சவால்களையும் கண்கூடாகப் பார்த்தவன் என்ற முறையில் உதயனின் தனித்துவம் மேலோங்கி நிற்பதைப் பார்க்கின்றேன். தமிழ்த் தேசிய உணர்வுகளை மழுங்கடிக்கப்படாது ஊடகப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றியமை பாராட்டுக்குரியது.

'உதயன்' மீது பல்வேறு கால கட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், சொத்து அழிவுகள் ஏராளம். எல்லாவற்றுக்கும் மேலாக பல நற்பணியாளர்களின் உயிர்கள் பலி எடுக்கப்பட்ட நிலையிலும் துணிச்சலுடன் ஊடகப் பணியைத் தொடர்ந்தமை பெருமைக்குரியது. தமிழ்த் தேசிய உணர்வுடன் இலக்கியம், சமயம், கல்வி போன்ற துறைகளிலும் 'உதயனின்' ஊடகப் பணி அற்புதமானது.

பத்திரிகைத்தாள் தடை, மின்சாரத் தடை, எரிபொருள் தடை, புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல், அரச சார்புகளின் அடாவடிகள் யாவற்றையும் சந்தித்து எதிர்நீச்சலடித்து 38 வருடங்கள் நீடித்து நிலைக்கும் உதயன் 39ஆவது அகவையில் கால் பதிக்கும் இந்த நாளில் இன்னல்கள், இடையூறுகள், தடைகள் நீங்கி சீரிய பணியாற்ற இறைவன் அருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**சீ.வீ.கே.சிவஞானம்**
அவைத்தலைவர்,
வடமாகாண சபை.

## பீனிக்ஸ் பறவையாய் தொடர்ந்தும் பறப்பான்



உதயனின் 39ஆவது அகவை தினத்தை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். உதயன் பத்திரிகை மிக நெருக்கடியான போர்க்காலத்தில் வெளிவர ஆரம்பித்ததில் இருந்து பல்வேறு சிறப்புச் செய்திகளைக் கொண்டுவந்தது மாத்திரமல்ல பல்வேறு பணிகளையும் ஆற்றியிருந்ததை நாம் எல்லோரும் அறிவோம்.

பல தடவைகள், இலங்கை அரச படைகளாலும் அரச படைகளின் ஆதரவோடும் நடத்தப்பட்ட தாக்குதல்களால் பல உயிர்ப் பலிகளை உதயன் சந்தித்தது. இன்னும் பல நெருக்கடிகளை உதயன் சந்தித்தது. இன்னும் உதயன் அலுவலகத்தில் அந்த அலுவலகத்தில் துப்பாக்கித் தோட்டாக்களின் அடையாளங்கள் உள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினராக நான் இருந்த காலத்திலும் அதன் பின்னரும் உதயன் அலுவலகத்துக்கு நேரில் பல தடவைகள் நான் சென்றுள்ளேன். ஈழத்தமிழினம் நெருக்கடிகளில் இருந்து எவ்வாறு மீண்டும் மீண்டும் எழும் சக்தியைக் கொண்டுள்ளதோ அவ்வாறுதான் உதயனின் வரலாறும் அவன் பயணமும். இந்தப் பயணம் இன்னமும் தொடர்ந்திட வேண்டும்.

**சிவாஜிலிங்கம்**
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
செலயாளர் நாயகம்
தமிழ்த் தேசியக் கட்சி






## திக்குத்தெரியாத காட்டில் ஒரு தீப்பந்தம் உதயன்

முள்ளிவாய்க்காலில் ஈழத்தமிழர்களின் ஆயுதப்போராட்டம் ஸ்ரீலங்கா அரசால் மூர்க்கத்தனமாக தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், விடுதலைப் போராளிகள் நிராயுத பாணிகளாக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களும் நிர்க்கதிக்கு உள்ளானார்கள்.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்திருக்க வேண்டிய எமது தமிழ் அரசியற் தலைவர்களும் தங்கள் தேர்தல் இலக்குகளையே குறியாகக் கொண்டு செயற்படுவதால் தமிழ் மக்கள் சுக்கான் இல்லாத படகுகளாக, மேய்ப்பன் இல்லாத மந்தைகளாக அரசியல் வெளியல் தத்தளித்து வருகின்றனர். வழிகாட்டத் தகுந்ததொரு தலைமையின்றித் தவித்து வருகின்றனர்.

தடுமாறும் தலைவர்களைத் த10டம் மாறாது பயணிக்க வைப்பதில் சிவில் அமைப்புகள் காத்திரமான பங்கு வகித்திருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக சிவில் அமைப்புகளும் இன்றும் அத்தகைய வளர்ச்சியைப் பெறவில்லை. இனத்தின் அரசியலை மட்டுமே முன்னிறுக்கிச் செயற்பட வேண்டிய சிவில் அமைப்புகள் அரசியல் கட்சிகளின் சார்பு நிலை எடுத்துச் செயற்பட்டுவதால் தமிழ்க்கட்சிகளைப் போன்றே கன்னை பிரிந்து நிற்கின்றன.

இந்தப் பின்னணியிலேயே உதயனின் ஊடகவகிபாகம் முக்கித்துவம் பெறுகின்றது. உதயனின் ஆசிரியத் தலையங்கம் நிராதரவான எமது மக்களுக்கான ஒரு வழிகாட்டியாகவும் தன் கதிர்களைப் பாய்ச்சி நிற்கின்றது. திக்குத் தெரியாத காட்டில் இன்று வந்து நிற்கும் ஈழத்தமிழினத்துக்கு உதயன் ஒரு தீப்பந்தமாக ஒளி வீசுகின்றது. உதயன் மென்மேலும் தன் காலப் பணிகளை செவ்வனே ஆற்ற இயற்கை என்ற பேரன்னை அருள் பாலிப்பாளாக!!

**பொ.ஐங்கரநேசன்**
**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**





## தமிழ்போல் உயர்வான்

ஈழ மண்ணில் இருந்து தமிழ் பேசும் மக்களின் தனித்துவம் மிக்க குரலாக இன்று உலகெலாமுள்ள தமிழ் மக்களின் மனங்களில் பதிந்து நீங்காத மதிப்பினைப் பெற்று நிற்கின்ற உதயன் பத்திரிகை தனது 39வயதில் காலடி எடுத்து வைப்பதை எண்ணி பேருவகை அடைகின்றேன்.

தமிழ் எங்கெல்லாம் வியாபித்துள்ளதோ அதே போல 'உதயனின்' பெயரும் புகழும் வியாபித்து நிற்கின்றது. உதயன் 38 ஆண்டுகளில் கடந்து வந்த சவால்கள், தாங்கிச் சுமந்த துயரங்கள், சந்தித்த சோதனைகள், இடர்களுள் இடையறாது வழங்கிய செய்திகள் என்பனவற்றை சாதாரண வார்த்தைகளுள் அடக்கிவிட முடியாத அசாத்தியமானவை. அவை வரலாற்றுப் பேரேடுகளில் என்றும் அழிக்க முடியாதவை.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நடுநிலையுடன் உடனுக்குடன் செய்திகளை வழங்கி வந்து, எதிர்வரும் வருடம் 40ஆவது ஆண்டு 'மாணிக்கவிழா'வினையும் தொடர்ந்து பல நூற்றாண்டு விழாக்களையும் 'உதயன்' கொண்டாட இறையாசியை வேண்டி நிற்பதோடு இன்று 'உதயன்' தனது 39ஆவது அகவையில் காலடி எடுத்து வைப்பதையிட்டும், அதன் பணிகள் வருங்காலத்தில் மேலும் மெருகேறித் தொடரவும், 'உதயன்' பத்திரிகையின் தனித்துவமான தன்னிகரற்ற செய்திச்சேவை மேலும் வளர்ந்துயர்தோங்கவும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துப் பணிகின்றேன்.

**இ.த.ஜெயசீலன்,**
**ஆணையாளர், யாழ். மாநகரசபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985 2023 39

சர்வதேச
விருது பெற்ற
ஒரேயொரு
தமிழ் ஊடகம்



## தமிழ்த் தேசியத்தின் குரலாய் தொடர்ந்து ஒலிக்கும் உதயன்

ஈழத்தமிழ் மக்களின் மனங்கவர்ந்த நாளிதழாக உதயன் பத்திரிகை விளங்குகின்றது. நாட்டு நடப்புக்களை சுவையாகவும் சுருக்கமாகவும், சூடாகவும் தருவதில் உதயனுக்கு நிகர் உதயனே! உள்ளூர்ச் செய்திகளில் இருந்து உலகளாவிய செய்திகள் வரை அனைத்தையும் உள்ளடக்கியதாக உதயன் வெளிவருகின்றது. காலத்திற்கு ஏற்ற கருத்தாழம்மிக்க கட்டுரைகளையும் உதயன் தாங்கிவருகின்றது. சாமானியர் தொடக்கம் சமூக அந்தஸ்துள்ளவர்கள் வரை அனைவரையும் கவர்ந்திழுக்கும் ஆற்றலும் ஆளுமையும் உதயனுக்கு உண்டு. காலைப்பொழுதுகளில் பலரது கரங்களில் உதயன் தவழுவதை அவதானிக்கலாம்.

இன்று இலங்கை நாட்டில் பல பத்திரிகைகள் ஆளும்தரப்பை திருப்திப்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிடும் சூழலில் உதயன் எந்தத் தரப்புக்கும் சோரம் போகாமல் தமிழ்த்தேசியத்தின் குரலாய், தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த பின்னர் தமிழ் மக்களில் பலர் நம்பிக்கையிழந்து இருந்தனர். எல்லாம் முடிந்து விட்டது எனச் சோர்ந்திருந்தனர். இந்நிலையில் நம்பிக்கை இழந்த மக்களுக்கு தமிழ்த்தேசிய உணர்வை ஊட்டுவதில் உதயன் பத்திரிகையின் பங்களிப்பு காத்திரமானதாகும்.

இலங்கையின் அரசியற்கள நிலவரங்களை சூடுதணியாமல், சுவை குன்றாமல் உடனுக்குடன் தருவதில் உதயன் எப்போதும் முன்னிலையில் நிற்கின்றது. ஈழத்தமிழ் மக்களின் வாழ்வியல் அவலங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதில் உதயன் கனதியான பங்களிப்பை ஆற்றிவருகின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், நில ஆக்கிரமிப்பு, மாவீரர்கள் மற்றும் ஊனமுற்ற போராளிகளின் நிலை போன்ற விடயங்களில் உதயன் தொடர்ச்சியாக தன் அக்கறையை, கரிசனையை வெளிப்படுத்திவருகின்றது. ஒட்டுமொத்தத்தில் சமூக நீதிக்கான அதன் குரல் எப்போதும் ஓங்கி ஒலித்துக்கொண்டே இருக்கின்றது.

ஒரு செய்திப் பத்திரிகை என்ற நிலையையும் தாண்டி தமிழ்த் தேசியத்தின் குரலாய் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கும் உதயனின் 39ஆவது பிறந்தநாளில் எனது இதயபூர்வமான இனிய நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றேன்.

**அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்**
பங்குத்தந்தை,
வேதசாட்சிகள்
இராக்கினி திருத்தலம்



## தமிழ் மக்களின் செல்லக்குழந்தை

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழாக யாழ்ப்பாணத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் தரமான தமிழ்ப் பத்திரிகையான உதயன் இன்று தனது 39ஆவது அகவையில் கால் பதிக்கின்றான். யாழ்ப்பாணத்தில் பெரும் வாசகர் தொகுதி கொண்டிருக்கும் உதயன் வார இறுதி நாள்களில் சஞ்சீவியாக மிளிர்கின்றான்.

இந்த நிலைக்கு வர உதயன் ஆசிரியர் குழாமினர் மேற்கொண்ட முயற்சிகள், எதிர்கொண்ட இன்னல்கள், முகம்கொடுத்த இடர்கள் மிகமிக அதிகம். எல்லாவற்றையும் தாண்டி புதுப்பொலிவுடன் தினம்தோறும் எம் கரங்களில் தவிழ்ந்து, வளர்ந்து, உயர்ந்து நிற்கும் உதயனுக்கு எம் இதயங்கனிந்த நல்லாசிகள் உரித்தாகுக.

அரசியல் சதுரங்கங்கள், விளையாட்டு விமர்சனங்கள், இராசிபலன், இடித்துரைக்கும் ஆசிரியத் தலையங்கங்கள், இஸ்ரேல் ஹமாஸ் போர்ச்செய்திகள் என பற்றி எரியும் உலகச் செய்திகள், ஆன்மீகத் தகவல்கள் என ஒரு வாசகனுக்கு தேவையான அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி ஒரு பத்திரிகை அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்துகின்றது என்றால் அது உதயனால் மட்டுமே முடியக் கூடியதாகும். நினைத்துப் பார்க்க முடியாத உயரத்தை தொட்டு நிற்கும் உதயன் தமிழ் மக்களின் செல்லக்குழந்தையே. அவன் மென்மேலும் சிறப்புற்று வளர என் ஆசிகளை இத்தால் தெரிவிக்கின்றேன்.

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர்,**
உலக சைவக்குமார் ஒன்றிய பீடாதிபதி.
பிரதம குரு,
வல்வை ஸ்ரீ முத்துக்குமாரி அம்மன் கோவில்.

## பயணம் தொடரட்டும்



யாழ்ப்பாணம் மத்தியில் அமைந்துள்ள உதயன் பத்திரிகை நிறுவனம் தனது 35ஆவது ஆண்டில் காலடிவைக்கும் நாளைக் கொண்டாடுவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். மக்கள் மனதில் நிறைந்த இடம் பிடித்த பத்திரிகை உதயனாகும். காலையில் எழுந்தவுடன் கரங்களில் பிடிக்கும் முதல் பத்திரிகை உதயனாகும். உதயன், எந்தக் காலகட்டத்திலும் தவறாது தனது பணியைத் தொடர்ந்து ஆஆற்றிவருகின்றான். உதயன் பத்திரிகையின் பணி மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு, உதயன் பத்திரிகை ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிவஸ்ரீ யோகேஸ்வர ஜெகதீஸ்வரகுருக்கள்**
தலைமைக் குரு
உதயன் பத்திரிகை வளாக சிவன் ஆலயம்.

## ஊடகத்துறையின் ஜாம்பவான்!



ஊடகத்துறையில் தனித்துவமான இடத்தை ஆளப் பதித்துள்ள உதயன் பத்திரிகையின் 38ஆவது நிறைவையொட்டி வெளி வரும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

உதயன், உண்மை நேர்மை அஞ்சாமை கொண்ட பத்திரிகையாகத் திகழ்வதால் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையைப் பெற்றுள்ளது. இந்தப் பத்திரிகையின் நான்கு தசாப்தச் சாதனைகள் பலப்பல. இதனைப் பாராட்டி 'ஊடக சாம்ராஜ்ஜப் பேரரசு' எனும் விருதை இவ்வாண்டு எமது பேரவை வழங்கியதை ஞாபகப்படுத்துகின்றோம். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் முக்கிய வகிபாகத்தைப் பெற்றுள்ள உதயன் தமிழ்த் தலைவர்கள், மரயமானின் பின்செல்லக்கூடா தென்பதில் உறுதியோடிருப்பது பாராட்டிற்குரியது. காலத்தின் தேவை கருதி பல்வேறு ஆக்கங்களை வெளியிட்டு மக்கள் மனங்களை வென்றுள்ளது. இதன்போது ஏற்பட்ட சோதனைகளும் தாராளம். அனைவரையும் சிந்திக்க வைக்கும் அதிவிவேக நுட்பமிகு ஆசிரிய தலையங்கங்களும், ஏனைய ஆக்கங்களும் படிப்போரைப் பலமுறை சிந்திக்க வைத்துச் செயற்படத் தூண்டும் என்பது திண்ணம். இப்பத்திரிகை தொடர்ந்து தமிழர் காவலனாகத் திகழ எல்லாம்வல்ல ஆடல்வல்லான் திருவருள் அபரிமிதமாகச் சொரியப் பிரார்த்திக்கின்றேன்.

**ஈசான சிவ சக்திகிரீவன்,**
தலைவர், இந்து சமயப் பேரவை

## நூற்றாண்டு காணட்டும் உதயனின் சேவைகள்



அதிகாலையில் உதிக்கும் செங்கதிரோன் அனைத்து உயிரினங்களுக்கும் புத்துணர்ச்சியையும் வெளிச்சத்தையும் உண்டாக்குவதுபோன்று, அனைத்து தமிழ் பேசுகின்ற மக்களை விழித்தெழ வைக்கும் மனங்கவர் பத்திரிகையான உதயன் இன்று தன் 39ஆவது அகவைக்குள் கால் பதிக்கின்றான்.

மாணவர்கள், சிறுவர்கள், மங்கையர்கள், வியாபாரத் துறையினர், அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள் என அனைவரின் கைகளிலும் தவழ்ந்து, வைத்த கண் வாங்காமல் பார்க்க வைக்கும் பத்திரிகைகளின் நாயகன் என்றால் அது உதயன்தான்.

பல இடர்கள், இன்னல்கள், துயரங்களைக் கடந்து, வளர்ந்து, எழுந்து, நிமிர்ந்து, கம்பீரமாக உதயன் நூற்றாண்டு கடப்பான். தன் சேவைகளை இதற்கு அப்பாலும் கொண்டு செல்வான். உதயன் குழுமினரின் அளப்பெரும் சேவைகளுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதுடன், அத்தியடிப் பிள்ளையார் பாதம் பணிந்து விநாயகன் துணையையும் வேண்டி நிற்கின்றேன்.

**சிவஸ்ரீ யோகீஸ்வர சுபாஸ்கரகுருக்கள்**
பிரதமகுரு
அத்தியடிப் பிள்ளையார் கோயில்

## உதயனே நீ நீடு வாழ்க!



முப்பத்தொன்பது ஆண்டில்
கால்பதிக்கும் உதயனே!
உண்மைஅஞ்சாமை நடுநிலைமை
உயரிய இலட்சிய நோக்குடன்....!
நன்மை நமக்குச் செய்துவரும்
நாளிதழ் 'உதயன்' நீயே.....!

அன்பை, பண்பை எங்கனுமே
அழகாய் பரப்பும் பணிதனிலே
நன்றே வளர்க நல்லிதழே...!
நீடு வாழ்க புகழ்படைத்தே...!

**த.நாராயணன்**
**வட்டூர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீனிக்ஸ் பறவையானவன்



தமிழ்பேசும் மக்களின் தனிப்பெரும் குரலாகப் பரந்து ஒலித்துக்கொண்டிருக்கும் உதயன் பத்திரிகை தனது 39ஆவது ஆண்டில் வெற்றிகரமாக காலடி பதிப்பதையிட்டுமிக்க மகிழ்வடைவதுடன், பெருமையும் அடைகின்றேன்.
உதயன் தனது வரலாற்றிலே பல கற்கள், முட்கள் நிறைந்த பாதையில் பற்பல இடர்களை முறியடித்து திறமைமிக்க பல உயிர்களைப் பலிகொடுத்து தோற்கடிக்க முயற்சிக்கப்பட்டபோதும், பீனிக்ஸ் பறவை போல மீண்டெழுந்து உயர்ந்து நிற்கின்றது என்பது வியக்கத்தக்கதே.
உதயனின் இந்த மிடுக்கான மாபெரும் வளர்ச்சிக்கும், இதன் தொடர்ச்சியான தலைசிறந்த செயற்பாடுகளுக்கும் தலைவணங்கி இதற்காக தோளோடு தோள் கொடுத்து நிற்கும் உதயன் குழுமத்தினருக்கு என் பாராட்டுகளைத் தெரிவிப்பதில் மனமகிழ்வடைகின்றேன்.
அத்துடன், எம் மக்களின் ஒட்டுமொத்த குரலாகத் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கும் உதயனின் செயற்பாடுகள் மென்மேலும் வளர எனது வாழ்த்துகளையும் ஆசிகளையும் வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

**ஆழ்வாப்பிள்ளை சிறி,**
*இலங்கை நிர்வாக சேவை - விசேட தரம்.*

## யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலில் கலந்தவன்



'ஏர்முனையாய் உலகை உழும் கூர்முனை யாம் பேனாமுனை' என்று கூறுவர். உலகைப் பண்படுத்தி நல்விதையை விதைக்கும் ஆற்றல் பேனாமுனைக்கு உண்டு. கூர்முனையால் 38ஆவது அகவையை நிறைவுசெய்து 39ஆவது வருடத்தில் காலடி எடுத்துவைக்கும் உதயன் பத்திரிகைச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி கூறுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.
உதயன் பத்திரிகை ஊடகத்துறையில் நான்கு தசாப்த காலத்தை நோக்கி நின்று நிலைப்பதென்பது கடினமானதொரு இலக்கே. யாழ்ப்பாண மக்களின் இதயம் கவர்ந்த பத்திரிகையாகி யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்தது 'உதயன்' எனக் கூறின் அது மிகையாகாது.
நெருக்கடியான காலங்களில் தகவல் பரிமாற்றத்துக்கு ஒரு சிறந்த ஊடகமாகத் தொழிற்பட்டதோடு இன்றைய காலமாற்றத்தை உணர்ந்து அதற்கேற்ப தன்னைச் செதுக்கி நின்றுநிலைக்கும் பத்திரிகையாகவும் 'உதயன்' அமைகின்றது.
உதயன் பத்திரிகையைப் பார்த்தபொழுது புலர்ந்த காலம் எம் நினைவில் உள்ளது. மாற்றத்துக்கான ஊடகமாகவும் மாற்றியமைக்கும் ஆற்றல் படைத்த ஊடகமாகவும் தொழிற்பட்டு வருகின்றது. இத்தகைய சிறப்புமிக்க உதயன் பத்திரிகையின் பணி சகாப்தங்கள் கடந்து தொடரவேண்டும் என எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கு.பிரபாகரமூர்த்தி**
*பிரதேச செயலாளர்*
*பிரதேச செயலகம், வடமராட்சி கிழக்கு.*




## மக்களுடைய அபிமானம் வென்றவன்



ஈழத்து ஊடக வரலாற்றில் 'உதயன்' பத்திரிகையானது தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றிருக்கின்றது. தமிழ் மக்களின் இதயம் கவர்ந்த நாளிதழ் என்கின்ற பெருமைக்கும் அப்பால் உலகத்தவர் உற்று நோக்கும் நாளேடுகளில் உதயனும் ஒருவன் என்ற பெருமையும் சிறப்பும் கிடைத்திருக்கின்றமை பாராட்டுக்குரியது.
சுமார் 38 ஆண்டுகள் பயணித்து இந்த வருடம் 39ஆவது அகவையில் கால்பதிக்கும் உதயனுக்கு உளமாற வாழ்த்துவது பெருமையே. எத்தனையோ இடர்வரினும் துணிவுடன், தான் கொண்ட இலட்சியத்தின் வழியே தனக்கென முத்திரை பதித்து 'ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும்' நடுவுநிலையில் நன்னடை பயிலும் உதயனின் வளர்ச்சிக்கு வாழ்த்துகள் கோடி கோடி.....
மக்களுக்குச் செய்திகளைத் தெரிவிப்பது மட்டுமன்றி அறிவியல் தேடலுக்கும், எழுத்தாளர்களுக்குக் களமாகவும், வரலாற்றுப் பதிவுகளின் பொக்கிஷமாகவும், உலகமயமாதல் கருவிற்கேற்ப இலத்திரனியல் வடிவிலும் பல்வேறு தளங்களிலே தனது கதிர்களை முழுவீச்சுத்திறனுடன் பிரயோகித்து வெற்றி நடைபோடும் உதயன்! ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி விழுதெறிந்து உயர்ந்து சிறப்படைய எல்லாவற்றுக்கும் பொதுவான இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**உ.யசோதா**
*பிரதேச செயலாளர்,*
*பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.*



## தமிழர்களுடைய உயிர்ப்பானவன்!

தமிழ் பேசும் மக்களுக்காக 38 ஆண்டுகள் உழைத்து 39ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் உதயன் பத்திரிகைக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.
உணவு, உடை, உறையுள் என்பவற்றுக்கு அடுத்தபடியாகத் தகவல் எப்போதும் முக்கியம் பெறுகின்றது. உள்நாட்டு யுத்தம், பொருளாதார நெருக்கடி, கொரோனா என்பவற்றைத் தாண்டி உள்ளூர் மக்களுக்கான, குறிப்பாக வடக்கு மாகாண மக்களுக்கான பிரதான செய்திகளையும், பிரதேச செய்திகளையும் தக்க தருணத்தில் வழங்கி தமிழ்ச் சமூகத்தை உயிர்ப்போடு வைத்திருந்ததில் உதயனுக்குப் பிரதான பங்குண்டு என்பதை யாவரும் மறந்துவிட முடியாது. அப்பணியை உதயன் அடியெடுத்து வைக்கும் புதிய ஆண்டிலும் தொடர வாழ்த்துகின்றேன்.

**மாணிக்கவாசகர் ஸ்ரீஸ்கந்தகுமார்,**
*பிரதேச செயலாளர், நானாட்டான்*

## காரிருள் அகத்தினில் கதிரொளி நீதான்



'செய்தித்தாள் வலிமை மிக்கது. நினைத்ததை முடிக்கும் வல்லமை வாய்ந்தது' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கூற்றுக்கமைய தமிழர்களின் தேசம் தலைநிமிர்ந்து நிற்கும் வண்ணம் தக்காங்கு தனது ஊடகச் சேவைகளை ஆற்றிவருகின்ற உதயன் நாளிதழுக்கு எனது பிரதேச மக்களின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதையிட்டுப் பெருமையடைகின்றேன்.
குறியீடுகளையும், பல்வேறுதரப்பட்ட விடயங்களையும் ஒன்றுதிரட்டி அன்றாடம் செய்திகளாக மக்களிடத்தில் கொண்டுசேர்க்கும் பணியில் உதயன் திறன்பட சேவையாற்றி வருகின்றது. ஈழத்தமிழர்களின் ஊடகப் பங்காளனாக பல்வேறுபட்ட காலப்பகுதிகளில் துணிந்துநின்று தனித்துவமாகச் சேவையாற்றி வருகின்றமையானது மிகவும் போற்றுதலுக்குரியது.
உண்மையில் 'மக்களைப்பற்றி மக்களுக்காக மக்களால் எழுதப்படுபவை செய்தி' என்ற பொதுமைப்படுத்தல்களைத் தானுடைய செய்தி அறிக்கையிடலிலும் ஊடக சேவையிலும் வெளிப்படுத்தி வருகின்ற 'உதயன்' நாளிதழின் சேவையானது இன்னும் பல மேன்மைதகு நிலைகளை அடையவேண்டும்.
'செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர் செயற்கரிய செய்கலாதார்' என்ற திருவள்ளுவரின் திருவாக்குக்கமைய இனிவரும் காலங்களில் இடையறாது தனது பணிகளை ஆற்றுதல் வேண்டும். குறிப்பாக எமது மக்களையும், எமது பிரதேசங்களினது தனிச் சிறப்புகளையும், இயல்புகளையும் சிறந்த முறையில் அறிக்கையிடுவதன் மூலம் தனித்துவம் மிக்க தமிழர்களின் முதன்மை ஊடகமாக எதிர்காலங்களிலும் திகழவேண்டும் என்று வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் உரித்தாக்குகின்றேன்.

**நா.கமலதாசன்**
*பிரதேச செயலாளர்,*
*பிரதேச செயலகம், வவுனியா*

## உதயனின் பயணம் உன்னத வரலாறு



'மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்' என்ற மகுட வாக்கியத்துடன் செயற்பட்டுவரும் உதயன் நாளிதழானது, அந்த வாக்கியத்துக்கேற்ப துல்லியமானதும் நம்பகமானதுமான செய்திகளால் தமிழ் மக்களின் மனதை வென்றுள்ளது. முப்பத்தெட்டு ஆண்டுகளாக இடைவிடாது வெளிவரும் உதயன் நாளிதழானது முப்பத்தொன்பதாவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பது அதனுடைய வாசகர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான ஒரு விடயமாகும்.
அச்சுடிக்க தாள்கள் அற்ற நாள்களிலும் செய்திகளை அறிய வழியற்ற வேளைகளிலும் தொடர்ச்சியாக உதயன் வெளிவந்தது என்பதும், மட்டுப்படுத்தப்பட்ட சிறப்புப் பிரசுரங்களாக சில பக்கங்களில் மாலைப் பத்திரிகை வெளிவந்தபோது அதற்காகக் காத்திருந்து வாசித்த நாள்களும் இன்றைய தலைமுறை அறியாத உதயனின் வரலாறுகளாகும்.
இன்றைய சமூக வலைத்தளக் காலத்தில், செய்திகளுக்காக பத்திரிகைகளை மாத்திரம் நம்பியிருக்காத தலைமுறையொன்று உருவாகிவரும் சூழலில், காலத்துக்கேற்ப மாற்றங்களுடன் இளம் தலைமுறையையும் உள்ளீர்க்கும் அம்சங்களுடன், அச்சுப் பத்திரிகையாகத் தொடர்ந்து உதயன் வெளிவந்து ஆண்டுகள் பல நீடித்து நிலைக்க வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

**டெ.க.அரவிந்தராஜ்**
*பிரதேச செயலாளர், மாந்தை மேற்கு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## துணிவுடைய சேவையாளன்

தமிழ் மக்களுக்கு 'மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்' என்ற மகுட வாசகத்துடன் குடாநாடு எங்கும் நிகழும் அனைத்துச் சம்பவங்களையும் உடனுக்குடன் மனக்கண்முன்னே எழுத்துரு வில் கொண்டு வருகின்ற பெருமைக்குரியதுடன், தொடர்ந்து முப்பத்தெட்டு ஆண்டுகளாகப் பிரசு ரமாகிக் கொண்டிருக்கும் உதயன் இன்று தனது முப்பத்தொன்பதாவது அகவையில் காலடி பதிப் பதனையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன்.

39 வருடகாலம் அச்சுக்கலை ஊடகத்துறையில் தொடர்ச்சியாக வெற்றிநடை போடுவது என்பது ஒரு சவாலுக்குரிய விடயமாகும்.

ஏனெனில் மின்னஞ்சல் ஊடகங்கள் வாசகர்கள் மீதான அதீதமான ஆக்கிரமிப்புகளும், தொடுதிறன் அலைபேசி மூலமான செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளக்கூடிய அதிநவீன தொழில் நுட்ப வசதிகள் இருந்தும் தனது கருத்தாளமிக்க வல்லமையால் உண்மை, நேர்மை, துணிவு, நடு நிலைமை போன்றவற்றுடன் உள்நாட்டு, வெளி நாட்டுச் செய்திகளைப் பத்திரிகைத்துறையில் வாசகர்களை வாசிக்கத் தூண்டும் அளவுக்கு உதயன் தனது பணியைச் சிறப்புடன் ஆற்றி வருகின்றான். நாட்டின் அசாதாரண சூழ்நிலை காலத்தில் மக்களுக்கும் உலக அரங்குக்கும் செய்தி களை நேர்த்தியாக வழங்குவதில் முன்னணியாகத் திகழ்ந்தது உதயன் என்பது யாவரும் மறுக்கமுடி யாத ஒன்றாகும். அதற்காக ஊடகத்துறையில் பல உயிர்களைத் தியாகம் செய்தும் உள்ளது.

இத்தகைய பல பெருமைகளைத் தனதாக்கிக் கொண்ட உதயனின் சேவை காலம் கடந்தும் பாராட் டப்பட வேண்டிய ஒன்றாகும்.

**எஸ்.சுதர்சன்,**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.




## ஊடகத்துறையின் சாதனையாளன்



தன்னை ஒரு மக்களின் நாளாந்த வாழ்விய லோடு ஒன்றித்து அச்சு ஊடகத்துறையில் தனித்துவமிக்க சாத னையாளனாக்கி மக் கள் மனம் கவர்ந்த வாச கனாக 39 ஆண்டுகளை நிறைவு செய் கின்றமை ஒரு வெற்றிச் சாதனையாகும். மாணவர்கள், கல்வியியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் என யாவருக்குமான ஊட கமாக உதயன் தன்னை நிலைநாட்டியி ருப்பதனை எவரும் மறுதலிக்க முடியாது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும் இலத்தி ரனியல் சமூக ஊடகங்களின் ஆதிக்கமும் நிறைந்துள்ள இன்றைய காலகட்டத்திலும் தனக்கான தனித்துவமான வாசகர்களை இன்றும் கொண்டிருப்பதானது கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய மிக நெருக் கடியான காலகட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செய்திகளையும் அறிவியல் சார்ந்த கருத்துகளையும் சஞ்சிகைகள், சிறுவர் கதைகள், கட்டுரைகள் எனப் பல வற்றை வாசகர்களுக்கு வழங்கி பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளான மக்களுக்கு வேண்டிய மிகமிக இன்றியமையாத செய்தி களை உடனுக்குடன் வழங்கியதன் வெளிப் பாடு என்றால் அது மிகையில்லை.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றாற் போல் தனது செயற்பாடுகளையும் விரிவுப டுத்தி காலத்தால் என்றும் அழிக்கமுடியாத ஓர் ஊடகமாக உதயன் தனது பணியை பத்திரிகைத் தர்மத்துடன் ஆற்றிவருவது வாசகர் சமூகத்துக்கு ஒரு பொக்கிசமாக அமைந்து காணப்படுகின்றது. 39 ஆண் டுகள் பல்வேறு இடர்பாடுகள், சவால்கள் என எல்லாவற்றையும் கடந்து சாதித்துவ ரும் ஊடகத்துறையில் தம்மை ஈடுபடுத்தி யுள்ள இயக்குநர், நிர்வாக குழுமத்தினர் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் நல் இறையாசி வேண்டி தொடர்ந்தும் பல தசாப்தங்கள் சிறந்த ஊடகமாகத் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள எனது வாழ்த் துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மஞ்சுளாதேவி சதீஸன்**
பிரதேச செயலாளர்
ஊர்காவற்றுறை

## தனித்துவம் மிக்க உதயன் பத்திரிகை



பத்திரிகைத்துறையில் சிறப்பான பங் காற்றிவரும் உதயன் பத்திரிகை 38 ஆண்டுகளை நிறைவு செய்து இன்று 39ஆவது அகவையைக் கொண்டாடு கிறது

பல்வேறு நெருக்கடியான சூழலில் மக்களின் எண்ணங் களை பிரதிபலிக்கும் வகையில் அவர்களின் தேவை கள், அவர்கள் சார்பான விடயங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் என்பவற்றி தெளிவாகவும் விரைவாக வும் அச்சுத்தளத்தில் இருந்து செய்திகளாக வெளியிட்டு வருகின்றது உதயன். இந்தப் பத்திரிகை என்றும் தனக் கான தனித்துவதை தொடர்ந்தும் நிலைநிறுத்தி செய்தி பணி தொடர வாழ்த்துகின்றேன்.

**நிஜாகரன்**
*பிரதேச செயலாளர்,*
*மடு*





## எழுத்தின் வலிமையால் வலி மீண்ட போராளி!

தமிழ் பேசும் மக்களின் மனங்களில் இருளகற்றி என்றென்றும் ஒளியேற்றும் உதயனின் 38ஆவது அகவை சிறப்பிதழுக்காக வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

பிரான்ஸின் தலைநகர் பரிஸைத் தளமாகக் கொண்டியங்கும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் தன்னார்வ அமைப்பால் ஆண்டுதோறும் சர்வதேச ரீதியாக வழங்கப்படும் ஊடக சுதந்திரத்துக்கான மிகமுக்கியமான விருதானது 2013ஆம் ஆண்டு உதயனுக்கு கிடைக்கப் பெற்றமையானது குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு காலகட்டங்களில் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்தாலும் 'அச்சம் தவிர்' என்ற மகாகவி பாரதியாரின் வாக்கியத்துக்கு ஏற்ப மீண்டெழுந்து தன் எழுத்தின் வலிமையால் தமிழ் மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களைத் துணிவுடன் யுத்தகாலத்திலுங்கூட வெளியுலகத்துக்குக் கொண்டுவருவதில் 'உதயன்' ஆற்றிய பங்கு அளப்பெரியது.

தமிழினத்தின் வரலாற்றில் காலத்தால் என்றுமே அழியாப் புகழ் கொண்டு தமிழினதும் தமிழர்தம் பெருமைகளையும் உலகெங்கும் பறைசாற்றி, தமிழ்பேசும் மக்களின் அபிமானம் மிக்க ஊடகமாக நீ ஆற்றும் பணி என்றென்றும் தொடரட்டுமென உன் சேவையைப் பாராட்டி மனமார வாழ்த்துகிறேன்.

**எஸ்.சிவஸ்ரீ,**
பிரதேச செயலாளர், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை.

## உன்னத பணிசெய் உதயன் வாழ்க!



ஈழத்தமிழ் மண்ணின் பத்திரி கைத் துறையில் கடந்த 38 ஆண்டுகளாக உன்னதப் பணி செய்து இன்று 39ஆவது ஆண்டுக் குள் கால்பதிக்கும் உதயனை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பிராந்தியத்தில் இருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்று இத்துணை காலமாகத் தொடர்ச்சியாக வெளிவந்து, சாதனை படைத்தது உதயன் மட்டுமே ஆகும். எம் நாட்டில் இருள் சூழ்ந்து இன்னல்கள் நேர்கின்ற போதெல்லாம் தளராது எம் குரலாய் உதயன் ஒலித் திருக்கின்றான். இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின் றான். கடந்த காலத்தில் மக்கள் இடர்பட்டபோதும் அல்லற்பட்ட போதும் உதயனும் அவர்களோடு சேர்ந்து இடம்பெயர்ந்து பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து மக்களின் குரலாய் தனது ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றியிருக்கின்றான். இன்னும் பல ஆண்டுகள் தளராது ஜனநாயகப் பாதையில் உதயன் நடுநிலைமையுடன் வெளிவர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**த.மு[illegible]**
பிரதேச [illegible]
உடுவில்

## அஸ்தமனம் இல்லா உதயனவன் வாழி



துணிச்சலோடு உண்மைச் செய்திகளை தாங்கி நாளாந்தம் உதயமாகி எமது கைகளில் தவளுகின்றவனே உதயன். உதயமானவுடன் உதயனைப் புரட்டாவிட்டால் அன்றை யதினம் விடியாத தினமாகவே அதிகமானோருக்கு அமைகின்றது. காரணம் அவன் கடந்துவந்த பாதைகளும் தாங்கிவருகின்ற பொக்கிசங்களுமே. 39ஆம் ஆண்டில் கால டிபதிக்கின்ற நிலையில், கடந்துவந்த பாதைகள் எவ்வாறானகரடுமுரடான நெருப்பாற்றைக் கடந்துவந்த பாதைகள் என்பது யாவருக்கும் தெரியும்.

பல காலகட்டங்களில் பல சேதங்களை திட்டமிட்ட காட்டுமிராண்டித்தனமான நோக்கங்களால் எதிர் கொண்டிருந்தாலும், என்றும் உதயமாகியுள்ள பெருமைக்குரியவன். இதற்கு காரணம் அவன்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் அன்புமே. திட்டமிட்டு அழிப்பினை எதிர்கொள்கின்றபோதெல்லாம் வாசகர் மனங்களில் மேலும் அன்பைப் பெறுகின்றான். தமிழர் தம் தேசிய உணர்வுடன் தடம்பதிக் கின்ற பத்திரிகையாக என்றுமே தன்னை நிறுத்துவதே உதயன் என்றும் உதயமாவதற்கு அடிப்படை என்பது கண்கூடு.

**எப்.சி.சத்தியசோதி,**
பிரதேச செயலாளர்,நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்நிலை பிறழாதவன்



கடந்த 38 வருடங்களாக பல இக்கட்டான காலகட்டங்களிலும் நடுநிலை தவறாது செய்திகளை வெளியிட்டு தமிழ்மக்களின் மத்தியில் தனக்கெனத் தனியிடத்தைப்பெற்று இன்றும் புதுப்பொலிவுடன் வெளியாகிக்கொண்டிருக்கும் உதயன் பத்திரிகை 39ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இவ்வேளையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறையில் தன்நிலை பிறழாது தமிழ் மக்களின் உரிமைகளை உரத்தொலிக்கச் செய்து உன்னதமான பத்திரிகையாக இன்றும் உதயன் மிளிர்கின்றது என்பதே நிதர்சனம்.

காலத்துக்கேற்ப இணையத்திலும் வெளியிட்டு உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற தமிழர்களின் இல்லம் தேடி செய்திகளை வழங்கி அவர்களின் உணர்வில் நீக்கமற நிறைந்துள்ள உதயன் பத்திரிகை, அப்பணி சிறக்கவும் தங்களின் பணி நீடித்து நிலைக்கவும் வாழ்த்துவதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திருமதி கவிதா உதயகுமார்,**
பிரதேச செயலர்,
வலி.மேற்கு.




## நெருக்கடியான நாள்களில் கனதியான சேவையாளன்



ஊடகத்துறையில் உதயனின் பணி மகத்தானது. அளப்பரியது. ஒரு பத்திரிகையானது நெருக்கடி, இன்னல்கள் நிறைந்த காலப்பகுதியில் மக்களின் குரலாகத் துணிச்சலுடன் பயணித்து 39ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதென்பது இலகுவான காரியமல்ல.

பத்திரிகைத்துறையில் தனக்குரிய பாணியில் செய்திகளையும் ஆக்கங்களையும் தொடர்ச்சியாக வெளியிட்டு வருவதே உதயனின் தனித்துவமாகும். கொரோனாப் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி என்பவற்றின்போதும் மக்களுக்குத் தேவையான அனைத்து விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் உதயன் மேற்கொண்டமையை மறக்க முடியாது. ஊடகத்துறையில் 39ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் உதயன் ஊடகத்துறையில் மென்மேலும் உச்சம்தொட வாழ்த்துகிறேன்.

**மனோகரன் பிரதீப்**
பிரதேச செயலாளர்
மன்னார் நகரம்



## உதயன் என்றென்றும் சிரஞ்சீவியாக வாழ்வான்



ஏறத்தாழ 38 வருடங்களாகத் தமிழ் வாசகர்களுக்கு வேண்டிய அனைத்துப் புதினங்களையும் உடனுக்குடன் வழங்கி அவர்களை இற்றைப்படுத்துவதில் சிறந்த நண்பனாக உதயன் பத்திரிகை விளங்குகின்றது. இணையத்தளமும் ஏனைய வலைத்தளங்களும் முக்கியத்துவம் பெற்றிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இன்னமும் உதயனின் 'மவுசு' குறையாமல் இருப்பது அவனது வெற்றிப்பயணத்தின் அடையாளம் ஆகும்.

அன்றாடச் செய்திகளை மாத்திரமன்றி அரசியல் அலசல்கள், மக்களுக்கான விழிப்புணர்வுகள், உலகப் போக்குகள், விளையாட்டுப் புதினங்கள் என்பவற்றையும் நன்கு மக்களிடம் கொண்டு சேர்க்கின்றான். கண்டிக்க வேண்டிய விடயங்களில் தேவைக்கேற்றவாறு நயம்பட உரைத்தல், நாசூக்கான வெளிப்படுத்தல், கடும் தொனியிலான வேண்டுதல் மற்றும் பொருத்தமான இடங்களில் கையாளும் 'நக்கல், நையாண்டிகள்' என்பனவும் அவனது வெற்றிக்கு வலுவூட்டுகின்றன.

சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பினர், வயதுப்பிரிவினர் எல்லோருக்கும் வேண்டிய ஏதோ ஒன்றையேனும் தினம் தினம் தன்பதிப்பின் ஊடாக வழங்கி அவர்களை நாளாந்த வாழ்க்கையில் செயலூக்கத்துடன் இயங்கச் செய்கின்றான். உதயசூரியன் உலகுக்கு ஒளியூட்டி அதை செயலூக்கமடையச் செய்வதைப் போல நமது உதயன் பத்திரிகை அனைவர்க்கும் அறிவொளியூட்டி வாழ்க்கையை அர்த்தமடையச் செய்கின்றான்.

எனவே உதயன் பத்திரிகை சிரஞ்சீவியாக நீண்டகாலம் நம் தமிழ் பணியாற்றி சிறப்புற்று ஓங்க வாழ்த்தி எல்லாம் வல்ல இறையின் ஆசிக்காக வேண்டுகின்றேன்

**சி.ஜெயகாந்த்**
பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்பு

## அனைத்து இன மக்களையும் நாடி பிடித்து அறிந்தவன்



தமிழ்மக்களின் வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்து இன்பத்திலும் துன்பத்திலும் இரண்டறக்கலந்து கடந்து முப்பதெட்டு ஆண்டுகளாகப் பயணிக்கும் உதயன், தரணி உள்ள வரை பயணிக்க வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் பெரும் உவகையடைகின்றேன்.

பத்திரிகை என்றால் தனியே அரசியல் செய்தியென்றில்லாது தொழில்புரிவோர், மாணவர்கள், முதியோர்கள், தொழில்தேடுவோர் உள்ளிட்ட பல்வகை மக்களின் நாடிபிடித்து அவர்களின் தேவையறிந்து தொடர்புடைய விடயங்களை வெளியிட்டு தன் சமூகத்துக்கு ஆற்றவேண்டிய காத்திரமான பங்களிப்பை சிறப்பாக உதயன் ஆற்றிவருகின்றான். இத்தகைய பல்துறை பங்களிப்பை முன்னர் 'சஞ்சீவி' எனும் பெயரில் வாராந்தம் தனித்துவமாக ஆற்றியிருந்தமையை நினைவூட்டவிரும்புகின்றேன்.

மேலும் வளர்ந்துவரும் தொழில்நுட்பவளர்சிக்கு இணையாக தன்னை மாற்றிக்கொள்வதிலும், புதுமைகளைப் புகுத்துவதிலும் எப்போதும் முன்னிற்பதுடன் தனது இருப்பையும் தமிழ்மக்களின் மனதில் நிலைநிறுத்தியுள்ளான் என்றால் அது மிகையன்று. காலத்துக்கு ஏற்றாற்போல் தன்னை உருவமைத்துக் கொண்டாலும் மக்களின் தேவைகளை வெளிப்படுத்துவதில் முன்னிற்பதுடன் தான் சார்ந்த தமிழ்ச் சமூகத்துக்கு ஆற்றவேண்டிய பங்களிப்புத் தொடர்பான கொள்கையில் என்றும் பின்நிற்காது தொடர்ந்தும் பிறந்த இந்த நன்நாளில் புதுப்பொலிவுடன் புதிய பாதையில் பயணிக்க வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன்.

**அ.பிரதீபன்,**
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை

## நெடுந்தீவிலும் ஓர் உன்னதமான தடம்




நான்கு தசாப்தங்களாக நற்செய்திகளை நாலாபுறமும் பரப்பி, நன்மதிப்பைப்பெற்று நடைபோடும் உதயனே, காலையில் தோன்றி மாலையில் மறையும் உதய சூரியனைப் போன்றல்லாமல் காலையில் கைகளிலும், மாலையில் திறன்பேசிகளிலும் நாள்தோறும் உதித்திடும் உதயனே வாழ்க.

சமய கலாசார விடயங்கள், அரசியல் செய்தி, நாட்டு நடப்புகள், அன்றாடப் புதினங்கள், விளையாட்டுச் செய்திகள் எனப் பலவிடயங்களுடன் மரண அறிவித்தல்களையும் தாங்கி உடனுக்குடன் அறியத் தருகின்றாய். ஆதலால் என்றும் நீ மக்களின் மனங்களில் வாழ்கின்றாய். வாழ்க உன் பணி. எத்தனையோ இடர்கள், அரசியல் தலையீடுகள், அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், போட்டியான நாளிதழ்கள் மத்தியிலும் நீ எழுந்து நின்று துணிவுடன், பக்கச்சார்பின்றி உண்மைகளை உரக்கச் (உறைக்க) சொல்கின்றாய். உன் துணிவு மேலும் கூடவும் பயமின்றி நீ தொடர்ந்து முன்னேற வாழ்த்துகின்றேன்.

அதிகாலையில் யாழ்.மாவட்டத்தில் எங்கும் கிடைக்கும் நீ, நெடுந்தீவிலும் காலையில் கிடைப்பது மகிழ்ச்சியே. உன் வரவை எதிர்பார்த்து இன்றும் எம் நூலகத்தில் காத்திருப்போர் பலர் உண்டு. அவர்களின் செய்தி அறியும் ஆவலைத் தீர்க்கும் உன் பணி சிறக்கட்டும்.

**ச.கமலகாந்த்,**
செயலாளர், நெடுந்தீவு பிரதேசசபை.

## வீழ்ச்சியென்ற சொல்லை இம்மியும் அறியாதவன்



39ஆவது வயதில் கம்பீரமாக எட்டி நடைபோடும் 'உத யன்' பத்திரிகையானது 38 வருடங்களாக பல்வேறு இன்னல்களையும் தாண்டி தங்குதடையின்றி தனது பணியைத் திறம்பட ஆற்றிவருகின்றது.

தமிழ்பேசும் சமுதாயத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்து மக்கள் மனங்களில் நிலையான நம்பிக்கையை விதைத்துள்ளது. தனது பணியில் வீழ்ச்சி என்ற சொல்லுக்கு இடமின்றி பல தகவல்களையும் தாங்கி வெளிவரும் 'உதயன்' பத்திரிகை மென்மேலும் வளரவேண்டும். இந்த நிறுவன இயக்குநர், பணியாளர்களின் அயராத உழைப்பால் உதயன் பத்திரிகை சிகரம்தொட எனது உளம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி சோதிநாயகி மணிவண்ணன்,**
செயலாளர், வவுனியா வடக்குப் பிரதேசசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985
2023
39

சர்வதேச
விருது பெற்ற
ஒரேயொரு
தமிழ் ஊடகம்

## கொள்கைப் பற்றுறுதியுடன் பயணிக்கின்றான் உதயன்!



இலங்கை பத்திரிகை துறை வரலாற்றில் உதயனின் வளர்ச்சி என்பது மிகவும் அவதானமாக பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் எடுத்த எடுப்பிலேயே மிக இலகுவான வளர்ச்சியைப் பதிவு செய்யக்கூடிய சூழல் உதயனுக்கு இருக்கவில்லை, சவால் மிக்க பல்வேறுபட்ட இடர்பாடுகளையும் நெருக்கடிகளையும் கடந்துதான் உதயனின் வளர்ச்சி பாதை புடம் போடப்பட்டுள்ளது, என்பதை நாங்கள் அவதானிக்க வேண்டும், பொதுவாக ஒரு பத்திரிகை நிறுவனமோ அல்லது ஓர் ஊடக நிறுவனமோ இலகுவான பயண பாதையை கொண்டிருக்க மாட்டாது, அதிலும் யுத்தம் போன்ற அபாயங்கள் நிறைந்த நெருக்கடிகள் நிறைந்த ஒரு சூழ்நிலையில் ஊடகப் பணியை கையாளுகின்ற உலக நிறுவனங்கள் மிகுந்த சவால் மிக்க ஒரு நிலையிலேயே தமது பொழுதுகளை கடக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருக்கும், அதிலும் இனங்களுக்கு இடையேயான பிரிவினையை மையப்படுத்திய ஒரு யுத்த செயற்பாட்டு களத்தில் மரணங்களும் கைதுகளும் இனம் தெரியாத மனிதர்களின் தாக்குதல்களும் மலிந்திருந்த ஒரு சூழலில் துணிச்சலோடு செயல்படுவதற்கு அபார ஆற்றல் வேண்டும், ஆக்கிரமிக்கப்பட்ட பல்வேறு கருத்தியல் தளங்களுக்குள் மிக நேர்த்தியாக நகர்கின்ற ஒரு போக்கை எப்போதும் உதயன் கடைபிடித்து வந்திருக்கின்றது.

பொதுவாக உலக அளவில் பத்திரிகைகளின் மீது அவர்கள் சுதந்திரத்தை மீறுகின்ற அல்லது ஊடகவியலாளர்கள் மீது அவர்களது சுதந்திரத்தை மீறுகின்ற வகையிலே தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்கின்றோம் அதற்கான மிகப் பிரதான காரணம் பத்திரிகை அல்லது ஊடக நிறுவனம் தான் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து செயற்படுகின்றமை ஆகும். அவ்வாறு அந்த உறுதியையும் கொள்கைப் பிடிப்பையும் அதன் ஊடக வீரியத்தையும் எதிர்கொள்ள முடியாத சக்திகள் அவர்கள் மீது வன்முறையை பிரயோகித்து அவர்களை அடக்க நினைக்கின்ற சந்தர்ப்பங்களை தான் அவ்வாறு நாங்கள் அடையாளப்படுத்த முடியும், ஏனெனில் ஊடகத்தின் சவாலை எதிர்கொள்ள முடியாத மனிதர்களின் இறுதி தெரிவாக வன்முறை தாக்குதல்கள் இருந்திருப்பதை நாங்கள் அவதானிக்க முடியும், அந்த வகையில் தான் உதயனின் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் சார்ந்த செயல்பாடுகளையும் வன்முறைகளையும் தாக்குதல்களையும் நாங்கள் கணிக்க முடியும்.

ஜனாதிபதி சட்டத்தரணி
**கே.வி.தவராசா**
தலைவர் தமிழ் அரசு கட்சி கொழும்பு மாவட்ட கிளை



## ஓங்கி உயர்வுற்று விருட்சமாகட்டும்!

யாழ். மண்ணிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் பத்திரிகையானது தனது 39ஆவது அகவைக்குள் காலடி எடுத்து வைக்கின்ற இவ் வேளையிலே வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன். உதயன் நாளிதழானது தமிழ் மக்களின் ஏற்றத்திற்காக நாளும் பொழுதும் நீதியானதும் நியாயமானதும் நடுநிலையானதுமான தகவல்களையும் செய்திகளையும் உடனுக்குடன் வழங்கி தமிழ் மக்களின் ஏற்றத்துக்காக நாளாந்தம் செயற்பட்டு வருகின்ற ஒரு பத்திரிகையாக தமிழ் மக்களின் வாழ்வியலில் ஓர் அங்கமாக விளங்குகின்றான்.

பத்திரிகை உலகின் உதயன் தனித்து நிலையான இடத்தை பெற்று உச்சம் தொட்டுள்ளான். இதன் காரணமாக நீண்ட காலம் நிலைத்து செய்திகளை வழங்குகின்ற பத்திரிகையாக வலம்வந்து கொண்டிருக்கின்ற இப்பத்திரிகை மேன்மேலும் வளர்ச்சி அடைந்து பெருவிருட்சமாக தமிழ் கூறும் நல்லுலகில் போற்றப்படும் பத்திரிகையாக வெளிவர வாழ்த்துகின்றேன்.

**பொ.ரவிச்சந்திரன்,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்.வலயக்கல்வி அலுவலகம்.

## கல்விப்புலத்தில் நேரிய பணிகள்!

உதய வேளையில் இல்லங்கள் நாடி வந்து செய்திகளையும், பயனுள்ள அறிவுசார் விடயங்களையும் தந்து, அறிவாற்றல் மிக்க சமூக உருவாக்கத்துக்கு உதயன் பத்திரிகை காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளது. கல்விப்புலம் சார்ந்து பல நேரிய விடயங்களை உதயன் பத்திரிகை சமூகத்துக்கு எடுத்துச் சென்றிருக்கின்றது. விழுமிய பண்புமிக்க மாணவ சமூகத்தை உருவாக்கும் பணியில் ஒரு ஊடகமாக உதயனின் பங்களிப்பும் விதந்து கூறத்தக்கது.

39ஆவது ஆண்டினில் காலடி எடுத்து வைக்கும் உதயன் நாளிதழ் மக்களின் உயர்வுக்கும், பண்பாட்டு மேன்மைக்கும் பங்காற்ற வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

**க.ஜெ.பிறட்லி**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்.



## வாழியவே நூறாண்டு

இயற்கை வழங்கும் கொடைகளில் ஒன்று தாய்மொழி. தாய் மொழியே சிந்தனை மொழி. உணரும் மொழியும் தாய் மொழிதான். உலகின் மிக மூத்த மொழியாகவுள்ள தமிழ்மொழி எமக்குத் தாய்மொழி. தமிழ்மொழியில் இன்னல் நிறைந்த காலத்திலிருந்து வெளிவந்து சிறப்பு செய்யும் உதயன் பத்திரிகைக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள். குற்றங்கள் தெரிந்தால் குணங்களை வளர்த்துக் கொள்ள முடியும். குறைகள் தெரிந்தால் நிறைகளை வளர்த்துக் கொள்ள முடியும். எனவே எந்த இலட்சியத்துடன் பத்திரிகை உருவாக்கப்பட்டதோ அந்த இலட்சியப் பயணம் தொடர வேண்டும். நாட்டின் பொருளாதார நிலை பல துறைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஊடகத்துறையில் ஏற்பட்டுவரும் மாற்றம், நம் தாய் மொழியை அதன் இலக்கணத்தை மாற்றுவதாக அமையக்கூடாது. மொழி வளத்தை பாதுகாக்க வேண்டும்.

தாய்மொழிச் சிந்தனை என்பது மிகவும் அவசியமானது. ஞாயிறு மலரில் மொழி வளர்ச்சிக்கு ஒரு சிறு பகுதியை ஒதுக்க வேண்டும். இன்றைய இளைஞர்களுக்கு நல்வழிகாட்டி அறிவூட்டும் பணியை பத்திரிகை செய்ய வேண்டும். இந்த இடத்தில் உதயன் பத்திரிகைகளின் ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட ஆசிரியத் தலையங்கங்கள் நினைவுக்கு வருகின்றன. உதயன் என்றும் புதுமையுடன் தொடர்ந்து வெளிவருதல் காலத்தின் தேவையாகும்.

**இரா.செல்வவடிவேல்**
*தலைவர்- யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்*

## உத்திகள் பலகொண்டு உன்னதமான பயணம்!



ஈழவள நாட்டின் யாழ். குடாநாட்டிலே உதய சூரியனாய் நாள்தோறும் உதயமாகும் 'உதயன்' பத்திரிகை 39ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் அகவைதின நாளில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகம் மகிழ்கின்றேன்.
உலகச் செய்திகள், உள்ளூர் செய்திகள், ஆசிரியர் தலையங்கம், கட்டுரை, ஆன்மீகம், பொழுதுபோக்கு, ஏனையவை என பல்துறை ஆக்கங்களையும் சேர்த்தொன்றாய் திரட்டி செம்மையுடன் வெளிவரும் உதயன் பணிதொடர வாஞ்சையுடன் வாழ்த்துகின்றேன்.
உலகெங்கும் உள்ள தமிழர்தம் மனம் கவர்ந்து
உத்திகள் பலகொண்டு உன்னதமாய் வெளிவரும்
உத்தமன் உதயனும் உலகம் உள்ளளவும்
உலகச் செய்திகளையும் உள்ளூர் செய்திகளையும்
உண்மையுடன் உழைத்திட வேண்டுமென்றே
உலகளந்த மாயவனின் உன்னதத் தாள் பணிந்தே
உளமகிழ்ந்து வாழ்த்துகின்றேன் வாழியவே!

**த.கிருபாகரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி



## உதயத்தின் உதயம் உதயனே வாழ்!

ஆயிரத்து தொள்ளாயிரத்து
எண்பத்தைந்தாம் ஆண்டுமுதல்
சூரிய உதயத்துடன் கரங்களில்
தவழும் உதயனே வாழி!

உள்நாட்டுச் செய்திகள் முதல்
வெளிநாட்டுச் செய்திகள் வரை
உடனுக்குடன் தந்து
உள்ளங்கவரும் உன்னதன் நீ

எம்மவர் கல்வி உயர்வுகளையும்
வெற்றிகளையும் உலகறியச்செய்யும்
உதயனே உன் பணி சிறக்க
உளமார வாழ்த்துகிறேன் மகிழ்வுடன்

***திருமதி அ.கி.வொலன்ரைன்***
***வலயக்கல்விப் பணிப்பாளர்***
***மடு கல்வி வலயம்***

## தீரன் நீயே உதயா...

எங்கள் உரிமைக் குரலே
எளிமை உன்றன் பண்பாகும்
மங்காப் புகழு முனதே
மண்ணில் தலைவன் நீயன்றோ!
தங்க மகனே உதயா
தரணி போற்றும் நாளிதழ் நீ
வங்கக் கடலு முன்னே
வாழ்த்திப் பாடி மகிழ்ந்திற்றே

உண்மை நாளு முரைத்து
உயர்வு கொண்டாய் உலகில் நீ
எண்ணம் யாவு மெங்கள்
இடரில் தோய்ந்த வாழ்வியலில்
திண்ண மான செயலாய்
தீரன் நீயே ஆனாயே
வண்ணங் கொண்டே யென்றும்
வருவாய் வனப்பாய் சூரியனே

அனலில் பொசுங்கி மிளிர்ந்து
அகில மெங்கும் வலம் வந்தாய்
தினமும் உன்றன் பணியில்
திசைகளெங்கும் முழங்கியதே
கணக்கு மிதயஞ் சுமந்து
கனதி யான இதழானாய்
உனக்கு நீயே யென்று
உயர்ந்து நின்றாய் ஊடகமாய்

பிறந்த நாளாம் இன்று
பெருமை கொண்டு வாழ்த்துகிறேன்
சிறப்பும் சீரும் பெருக
செய்வாய் நிறைந்த பணியினையே
அறத்தி னோடு பயணம்
அதுவே ஈடி முகவரியாம்
கறங்கு போலச் சுற்றிக்
கனிவு கொள்வாய் இந்நாளில்

**உடுவிலூர் கலா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உலக விடயதானங்களை உள்ளங்கையில் தருபவன்



இலங்கைத் திருநாட்டில் தமிழைத் தாய்மொழியாகப் பேசும் நம் தமிழ் மக்களின் உள்ளத்திலிருந்து எழும் குரலாக முழங்கிக் கொண்டிருக்கும் உன்னதமான உதயன் பத்திரிகை 38ஆவது ஆண்டை வெற்றிகரமாக நிறைவுசெய்து தற்போது 39ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதையிட்டு நாம் அனைவரும் பெருமகிழ்வடைகின்றோம். அன்றுதொட்டு இன்றுவரை பத்திரிகை உலகில் உதயனின் சேவை அளப்பரிய ஒன்றாகும். உதயன் கடந்துவந்த பாதை மிகவும் கடினமானதொன்றாகும். எழுச்சியின் உச்சத்தில் தொடரும் உதயனின் பாதைக்கு உரமூட்டி தோளோடு தோள்கொடுத்து வளர்த்தெடுத்த பெருமை, துறைசார்ந்தவர்களின் திறனாகும். தமிழ்பேசும் மக்களின் வாசகர் நெஞ்சங்களை அள்ளி அணைத்து எப்போதும் மிடுக்குடன் அதிகாலையில் ஒவ்வொரு வாசற்கதவையும் தட்டி எழுப்பும் உதயனது சேவை பாராட்டுக்குரியது. 39ஆவது ஆண்டில் காலடி பதித்துள்ள இத்தகைய பெருமைக்குரிய உதயனின் சேவை குறித்து வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு நானும் பேருவகையடைகின்றேன்.

**கணேசன் கம்ஸநாதன்,**
*செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேசசபை*

## பரந்து விரியட்டும் உதயனின் சேவை



ஊடகம் ஜனநாயக விழுமியங்களை பாதுகாக்கின்ற ஒரு கருவி. அந்த வகை யில் உதயன் நாளிதழ் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து தமிழ் மக்களின் உரிமைகளையும் ஜனநாயத்தையும் பாதுகாப்பதாக இருக்கின்றது. கடந்த காலங்களில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் ஜனநாயகத்தை பாதுகாக்கவும் மிகவும் கடினமான பாதையில் 38 வருடங்கள் பயணித்துள்ளது. இவ் ஊடக சேவையை வெறும் எழுத்தினுள் அடக்கி விட முடியாது.

அவ் வகையில் தொடர்ந்தும் இவ் ஊடகச்சேவையானது பரந்து விரிந்து மேலும் சேவையை வழங்கவேண்டும் என்று சாவகச்சேரி பிரதேசசபை சார்பாக வாழ்த்துக்கின்றேன்.

**கதிர்காமநாதன் சந்திரகுமார்**
*செயலாளர்*
*சாவகச்சேரி பிரதேசசபை*



## கலை, கலாசார வளர்ச்சியில் பெருமளவு பங்காற்றியவன்

தமிழ் மக்களின் குரலாக வெளிவரும் உதயன் பத்திரிகை இன்று தனது முப்பத்தொன்பதாவது ஆண்டில் காலடி வைக்கும் இந்நாளில் அதன் பணிகளை நினைவு கூர்ந்து இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்

1995ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நீண்டகாலமாக உதயனின் வாசகனாக இருந்து வருகின்றேன். செய்தி ஊடகமாக மட்டுமன்றி எமது கல்வி கலாச்சார இலக்கிய வளர்ச்சியிலும் உதயன் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கியதை இந்த சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

**சீ.சபேசன்**, செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை



## அசைக்க முடியாத சமூகத் தூணானவன்

நேர்மையும், துல்லியமும் தமிழ்த் தேசியமும் நிறைந்த பண்புகளை தன்னகத்தே கொண்டு இக்கட்டான போர்ச் சூழ்நிலைகளிலும் சர்வதேச ரீதியில் செய்திகளை வழங்கி வரும் உதயன் பத்திரிகை தமிழ்ச் சமூகத்தின் ஆழமான நம்பிக்கை வளர்த்தெடுக்கும் பத்திரிகையாகும். 'எண்ணென் ஏனையெழுத்தென்ப இவ்விரண்டுங் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' இதற்கேற்ப எழுத்துத்துறை (இலக்கியம்) வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருவதில் உதயன் பத்திரிகையின் பங்களிப்பு பெரியது.

39ஆவது ஆண்டை கடந்துள்ள உதயன் பத்திரிகை கடந்த காலங்களில் பட்ட துன்பங்களை நாம் அறிவோம். மக்கள் படும் துன்பங்களை தகுந்த ஆதாரத்துடன் வெளியிட்டு அஞ்சாத நெஞ்சுடன் அசைக்க முடியாத சமூகத தூணாக உதயன் பத்திரிகை இருப்பது எமக்கு ஆறுதலாக உள்ளது. கலை இலக்கிய கலாச்சார விழுமியங்களை வளர்த்தெடுக்கும் உதயன் பத்திரிகை தொடர்ந்து எம்மக்களுக்கு உன்னத சேவையை மேலும் வழங்க வேண்டும் என்று வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திருமதி தெ.சுகுமார்**
செயலாளர்
வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை

## தமிழர் தேசத்தின் குரலாக ஓங்கி ஒலிக்கட்டும் உதயன்



ஒரு தேசத்தின், ஓர் இனத்தின், ஒரு மொழியின் அபிலாஷைகளை இவ்வுலகுக்கு எடுத்துரைப்பதில் நடுநிலையான, நீதி தவறாத பத்திரிகைகளின் பங்களிப்பு அளப்பரியது. அந்த வகையில் உதயன் நாளிதழின் எழுத்துக்கள் ஆற்றிய பங்கு சொல்லிலடங்காதவை. குறிப்பாக இடர்காலங்களில் உதயன் நாளிதழ் முகம்கொடுத்த இன்னல்கள் இந்தநாட்டு மக்களறிவர்.

உன்னத ஊடக சேவையினை செய்துவரும் உதயன் நாளிதழ் இன்று தனது 39ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கிறது என்றால், அந்தக் கால்கள் கடந்து வந்த பயணம் அவ்வளவு எளிதானது அல்ல. உதயன் நாளிதழ் இன்று போல் என்றும் நடுநிலை தவறாது, உண்மைகளை இவ்வுலகுக்கு உரக்கச்சொல்லி, நீதியின் பக்கம் நின்று எம் தேசத்தின், தமிழின், தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலிக்க வேண்டும் என்று எம் மக்கள் சார்பாக வாழ்த்தி நல்லாசிகளையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்வுறுகிறேன்.

**திருமதி தர்சினி நிதர்ஷன்**
செயலாளர்,
வல்வெட்டித்துறை நகரசபை



## தமிழர்களின் விடிவுக்காக தொடர்ந்தும் உழைப்பான்

சிறு வயதிலிருந்தே எமது வாசிப்பு பழக்கத்தை தூண்டியது உதயன் நாளிதழ் என்றால் மிகையாகாது. சிறுவர்கள் பெரியவர்கள் என அனைத்து தரப்பினரையும் உள்வாங்கும் விதத்தில் செய்திகளை வெளியிட்டு வருவது பெருமைக்குரிய விடயமாகும். கடந்த 38 ஆண்டுகளாக தடைகளை எல்லாம் வெகு இலாவகமாக தகர்த்தெறிந்து இன்றும் புதுப்புது மெருகுடன் மிளிர்ந்த வண்ணமுள்ளான். எதிர்காலத்திலும் மக்களின் சமூகப் பொருளாதாரம் உள்ளிட்ட விடிவுக்காக உதயன் உழைக்க வேண்டும் என வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சாரதா உருத்திரசம்பவன்**
செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை .



## நிலைத்து நிற்பவன்

ஈழமக்களின் மனங்களில் உதயமாகி, தனிப்பெரும் குரலாக ஒலித்து வாசகர் நெஞ்சங்களில் நிறைந்து தனது 39ஆவது பயணத்தைத் தொடர விருக்கும் உதயன், இனிவரும் காலங்களிலும் எழுச்சியில் உச்சம் தொட்டு, வாசகர் நெஞ்சங்களில் நிலையாக நிலைத்துநிற்கும் அளவுக்கு புகழ்பூத்து பயணத்தைத் தொடர நகரசபையின் நிர்வாகத்தின் சார்பாகவும் நகரசபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசசபையின் சார்பிலும் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

***பூ.செந்தில்நாதன்***
*செயலாளர்,*
*வவுனியா நகரசபை*

## பயணம் தொடரட்டும்



39ஆவது அகவையில் கால் பதிக்கும் உதயன் பத்திரிக்கைக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். பல நூறு ஆண்டுகள் இன்னும் பலசாதனைகள் படைத்து உதயனின் பயணம் தொடர்ந்திட வேண்டும் என்று இந்த நல்ல நாளில் ஆசிக்கின்றேன்.

***சிவராஜ்***
*செயலாளர்*
*முசலி பிரதேசசபை*

## உரிமைக்கான ஊடகப்போராளி



ஜனநாயக நாட்டில் ஊடகமென்பது நல்லாட்சியின் ஒரு தூணாகும். மக்களின் கருத்துக்களை அது பிரதிபலிப்பதுடன் மக்களிடம் கருத்தியலை கட்டியெழுப்பும் சமூகப்பணியையும் செய்யவல்லது.

அந்தவகையில் காலம் தந்த கொடையாகிய உதயன் பத்திரிகை ஈழத்தமிழ் மற்றும் ஊடக வரலாற்றில் தவிர்க்க முடியாத சக்தியாக விளங்கியதுவெனில் அது மிகையாகாது. குறிப்பாக போர்காலங்களில் பொதுவாக ஊடகங்கள் பல சவால்களை எதிர்கொண்டபோதும் உதயன் தனது பணியில் பின்வாங்காது பல தியாகங்கள்செய்து மக்களுக்கு தனது கடமையைச் செய்தமை நினைவுடன் பாராட்டத்தக்கது. இன்று முப்பத்தொன்பதாவது ஆண்டில் காலடியெடுத்து வைக்கும் உதயன், நீடூழிகாலம் தமிழ் உணர்வைத் தாங்கி உரிமைக்கான ஊடகப்போராளியாக பணிசெய்ய வாழ்த்துக்கள்.

**சு.சுதர்ஜன்**
செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களின் உந்துசக்தி

உதயன் பத்திரிகை ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் நம்பிக்கை. மக்களின் உந்துசக்தி. இன்று 39ஆவது அகவைக்குள் காலடி எடுத்துவைக்கும் உதயனை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

கிட்டத்தட்ட 18 வருடங்களாக உதயனின் வாசகனாக இருக்கின்றேன். இந்தப் 18 வருடங்களில் என் வாழ்வில் தினந்தினம் உதயன் ஆற்றும் பங்கு பெரியது. உதயனானவன் தமிழர்களின் உந்துசக்தியாகவே இருக்கின்றான். அவனே தமிழர்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையைப் பெற்றமையால் வென்றமையால் தான் இத்தனை காலம் தமிழ்த் தேசியப்பரப்பில் உதயன் தலைநிமிந்து நடைபோட முடிகின்றது. இன்றுபோல் இன்னும் பல்லாண்டுகள் உதயன் தலைநிமிர்ந்து நடைபோட வாழ்த்துகின்றேன்.

**செல்லையா வரதராஜா**
வாசகன், பனங்காமம் முல்லைத்தீவு




## கால்நூற்றாண்டாக என் வாழ்வுடன்

என் வாழ்வில் சுமார் கால்நூற்றாண்டாக இணைந்து வாழ்வை வளமாக்கிக் கொண்டிருப்பவனுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றேன். ஊடகமானது ஒரு சமூகத்தில் மட்டுமல்ல ஒரு தனிமனிதனின் வாழ்விலும் கனதியான பங்களிப்பை வழங்குகின்றது. சுமார் 25 வருடங்களாக உதயன் என்னுடன் இணைந்து பயணிக்கின்றான். இந்த நீண்டகாலத்தில் தினமும் தவிர்க்கமுடியாத சக்தியாக உதயன் மாறியிருக்கின்றான். செய்திகளை அறிவ தற்கு எமக்கு இருந்த ஒற்றை மூலமாக உதயன் இருந்த காலத்தில் பொறுப்புணர்ந்து மேற்கொண்ட அவனின் பணி அளப்பெரியது.

**ஜனார்த்தனன்**
வாசகன்
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்





## போர்க்கால செய்திப்பணி என்றும் மறக்கமுடியாதது

போர்க்காலத்தில் உதயன் ஆற்றிய செய்திப் பணிகள் என்றும் மறக்க முடியாதவை. அத்தகைய நாயகனுக்கு இன்று அகவை வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

யுத்தகாலத்தில் மக்களுடன் மக்களாக நின்று உதயன் ஆற்றிய பணிகள் மகத்தானவை. உள்ளதை உள்ளபடியும் துணிச்சலாகவும் அக்காலத்தில் உதயன் வெளிப்படுத்தினான். தமிழர்கள் செய்திகளை - தகவல்களை அறிந்துகொள்ள வேறு மூலங்கள் அற்ற அந்த நாள்களில் உதயன் ஆற்றிய அந்தப் பணி காலத்தின் பணியாக இருந்தது. இன்று எத்தனையோ ஊடகங்கள் வந்தபின்னரும் உதயனால் அதே வைராக்கியத்துடன், அதே மக்களாதரவுடன் நின்றுபிடிக்க முடிகின்றது என்றால் அதற்கு போர்க்காலத்தில் உதயன் மேற்கொண்ட செய்தி அறிக்கையிடல்களும் ஒரு காரணம் என்பதை மறுக்கமுடியாது. இதற்காகத்தான் பல்லாயிரம் தமிழர்கள் உதயனுக்குப் பின்னால் இன்றும் அணிவகுத்து நிற்கின்றனர்.

உதயனின் பட்சிக்கு நாம் இப்போது தீவிர ரசிகர்கள். உதயனின் பாணியிலான அறிக்கையிடல் அது. இவ்வாறான புதுப்புது தகவல்களை உதயன் தொடர்ந்து தரவேண்டும்.

**தம்பு கந்தையா**
வாசகன், கொடிகாமம்



## சமூக சேவைகளை ஊக்குவிக்கின்றான்!

சமூக சேவையாளர்களையும், உள்ளூர் கலைஞர்களையும் ஊக்குவிப்பதில் தன்னிகரில்லாப் பணியாற்றிவரும் உதயன் பத்திரிகைக்கு இன்றையதினம் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிப்பதில் பேருவகையடைகின்றேன்.

உதயன் வெளியான நாள்முதன் அவனரு வாசகராக இருக்கின்றேன். உதயன் என்றால் உண்மைத்தன்மைதான். செய்திகளின் உண்மைத்தன்மைகளை உய்த்துணர்ந்து உதயன் வெளிப்படுத்தும் பாங்கு அற்புதமானது. உள்ளூர் கலைஞர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும், சமூக சேவையாளர்களுக்கும் உதயன் வழங்கும் முக்கியத்துவமும் மதிப்பும் தனித்துவமானது. நான் செய்த சமூக சேவைகளை பத்திரிகையில் உரிய முக்கியத்தும் கொடுத்து உதயன் பிரசுரித்து வந்திருக்கின்றது. அந்தப் பாங்கு என்னை வெகுவாகக் கவர்ந்தது. இதுவே உதயனின் தனித்துவமாகவும் அமைகின்றது. தமிழ்த் தேசிய ஊடகப்பரப்பில் உதயன் என்றென்றும் நிலைபெற்று வாழவேண்டும் என வாழ்த்தி, ஆசிரியர் பீடத்தினருக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

**இ.குபேந்திரநாதன்**, வாசகன்



## ஆகச் சிறந்த அரசியல் ஆய்வாளன்

தமிழத் தாயகத்தில் ஆகச் சிறந்த அரசியல் ஆய்வாளனாக உதயன் இருந்திருக்கின்றான். இப்போதும் அந்த நிலையில் உதயன் தொடர்ந்தாலும் போர்க்காலத்தில் வெளிப்படுத்திய அரசியல் ஆய்வுகள் எதிர்வுகூறல்கள் அற்புதமானவை. அத்தகைய கதாநாயகனுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிப்பதில் மகழ்வடைகின்றேன்.

சுமார் 30 வருடங்களாக உதயனின் பெருமைமிகு வாசகனாக இருக்கின்றேன். உதயனுக்கும் எனக்குமான பந்தம் அற்புதமானது என்பதுடன் தவிர்க்க முடியாததும்கூட. தினமும் காலை உதயனை கைகளில் ஏந்தினால்தான் அந்த நாள் முழுமை பெறுவது போன்றதான ஓர் உணர்வு. உதயனின் அரசியல் ஆய்வுகள் என்றும் தனித்துவமாய் அமைந்திருக்கின்றன. அத்தகைய ஆய்வுரைகள் எதிர்காலத்தில் இன்னுமின்றும் அதிகம் வெளிவர வேண்டும் என்பதே எமது பெருவிருப்பம்

**சுப்பிரமணியம் நகுலேஸ்வரன்**
வாசகன்
மல்லாகம்



## அரசியலின் விமர்சகன்

ஊடகத்துறையில் தனக்கென தனித்த இராட்சியத்தை நிறுதி அதை ஆண்டுவரும் உதயனுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஓர் வாசகனான என்னை என்றும் உதயன் ஏமாற்றியதில்லை. 2000ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த பின்னர் சிறிய இடைவெளியின் பின்னர் உதயன் கைகளில் கிடைத்த தருணங்கள் அழகானவை. அன்றையகாலத்தில் உதயனின் வாசிப்பதற்கு ஏராளம் விடயங்கள் இருக்கும். ஆகச்சிறந்த அரசியல் விமர்சகனாக உதயன் இருந்தான். ஆனால் பொருளாதார நெருக்கடியால் உதயனின் பக்கங்கள் குறைவடைந்துள்ளன. இதையும் உதயன் நிவர்த்திசெய்து வாசிப்பதற்கு ஏராளமான விடயங்களைத் தரவேண்டும் என்பதே எங்களின் பெருவிருப்பம்.

**சுப்பிரமணியம் சுரேஸ்குமார்**
வாசகன்
சாவகச்சேரி

## உதயனே நீ வாழ்வாயாக

தமிழின் தனித் தலைவன்
தூய தமிழ் உரைக்கும் வல்லோன்.
உண்மையை விழி பிதுங்காமல் உரைக்கும் வித்தரன்.
ஓரிரு அம்சமல்ல பல்கலை அளித்திடும் கோமன்.
இடரிலும் தமிழர் தம் பெருமையை
உலகிற்கு நொடிதனில் வழங்கிடும்
மாபெரும் கலைப் பொக்கிசம்
உதயனே நீடுழி வாழ்வாய்
இவ் வையகத்தில் எம் தமிழுக்காக.

**நா.தங்கவேல்**
சாவகச்சேரி
செய்தியாளர்

## பல்லாண்டு வாழ்க

உண்மை இலக்கில் உறுதியோடு
திண்ணம் ஆக நேர்மை வழியில்
விண்ணும் அதிர அஞ்சாமை கொண்டு
பொன்னான பணியில் பல்லாண்டு வாழ்க

**நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் சஞ்சீவியாய் உன்னதமாய் வாழியே!



இதய தாகந்தீர்க்கும் உதயன் நாளிதழே! இன்று புதிய ஆண்டில் காலடி பதிக்கும் புதினப்பத்திரிகையே!
நாளும் பொழுதும் நீ வளர்ந்து, முப்பத்தெட்டு ஆண்டுகள் மக்கள் சேவையே மகேசன் சேவையெனத் திகழ்ந்து, சுடச் சுடச் செய்தி தந்திடும் சிந்தனைப் பெட்டகமே! உதயன் சஞ்சீவியாய் உன்னதமாய் வாழியவே. தொடரட்டும் உன் சேவை, மலரட்டும் மகத்தான பணி, என்றென்றும் நீ இளமையுடன் வாழ்க பல்லாண்டே.
பதினெட்டு வயதில் எப்படியோ என வியக்கும் இளைஞன் போல முப்பத்தொன்பதாம் அகவையில் காலடி பதிக்கும் உதயனை வாழ்த்துவதில் உவகையே கொள்கிறோம்.

**கலாபூசணம் இராசையா ஸ்ரீதரன்**

## தமிழ் தேசியமே உதயனின் மூச்சு



கடந்த 38 வருடங்களாக மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழாக வடக்கு மாகாணத்தை குறிப்பாக யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு வெளிவரும் அச்சு ஊடகமாகிய 'உதயன்' பத்திரிகையின் பணி பரந்து விரிந்ததொன்றாகும். ஊடக தர்மத்தைப் பின்பற்றி துணிச்சலோடு வெற்றி நடை போடுகின்ற ஒரு ஜனரஞ்சக நாளிதழாக 'உதயன்' விளங்குகின்றது. தேசியச் செய்திகளோடு வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களினதும் செய்திகளுக்கு முதன்மை கொடுத்து வெளிவரும் ஊடகமாக 'உதயன்' மிளிர்கின்றது. வாரநாளிலும் வார இறுதி நாளிலும் முறையே வெளிவரும் 'புதன்பொய்கை', 'சஞ்சீவி' எனும் உதயனின் விசேட பதிப்புகள் வாசகர்களுக்குப் பெருவிருந்து. இந்த நாட்டில் சிறுபான்மை இன மக்களுக்கான குறிப்பாகத் தமிழ் மக்களுக்கான விடுதலையை முன்னிறுத்தி தனது கொள்கையை வகுத்து அதன் பாதையில் பயணிக்கும் உதயனின் பயணம் இன்னும் பல்லாண்டுகள் தொடர வேண்டு.ம்

**எம்.ஷாந்தன்**
*சத்தியகீர்த்தி ஆசிரியர் 'காந்தியம்'*
*அகில இலங்கை காந்திசேவா சங்கம்*

## சவால்களை சந்தித்து மீண்டவன்



உதயனின் 39ஆவது அகவை நாளில் தமிழ்கூறும் நல்லுலகம் சார்பில் வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.
நான்கு தசாப்தங்கள் பல்வேறு எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் உதயன் மேற்கொண்ட பணிகள் அளப்பெரியன. சவால்கள் பலவிதம். ஆனால் எந்தச் சவால்கள் மத்தியிலும் தொடர்ந்து வீறு கொண்டு உதயன் நடைபோடுவான் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்துகிறோம்.

**றொபேட் பீரிஸ்**
தலைவர்
மன்னார் றொட்டறி கழகம்

## வலி சுமந்த மக்கள் குரல்

வலி சுமந்த மக்களின் குரலாக உண்மையை உள்ளபடி துணிகரத்துடன் ஈழத்திலும் புலதேசமெங்கும் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கும் உதயன் தனது 39ஆவது ஆண்டில் கால் பதிக்கின்றான் என்பதனையிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ச்சியாக ஈழத்தில் உன் பணி மிடுக்குடன் தொடர வேண்டும். எத்தனை தடைகள் வரினும் அத்தடைகளை தாண்டும் படிகளாக மாற்றி உண்மையின் உறைவிடமாகவும் சேவையின் முதலிடமாகவும் உன் எழுதுகோல் வெற்றி நடைபோட வாழ்த்தி நிற்கிறேன்.

**கணபதி பிரசாந்த்**
மேலாளர்
சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கு
நிறுவனம் எக்டோ

## ஒளிரும் கைவிளக்கு



நாடதனை வழிக்குக் கொண்டு வருவதில்
ஊடகமதின் பங்கு அளப்பரியது...

தேடுதற்கரிய செய்திகளைத் தொகுத்துத் தருவதில்
திகழ்கின்றான் உதயன் தினமும்...



ஊடுருவி பட்சமோடு உலகை
உறைக்க வைக்கிறான் பட்சியில்...

ஒரு குருவியும் தப்ப முடியாது கட்சியிலும்
அருமையாய் மணந்து பிடிக்கும் பட்சிலும்...

எந்தையும் தாயும் கூடிக் குலாவிய
சொந்தப் பத்திரிகை உதயன், அடடா!

விந்தையாம் 39 என்பது கைவிளக்கு எமக்கு
விடியும் போதே வெளிச்சம் தருகிறது...

உண்மை நேர்மை அஞ்சாமை என்பதை
உரக்க உரைக்க கொழும்பு கண் திறக்கும்...

பெண்ணுரிமை, பிஞ்சுகள், சிறுவர் உரிமைக்காய்
புதன் பொய்கை சஞ்சீவி பல்லவி தொடுக்கும்...

மண்ணுக்கும் உரமாய் விண்ணுக்கும் வரமாய்
மாபெரும் சக்தியாய் வெளிவரும் உதயனே வாழி...

**கலாபூஷணம் கே.எஸ்.சிவஞானராஜா**
உதயனின் பெருமைமிகு வாசகர்
படைப்பாளர், எழுத்தாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களின் இதயத்தில் ஆழப்பதிந்தவன் உதயன்



ஜனநாயக நாட்டின் உயிர் நாடியாக ஊடகம் இன்று மாறிவிட்டது. ஊடகமின்றி உலகம் இல்லை என்பதாக இன்று ஊடகங்கள் மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளன. உதயன் வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு வெளிவந்தாலும், அதனது அகன்ற பார்வையால் தமிழ் பேசும் மக்களின் இதயத்தில் ஆழப்பதிவினை கொண்டாயிற்று.

தற்போதைய நவீன தகவல் தொடர்பாடல்களுக்கு மத்தியிலும் அச்சு வடிவில் மக்கள் பிரச்சினைகள் மட்டுமல்லாமல் அன்றாடம் மக்களின் தீர்வினையும் கொண்டுவரும் இணைப்புப் பாலமாக உதயன் செயற்படுவதை இந்த தருணத்தில் நினைவு கூர்வது பொருத்தமாகும். கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியில் ஓர் உடன்பாட்டினை எட்டும் செயற்பாட்டுடன் அனைத்து மக்களையும் ஈர்க்கும் நடப்புத் தரவுகள் என பலதையும் தாங்கி வாசகர்களின் தேவைகளுக்கமைய பயணித்தமை இத்தனை வருடங்கள் நின்றுபிடிக்க மிகவும் முக்கியமரன காரணிகளில் ஒன்றாகும். உதயன் பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவிய நிறுவனத்தின் நிறுவுநர், நிறுவனத்தின் பணியாளர்கள், செய்தி ஆசிரியர்கள், மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கு ஒரு வாசகன் என்ற வகையில் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**றிசாத் பதியுதீன்,**
நாடாளுமன்ற உறுப்பினர்.
தலைவர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்.

## மலையக மக்களுக்கான உறவுப் பாலம் உதயன்



தமிழ் பேசும் மக்களின் தனிப்பெரும் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும், வடக்கு மண்ணில் இருந்து வெளியாகும் உதயன் நாளிதழ், தனது பயணத்தை இதே வேகத்தில் தொடர்ந்து வீறுநடை போட வேண்டும்.

போர் காலத்திலும், அதன் பின்னரான சூழ்நிலையிலும் பல சவால்களுக்கு மத்தியில் மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக வெளிவந்துக்கொண்டிருக்கும் உதயனின் ஊடகப் பணியை பாராட்டியே ஆக வேண்டும். வடக்கு மற்றும் மலையக தமிழர்களுக்கிடையிலான உறவுப் பாலமாக உதயன் திகழ வேண்டும் என்பதுடன், மலையகத் தமிழர்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைப்பதற்கான நகர்வுகளுக்கு முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன். உதயன் நிறுவனம் சார்ந்த அனைவருக்கும் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். உண்மையை உரத்துக்கூறும் ஊடகப்பணி தொடர எனது வாழ்த்துகள்.

**ஜீவன் தொண்டமான்,**
நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு
அபிவிருத்தி அமைச்சர். பொதுச்செயலாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மண்ணின் பெருமைகாக்க மனப்பூர்வ வாழ்த்துகள்!

எமது இனம் பல இன்னல்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையிலும் எமது மண்ணின் பெருமைகாக்கும் உதயனின் பணி தொடரட்டும். 38 ஆண்டுகளை பூர்த்தி செய்து 39ஆவது ஆண்டிலும் உதயன் வெற்றியுடன் ஒலிக்க எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க.சிவகரன்**
பிரதேச செயலர்
தீவகம் தெற்கு (வேலணை)



## தடைகளைத் தகர்த்து தன்னை மெருகேற்றியவன்

கடந்த 38 ஆண்டுகளாக உதயன் பத்திரிகை பல நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள், சிரமங்களுக்கு மத்தியில் சேவையாற்றிவருகின்றது. அத்தடைகளை எல்லாம் வெகு இலாவகமாகத் தகர்த்தெறிந்து இன்றும் புதுப்புது மெருகுடன் உதயன் மிளிர்ந்த வண்ணமுள்ளான்.
உதயன் பத்திரிகை சிறு வயதிலிருந்தே எமது வாசிப்பு பழக்கத்தை தூண்டியது என்றால் மிகையாகாது. சிறுவர்கள் பெரியவர்கள் என அனைத்து தரப்பினரையும் உள்வாங்கும் விதத்தில் செய்திகளை வெளியிட்டு வருவது பெருமைக்குரிய விடயமாகும். எதிர்காலத்திலும் மக்களின் சமூக பொருளாதாரம் உள்ளிட்ட விடிவிற்காக உதயன் உழைக்க வேண்டும் என வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**தாரணி கஜரூபன்**
செயலாளர், நகரசபை,
பருத்தித்துறை



## மக்களுக்காக நின்று பணிசெய்யும் ஊடகன்

நீண்ட நெடிய காலமாக தமிழ் மக்களின் இதயங்களை வென்ற உதயன் பத்திரிக்கையானது புதிய ஆண்டில் காலடி எடுத்து வைப்பது மிகுந்த மகிழ்ச்சியை எனக்கு அளிக்கின்றது.
உதயன் பத்திரிகையானது மக்களுடன் இணைந்த வகையிலேயே இன்றுவரை தனது பயணத்தைத் தொடர்ந்த வண்ணமுள்ளது. பல தசாப்தங்களாக நடுநிலைமையாக நின்று மக்களுக்கு பல செய்திகளை வழங்குவதில் உதயன் பத்திரிகைக்கு நிகர் அதுவே. நவீன கால தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் இணையத்தளம் ஊடகவும் தனது சேவையை செவ்வனே செய்து வருகின்றது. உதயனின் பயணம் மேலும் வெற்றிகரமாகத் தொடரவேண்டும்.

**தி.தியாகசந்திரன்**
செயலாளர்
வேலணை பிரதேச சபை





## உதயன் பயணம் தொடரட்டும்

உண்மை நிகழ்வுகளை மக்களுக்கு நடுநிலையுடன் வழிநின்று எடுத்துரைக்கும் உதயன் பத்திரிகை 39ஆவது ஆண்டுக்குள் காலடி பதிப்பதையிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகிறேன். உதயன் தனது சீரிய பணியை மென்மேலும் சிறப்பிக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி எழிலழரசி அன்ரன் யோகநாயகம்**
பிரதேச செயலர், நல்லூர்

பல தசாப்தங்களை கடந்தும்
உன் சேவை தொடர வாழ்த்துகின்றோம்


ஓடர் நகைகளை
உத்தரவாதத்துடன் அசல்
22 கரட் நகைகளைத்
தெரிவுசெய்ய இன்றே நீங்கள்
நாடவேண்டிய இடம்
லலிதா
ஜுவல்லறி
இல.L 75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2863, 077 618 3302
இல.145, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 2462, 077 732 2219

39ஆவது அகவை காணும் "உதயன்" முடிவிலா அகவை காண வாழ்த்துகின்றோம்
சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தவணை முறைக்கட்டணம் மற்றும் விரைவாக சாரதி அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம்
உரிமையாளரின் தொடர்புக்கு
Reg.No: DS882
0777 226 247 / 077 614 0361
email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com


தலைமைக்காரியாலயம்
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 7678
077 949 5706 / 077 320 8883
கிளைக் காரியாலயங்கள்:
• யாழ் மத்தி (Town)
T.P: 021 222 8004
077 998 6247
074 254 2264
• புன்னாலைக்கட்டுவன்
T.P: 021 224 5001
076 384 0684
• கச்சேரி நல்லூர் வீதி
(யாழ்ப்பாணம்)
T.P: 021 221 7578
077 434 3149
077 990 5414
• பண்டத்தரிப்பு
T.P: 021 225 2333
077 434 3798
• நெல்லியடி
T.P: 021 226 0999
077 261 2446
• மல்லாகம்
T.P: 021 224 3393
077 343 6622
• வேலணை :
T.P: 021 221 5472
077 368 9319

பல தசாப்தங்களை கடந்தும்
உன் சேவை தொடர வாழ்த்துகின்றோம்
செல்வி
நகைஅகம்
CHELVI Nakai Agam
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers of Gold Jewels


22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு
உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.
T.P: 021 222 9441
1/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthuriar Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org